மாறனலங்காரம்

[பொருளணியியலுரை]

மதுரைத் தமிழ்ச் சங்கம்

(1969)

திருக்குருகைப் பெருமாள் கவிராயர்

இயற்றிய

மாறனலங்காரம்

[பொருளணியியலுரை]

மதுரைத் தமிழ்ச் சங்கம்

தமிழ்ச் சங்கத் தெரு, மதுரை-1.

முதற்பதிப்பு: 1915
இரண்டாம் பதிப்பு: 1929
மூன்றும் பதிப்பு: ஜுலை, 1969

உரிமை பதிவு.

விலை ரூ. 2-75

MAARANALANGARAM

(PORULANIYIYALURAI)

Published by :

MADURAI TAMIL SANGAM
Tamil Sangam Street, MADURAI-I.

விவேகாநந்தா அச்சகம், மதுரை:-69.

பதிப்புரை

தமிழிலுள்ள அணியிலக்கணங்களுள் 'மாறனலங்காரம்' என்பதுமொன்று. இது, நம்மாழ்வாரை நாயகனாகக்கொண்டு பாடப்பெற்றது. ஏறத்தாழ நானூறு ஆண்டுகட்கு முன் வாழ்ந்த திருக்குருகைப் பெருமாள்கவிராயர் என்பவரால் இயற்றப்பட்ட இந்நூல், மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதத் தேர்வுக்கும், சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் தேர்வுக்கும் முன்னர்ப் பாடமாக வைக்கப்பெற்றிருந்தது. இதன் முதற் பதிப்பு 1915ஆம் ஆண்டிலும், இரண்டாம் பதிப்பு 1929-ஆம் ஆண்டிலும் இச்சங்கத்தாரால் வெளியிடப்பெற்றது. இப்போது மதுரைப் பல்கலைக் கழகத்தார், இந்நூலில், பொருளணியியலின் 1 முதல் 15 அணிகளை வித்துவான் தேர்வுக்குப் பாடமாக வைத்துள்ளனராதலால், இப் பகுதி மட்டும் 3-ஆம் பதிப்பாக வெளிவருகின்றது.

ஆசிரியப் பெருமக்கட்கும் மாணவச் செல்வங்கட்கும் இந்நூல் பெரிதும் பயன்படும் என்று நம்புகின்றோம்.

மதுரை,
23—7—1969.

கி. பழநியப்பன்,
செயலர்.

முதற்பதிப்பு: 1915
இரண்டாம் பதிப்பு: 1929
மூன்றாம் பதிப்பு: ஜூலை, 1969
உரிமை பதிவு.

விலை ரூ. 2-75

MAARANALANGARAM

(PORULANIYIYALURAI)

Published by :

MADURAI TAMIL SANGAM
Tamil Sangam Street, MADURAI-I.

விவேகாநந்தா அச்சகம், மதுரை:-69.

பதிப்புரை

தமிழிலுள்ள அணியிலக்கணங்களுள் 'மாறனலங்காரம்' என்பதுமொன்று. இது, நம்மாழ்வாரை நாயகனாகக்கொண்டு பாடப்பெற்றது. ஏறத்தாழ நானூறு ஆண்டுகட்கு முன் வாழ்ந்த திருக்குருகைப் பெருமாள்கவிராயர் என்பவரால் இயற்றப்பட்ட இந்நூல், மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதத் தேர்வுக்கும், சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் தேர்வுக்கும் முன்னர்ப் பாடமாக வைக்கப்பெற்றிருந்தது. இதன் முதற் பதிப்பு 1915ஆம் ஆண்டிலும், இரண்டாம் பதிப்பு 1929-ஆம் ஆண்டிலும் இச்சங்கத்தாரால் வெளியிடப்பெற்றது. இப்போது மதுரைப் பல்கலைக் கழகத்தார், இந்நூலில், பொருளணியியலின் 1 முதல் 15 அணிகளை வித்துவான் தேர்வுக்குப் பாடமாக வைத்துள்ளனராதலால், இப் பகுதி மட்டும் 3-ஆம் பதிப்பாக வெளிவருகின்றது.

ஆசிரியப் பெருமக்கட்கும் மாணவச் செல்வங்கட்கும் இந்நூல் பெரிதும் பயன்படும் என்று நம்புகின்றோம்.

மதுரை,
23—7—1969.

கி. பழநியப்பன்,
செயலர்.

3ரமேசு

மாறனலங்கார வரலாறு

அலங்காரமென்பது செய்யுளுக்கு அழகுசெய்யும் இலட்சணங்களைக் கூறும் சாத்திரம். இவ்வலங்காரசாத்திரத்தை வடமொழியாளர் மிகவும் விரும்பிக் கற்பர். இந்தச் சாத்திரத்தின் பெருமை அக்நிபுராணத்திற் பேசப்பட்டுள்ளது. வாமநசூத்திரம், காவ்யாதர்சம், சரசுவதீகண்டாபரணம், காவ்யப்ரகாசம், அலங்காரசர்வச்வம், ரசமஞ்சரி, சாகித்யதர்ப்பணம், ப்ரதாபருத்ரீயம், அலங்காரகௌசுதுபம், சந்திராலோகம், குவலயானந்தம், சடவைரிவைபவதிவாகரம் (இது நம்மாழ்வார்விடயமான வடமொழி மாறனலங்காரம்) முதலிய நூற்றுக்கணக்கான வடமொழிநூல்கள் அலங்காரத்தைப் பற்றிச் சொல்லுபவைகள். தமிழில் முதன்முதல் அணியைப் பற்றித்தெரிவிக்கும் நூல் தொல்காப்பியம். தொல்காப்பியர் கூறுவது உவமை ஒன்றுதான். அவர் அகத்திணையியலில் ஏனையுவமம் உள்ளுறையுவம மிவைகளை விளக்கி உவமவியலில் உவமத்தைத் தொழில், பயன், வடிவு, வண்ணம் எனப் பிரித்து விரித்தெழுதியிருக்கிறார். தொல்காப்பியர் காலத்து உவமையொன்றே, அணியாகக் கருதப்பட்டது. பிற்காலத்தார் அதிலிருந்து பல அணிகள் கற்பித்துக்கொண்டனர். நச்சினார்க்கினியரும் உவமமொன்றனையே அணியாகக் கருதினர். இவர் தம் காலத்திற் பல அணிவிகற்பவேறுபாடுகளுடன் வெளிவந்த ஒரு அணி நூலைத் தமது தொல்காப்பியவுரையிற் குறை கூறுகின்றனர். இவர் உவமவிகற்பங்களுக்கு எடுத்துக்காட்டிய உதாரணச் செய்யுள்கள்சில, தண்டியலங்காரவுரையில்வேற்றுமையணி, தற்குறிப்பேற்றவணிமுதலியவைகளுக் குதாரணமாகக் காட்டப்பட்டிருக்கின்றன. நிரனிறை, சமம் முதலியவற்றை உவமத்தின்விகற்பமாயே கொண்டார் நச்சினார்க்கினியர். இப்படி உவமமே பலவணிகளினுற்பத்திக்குங் காரணமா

யிருந்தது என்பதை வடமொழியாளரும் சம்மதிக்கின்றனர். அப்பையதீட்சிதர் தாமெழுதிய சித்திரமீமாம்சையென்னுங் கிரந்தத்தில் இவ்விடயத்தை ஒப்புக்கொண்டிருக்கிறார். அச்சுலோகத்தின் மொழிபெயர்ப்பு வருமாறு:

"உவமை யென்னுந் தவலருங் கூத்தி
பல்வகைக் கோலம் பாங்குறப் புனைந்து
காப்பிய வரங்கிற் நவினுறத் தோன்றி
யாப்பறி புலவ ரிதய
நீப்பறு மகிழ்ச்சி பூப்ப நடிக்குமே" என்பதாம்.

இவ்வணியிலக்கணமானது தொல்காப்பியத்திற் பொருளதிகாரத்திற் சொல்லப்பட்டிருக்கிறது. அக்காலத்தில், தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள் என மூன்று பாகமாகத்தான் பிரிக்கப்பட்டிருந்தது. "எழுத்துஞ்சொல்லும் பொருளுநாடிச் செந்தமிழியற்கைசிவணிய நிலத்தொடு, முந்துநூல் கண்டுமுறைப்படவெண்ணி" என்னும் தொல்காப்பியப் பனம்பாரர்பயிரத்தால், தொல்காப்பியத்திற்கு முதனூலும் இப்பாகுபாடே கொண்டிருந்ததெனத் தெரிகிறது. இறையனாரகப்பொருளுரையை யுற்றுநோக்கும்போது, 'யாப்பு', தனியுறுப்பாகக் கருதப்பட்டு, தமிழிலக்கணம் நான்கு பிரிவாகக்கருதப்பட்டதென்று தோன்றுகிறது. அதன்பின்புதான் 'அணி' தனியுறுப்பாகக்கொள்ளப்பட்டு, தமிழிலக்கணம், எழுத்து சொல் பொருள் யாப்பு அணியென ஐந்து பிரிவுடையதாக வகுக்கப்பட்டது. இவ்வைந்திலக்கணமும் ஒருங்கே கூறும் நூல்கள் வீரசோழியம் இலக்கணவிளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் என்பனவாம். இவை ஒவ்வொன்றிலும் அந்தந்தக்கிரமத்தில் அணியிலக்கணம் கூறப்பட்டுள்ளது. வீரசோழிய அணிகளுக்கு முதனூல் ஆசார்யதண்டியியற்றிய வடமொழிக் காவ்யாதர்சம். இலக்கணவிளக்கமுதலிய மற்ற இலக்கணங்

களின் அணியிலக்கணங்களுக்கு முதனூல், தமிழ்த் தண்டியலங்காரமும் அதன் உரைகளுமாம்.

தனியாய் அணியிலக்கணமாத்திரங்கூறும் நூல்கள் அணியியல் அல்லது அணிநூல், தண்டியலங்காரம், மாறனலங்காரம் என்பன. இவற்றுள் அணிநூலைப்பற்றி விசாரிப்போம். யாப்பருங்கலவிருத்தியில் "உருவகமாதிவிரவியலீறு வரும் .... அலங்காரமென்பது அணியியலாதலின்" என்று கூறியிருப்பது தண்டியலங்கார அணிமுறைவைப்புக்குப் பொருத்தமில்லாததால் வேறு அணிநூலைக் குறித்ததாக வேண்டும். நேமிநாதவிருத்தியில், "புனையுறுசெய்யுட் பொருளையொருவழி, வினைநின்று விளக்கினதுவிளக்கெனப் படுமே", "முதலிடைகடையென மூவகையான" என்பன அணியியல் ஆகலின்" என்றுள்ளது. இதில் இரண்டு சூத்திரத்தாற் குறித்த விளக்கணி தமிழ்த் தண்டியலங்காரத்தில், தீபகமென்ற பெயரால் ஒரே சூத்திரத்திற் கூறப்பட்டிருக்கிறது. ஆதலால் இவ்விருத்திகாரர் குறித்த அணியியல் என்னும் நூல் தண்டியலங்காரத்தினும் வேறாக வேண்டும். நச்சினார்க்கினியர் தொல்காப்பியவுரையில் "இனி இவ்வோத்தினிற் கூறுகின்ற உவமங்களுட் சிலவற்றையும் சொல்லதிகாரத்தினுள்ளும் செய்யுளியலுள்ளுஞ் சொல்லுகின்ற சில பொருள்களையும் வாங்கிக்கொண்டு மற்றவை செய்யுட்கண்ணே அணியாமென இக்காலத்தாசிரியர் நூல்செய்தாருமுளர்" எனக் கூறி அவ்வணிநூலுக்குத் தமது சம்மதமின்மையையும் தெரிவிக்கிறார். இவ்வாக்கியத்திலுள்ள விடயம் வடமொழியிலிருந்து பெயர்த்த தண்டியலங்காரத்தைக் குறிக்காது வேறு அணிநூலையேகுறித்ததாகவேண்டும் பரிமேலழகர் பட்சாந்தரமாய்க் கூறும் நுவலாநுவற்சி, ஒட்டு என்னும் பரியாயப் பெயர்கள் முறையே வீரசோழியத்திலும் தண்டியலங்காரத்திலும் காணப்பட்டபோதிலும் அவர் தன்மதமாகக் கூறிய பிறிதுமொழிதல் என்பது அணிநூலுட் கண்டதாகவிருந்தாலுமிருக்கலாம். இப்

படியே வீரசோழியம். தண்டியலங்காரங்களுட் காணப்படாத சில அணிகளின் பரியாயப்பெயர் இவருரையிற் காணப்படுகின்றன. இன்னோரன்ன காரணங்களால், தண்டியலங்காரத்தினும் வேறாய அணிநூல் அல்லது அணியியலென்ற நூலொன்று இருந்து வீழ்ந்திருக்க வேண்டுமென்றேற்படுகிறது.

ஆனால், தண்டியலங்காரத்திற்கே அணியியலென்னும் பெயர் இருந்திருக்கிறது. அணியியலென்ற பெயருடன் அடியார்க்குநல்லாரும் மாறனலங்கார வுரையாசிரியரும் (மா-அ-சூத் 25-ன் கீழ்) எடுத்துக்காட்டி யிருக்கிற முறையே சூத்திரம் இரண்டு மொன்றும் தண்டியலங்காரத்துட் காணப்படுகின்றன. இத் தண்டியலங்காரச் சூத்திரங்கள் அணியியலென்னும் நூலிலிருந்து முன்னோர் மொழியாக எடுத்துத் தண்டியலங்காரத்துட் சேர்க்கப்பட்டிருக்கலாமென்று கருதுவதற்கு இடங்கொடுக்கின்றன.

இனி, 'மாறனலங்காரம்' என்பதைப் பற்றி விசாரிப்போம். மாறன் என்பது பாண்டியரைக் குறிக்கிற பழம் பொதுப்பெயர்களுள் ஒன்று; இங்கு ஆழ்வார்களுட் சிறந்த நம்மாழ்வாரைக் குறிக்கிறது. இவர் பாண்டியரது அரசாட்சிக்குட்பட்ட பொருநையாற்றின் அடைகரையாகிய திருவழுதிவளநாட்டுக்குரிய சிற்றரசர், மாறன், காரிமாறன், சடகோபன், திருவழுதிவளநாடன், பொருநற் (தாம்ரபர்ணி) சேர்ப்பன், பொருநற் சங்கணித்துறைவன், மகிழ்மாலைமார்பினன் முதலான பெயர்கள் இயல்பாயும் காரணம் பற்றியும் இவருக்கு வழங்கிவந்தனவென்று திருவாய்மொழியால் தெரிகிறது. இவர் பிறந்தபொழுதே தொடங்கித் திருமாலினிடத்து விசேட பக்தியுடையராய் உண்ணுஞ் சோறு, பருகுநீர் தின்னும் வெற்றிலையுமெல்லாங் கண்ணனே யென்றத்யவசித்துத் தத்தேக த்யானபரராயிருந்து நான்கு வேதங்களையும் திருவிருத்தம் திருவாசிரியம் பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி என்னும் நான்கு தமிழ்ப்

பிரபந்தங்களாக லோகோச்சீவநார்த்தமாக வெளியிட்டருளினர். இவரை அக்காலத்திலிருந்த மதுரகவி முதலான பிராமண சிரேச்டர்களும் பிற்காலத்துவந்த நாதமுனி, யாமுநாசார்யர்; ராமாநுசர் முதலான பிராமணசிரேச்டர்களும் ஆசார்யராக மதித்து நேரிலும் விக்ரகரூபமா யெழுந்தருளப்பண்ணியும் ஆழ்வார்களுட் டலைமையானவராய்க்கொண்டு ஆராதித்துவந்தனர். வடநாட்டிலும் துளசிதாசர் முதலானோரால், பாராட்டிப் பூசிக்கப்பட்டார் இவ்வாழ்வாரெனின், இவரைப் பற்றி நாம் அதிகமா யெழுத வேண்டியதில்லை. இந்நூலாசிரியர் இவ்வாழ்வாரிடத்து ஏழாட்காலும் பழிப்பிலாத் தொண்டுபூண்டு மறந்தும் புறந்தொழாத வமிசத்துட்பிறந்த வைணவ மதாபிமானமுள்ளவரானபடியினாலே, தண்டியலங்கார முதலிய நூல்கள் அரசர் முதலியவர்களைப் பற்றிக் கூறி லெளகிக திருட்டாந்தங்களுடையனவா யிருப்பதுகொண்டு, தா மிந்த அலங்கார நூலை யியற்றி இதை ஆழ்வார்க்குச் சமர்ப்பித்து உதாரணங்களை ஆழ்வார் விடயமாகவும் திவ்யதேசத்து எம்பெருமான்கள் விடயமாகவும் வைணவபரமாய்ச் செய்து சேர்த்தருளிக் 'காரிதந்தருள் கலைக்கடலியற் பெயர்புனைந்து' (மா-அலங். பா) 'திருமகிழ்ப்பரமதேசிகன் பெயரால்' (மா-அகப்.) இந்நூலை வெளியிட்டருளினர். ஆகவே மகிழ்மாறன் அல்லது நம்மாழ்வாரை நாயகனாகக் கொண்ட அலங்கார சாத்திரமாகுமிது.

வடமொழியிலும் நம்மாழ்வார் விடயமான ஒரு அலங்கார சாத்திரம் 'சடவைரி வைபவதிவாகரம்' என்ற பெயருடன் குவலயாநந்தத்தை யநுசரித்ததாய் விளங்குகிறது; கூடிய சீக்கிரம் அச்சில் வரும். இத்தமிழணி நூல், பாயிர இலக்கணத்தை முதலிற் பெற்று, அது தவிரப் பொதுவியல், பொருளணியியல், சொல்லணியியல், எச்சவியல் என நான்கு பகுப்புடையதாயிருக்கிறது.

இந்நூற் பொதுப்பாயிரத்துள் "வெள்ளையினகவலின் விளம்பலு மரபே" என்றபடி இந்நூலாசிரியர் பொதுவியலை மாத்திரம் வெண்பாவா லமைத்திருக்கிறார். அகவலின்வெள்ளை யினறைக வென்று முந்து நூல் விதித்தமையுளவாகவும், விதியாது நீக்கிய கட்டளைக் கலித்துறை ஆசிரிய விருத்தமென்னும் பாவினத்தாற் பின் பிலக்கணநூல் செய்தோர் இலக்கணங்களைக் கூறியது போலவும், சிலப்பதிகாரத்திற் சில காதைகள் பாவினங்களாற் பாடியது போலவும் இவரும் முதலியலை வெண்பாவாலும் மற்றவற்றை நூற்பாவாலும் கூறினர்.

தண்டியலங்காரத்தில் மேற்கூறிய நான்கியலுக்கும் சேர்ந்த சூத்திரங்கள் 125 தான். தண்டியலங்கார உதாரணச் செய்யுள்களிலும் மாறனலங்கார உதாரணச் செய்யுள்கள் மிகவுமதிகம். ஆகவே தண்டியலங்காரத்திலும் மாறனலங்காரம் மிக்க விரிவுடையது. தண்டியலங்காரம் காவ்யாதர்சத்தைப் பின்பற்றின மொழிபெயர்ப்பு. மாறனலங்காரம், தொல்காப்பிய முதலியவற்றின் கருத்துக்களையும். "முதுமொழித்தண்டி முதனூலணியையும், புதுமொழிப் புலவர் புணர்த்தியலணியையும், தனது நுண்ணுணர்வாற்றருபலவணியையும், மனுத்துறத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும், சதுர்பெறவிரண்டிடந் தழீஇயசார்பெனலாய்" விளங்குகிறது. ஆயினும், இது தண்டியலங்காரத்தின் வழிநூலாகும். இதனுரையில் வடமொழித் தண்டியாசிரியரை யபூர்வமா யோரோரிடத்தும், தமிழ்த் தண்டியாசிரியரை அடிக்கடி பல இடங்களிலும் சுட்டியிருக்கிறார். இந்நூலாசிரியர் சில இடங்களிற் சில நியாயம் பற்றிச் சிறிது வேறுபடுவதுமுண்டு. எடுத்துரைப்பிற் பெருகுமாதலால் 84-ஆம் சூத்திரவுரை முதலிய இடங்களிற் கண்டு கொள்க.

தண்டியலங்காரத்துட் கூறிய பொருளணிகளின்றொகை 35. இந்நூலுட் கூறிய அணிகளின்றொகை 64. இந்நூலார்,

தண்டியாசிரியர் கூறிய நுட்பமென்னுமலங்காரம் பரிகரத்து ளடங்குதலா லதைக் குறைத்தார். சொல்லிலக்கணத்திலும் பொருளியலிலும் புறத்திணையியலிலுங் கூறியுள்ளவும் மற்ற அணிநூல்களுட் கூறப்படாதனவுமாகிய பூட்டுவில், இறைச்சிப் பொருள்கோள், பொருண்மொழியென்னும் மூன்றையும் செய் யுட்கணிசெய்தலால் அணியுட் சேர்த்து மிகுத்தார். வகை முதலடுக்கு, இணையெதுகை, உபாயம், உறுசுவை, புகழ்வதி னிகழ்த லென்னுமைந்தும் அழகெய்துவதாயிருத்தலின், இலக் கியங்கண்டதற் கிலக்கண மியம்புதலாயிவற்றையு மிகுத்தார். தண்டியாசிரியர் உவமவிரியுட் சேர்த்தும், ஏனையாசிரியர் வேறு வேறாகப் புணர்த்துமிருக்கிற ஐயம், தெரிதருதேற்றம், பொது நீங்குவமை என்பவற்றுள் ஐயத்தையும், தெரிதருதேற்றத்தை யும், ஏனையாசிரியர்மதமுடன்பட்டுப் பிறிதோரணியாக்கியும், பொது நீங்குவமையைத் தண்டியாசிரியர்மதம்பற்றி யுவமை யுட்புணர்த்தும், தன்கோட் கூறலென்னுமுத்தியானும், தன் குறியிடுதலென்னுமுத்தியானும், பின்னோன் வேண்டும் விகற் பங்கூறி முடிக்கும் வழிநூலிலக்கணம் பற்றியும் இவ்வாறெல் லாம் முடித்தார். இவ்வாறு சூக்குமமாய்க் காணப்படும்வேறு பாடுகளுக்கெல்லாம் மேற்கண்டபடியே கொள்ளவேண்டும்.

தண்டியாசிரியர் ஒரே சூத்திரத்திற் பன்னிரண்டு சித்திர கவிகளுக்குப் பெயர்மாத்திரங் கூறிச்செல்ல, இந்நூலார் முப் பத்திரண்டு சித்திர கவிகள்கூறி அவற்றுக்கு இலக்கணமுங் கூறிச்செல்கிறார். 'தேவா' 'மாதவனே' 'தண்மதி' 'சேடுறு' என்று தொடங்குகிற சக்கரபெந்தச் செய்யுள்களில் 'திருமலை', 'தென்குருகூர்', 'வடமலையப்பன்', 'சீராமராமசெயம்', 'தருமமேகைதரும்' என்பவைகளும் இரதபெந்தத்தில் 'நாரா யணாயநம', என்பதும், காதைகரப்பிற் 'கொல்லான்புலாலை மறுத்தானை' என்னுங் குறளும் அழகாயமைக்கப்பட்டுள்ளன.

தண்டியலங்காரவாசிரியர் தாமே மூலமும் உதாரணமுங் காட்டினாற்போல, இந்நூலாசிரியர் தாமே உதாரணச் செய்யுள்

களும் செய்தமைத்தாரென்று தோன்றுகிறது. "இந்நூலாசிரியர் இவ்வுதாரணம் யாண்டுப் பெற்றாரோவெனின்" என்று உரையில் வருவது கொண்டும் பிற ஆதாரங்கொண்டு மிவ்வாறு ஊகிக்க வேண்டியதாயிருக்கிறது. இந்நூலிற் பரிபாடல், கலித்தொகை, பத்துப்பாட்டு, புறநானூறு. குறுந்தொகை, அகநானூறு, குறள், நாலடி, சிந்தாமணி சிலப்பதிகாரம், வெண்பாமாலை, யாப்பருங்கலம், திருவாய்மொழி முதலிய பழைய நூல்களிலிருந்து மேற்கோள்காட்டப் பட்டுள்ளன. இந்நூலாசிரியர் செய்தருளிய திருக்குருகாமான்மியம்; நம்பெருமாள்மும்மணிக்கோவை, மாறன்கிளவிமணிமாலை, இந்நூலுரையாசிரியர் செய்தருளியதாக நினைக்கப் படுகிற மாறன்பாப்பாவினம் முதலிய வைணவ நூல்களிலிருந்தும் அடிக்கடிமேற்கோள்கள்காட்டப்பட்டிருக்கின்றன. திருப்பதிக்கலம்பகம் என்னும் நூலிலிருந்தும் மேற்கோள் காட்டப் பட்டிருக்கிறது. அந்நூலைப் பற்றி ஒன்றும் தெரியவில்லை. மற்றைய உதாரணச் செய்யுள்களெல்லாம் நம்மாழ்வார் விடயமாகவும், திவ்யதேசத்து எம்பெருமான்கள் விடயமாகவும் வெண்பா முதலிய பாப்பாவினங்களிற் பெரும்பாலும் அகப் பொருட் டுறைகளமையப்பெற்றனவாய் நூலாசிரியராற் செய்யப்பெற்றுச் சேர்க்கப்பட்டுள்ளன. இவ்வுதாரணங்களெல்லாம் கற்பனைக் களஞ்சியமாய்ச் சொற்சுவை பொருட்சுவை நிரம்பி அழகாயிருக்கின்றன. பெரும்பாலும் உதாரணச் செய்யுள்களுக்குத் திணையும் துறையும் கூறப்பட்டிருக்கின்றன. சில உதாரணங்களுக்குப் பொழிப்புரையும், சில வுதாரணங்களுக்குக் குறிப்புரையும் கூறப்பட்டுள்ளன. நன்னூலின் ஆரம்பத்துட் கூறியிருப்பதுபோல இந்நூலிலும் ஆரம்பத்திற் பொதுப் பாயிரத்திலக்கணம் மிக விரிவாயும் தெளிவாயுங் கூறப்பட்டிருக்கிறது.

இத் தமிழ்மணி நூலின் பொருளடக்கத்தையும் பெருமையையும் பின்வரும் நூற்பாவானும், வெண்பாவானும் ஒருவாறறிந்துகொள்க.

"ஆறெனத் தொகை வகையினில்விரித் தவற்றைத்
தேறமெய் பெறுநான் கெனத்தெரி செய்யுளும்
பாகமோர் மூன்றும் பயில்குணம் பத்து
மாகவெண் ணுன்கிரட் டியபொரு ளணியு
மடிமொழி யெழுத்தி னடுக்கின வாக
முடிவுற வகுத்த மூவகை மடக்கு
மூவினப் பாடன் முதலா முறைமையின்
மேவின விருபா னுறன்மே லாறென
விழுமிய மிறைக்கவிவி ரித்தபின் னெஞ்சிய
வழுவழு வமைதியு மிவையென வகுத்து
மொழிந்தவைம் மூன்றுடன் முற்று
தொழிந்தவுங் கோட லொள்ளியோர் கடனே".

"வாய்ந்த திருப்பதிநூற் றெட்டினையும் வாழ்த்தியே
யாய்ந்ததமிழ் மாற னணியெனப்பேர்—தோய்ந்துளதாற்
காண்டகுசீர் மற்றோ ரணியுங்க வின்புணர்க்க
வேண்டுமோ வீங்கிதற்கு மேல்".

சுமார் நூறு வருடங்களுக்குமுன் 'கர்னல் மெக்கன்சி' துரையவர்களால் மிக்க திரவியச் செலவு செய்து சேர்க்கப் பெற்று இப்போது துரைத்தனத்தாரிடமிருக்கும் சென்னை இராசாங்கப் புத்தகசாலையில் இந்நூலின் காகிதத் கையெழுத்துப் பிரதியொன்றிருப்பது, சில பெரியோர்களுக்குத் தெரிந்த விடயம். கிரந்தமந்தணகூடம்'(Tamil Museum) என்ற பெயர் வைத்துக்கொண்டு அநேக சாத்திரங்களை வெளியிடப் போவதாய் முன்னுக்குவந்த S. சாமுவேல்பிள்ளை என்பவர், சுமார் 55-வருடத்துக்குமுன், தாமச்சிட்ட 'தொல்காப்பிய நன்னூல் ஐககண்ட்ய, புத்தகத்தில் இந்நூலைப் பற்றிப் பிரத்தாபித்துள்ளார். மகா-ள-ள-ஸ்ரீ செல்வக்கேசவராய முதலியாரவர்களும் தாங்களியற்றிய தமிழ்ப் பாஷை விடயமான நூல்களில் இந்நூலைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சென்னையில் வசித்த வைணவ வித்வான்களாகிய மகா-ள-ள-ஸ்ரீ இராசகோபால பிள்ளையவர்கள் முதலியோர் இந்நூலை அச்சிட எண்ணிப் பொருண்

முட்டுப்பாட்டால் நின்றுவிட்டனர். முதன்முதல் வெளியான செந்தமிழ்ப் பகுதியினின்று, காலஞ்சென்ற ஸ்ரீமாந். பாண்டித்துரைத் தேவரவர்களும், முன்பு செந்தமிழ்ப் பத்திராசிரியராயிருந்த ஸ்ரீ உ. வே. ரா. இராகவையங்காரவர்களும் இந்நூலை அச்சிடுவதைச் சங்கத்தின் முதனோக்கங்களுளொன்றாகக் கொண்டிருந்தனரென்பது தெரிகிறது. எக்காரணங்களாலோ அவர்கள் எண்ணம் நிறைவேறவில்லை. இத்தகைய அரிய நூல்களை யச்சிட்டுத் தமிழகத்திற்குபகரித்து வரும் தமிழ்ச் சங்கத்தார்க்குத் தமிழபிமானிகள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

நூலாசிரியர்

பெயர்:— இவ்வரிய பெரிய நூலை இயற்றியவர் திருக்குருகைப் பெருமாள்கவிராயர். திருக்குருகைப் பெருமாள் என்றால், திருக்குருகையென்னும் ஆழ்வார்திருநகரிக்குத் தலைவரான நம்மாழ்வார் என்று பொருள். "திருக்குருகைப் பெருமாள்தன் திருவடிகள் வாழியே" என்பது அட்டகசம் அப்பிள்ளை அருளிச்செய்த நம்மாழ்வார் விடயமான வாழித்திருநாமம். இந்நூலாசிரியர் நம்மாழ்வாருடைய ஆத்தானகவிராயராதலால் அவருக்குத் திருக்குருகைப் பெருமாள் கவிராயரென்று பெயராயிற்று. இவருக்குச் 'சடையன்' என்னும் இயற்பெயருமுண்டு. 'சடகோபன்' என்பது சடையன் எனத் திரிந்தது போலும்.

தகப்பனார்:- இவருடைய தகப்பனார் பெயரும் 'திருக்குருகைப் பெருமாள் கவிராயர்' என்பதேயாம்.

சாதி:- வேளாளர். 'சிரகத்தார் வணிகன்' என்று பாயிரத்திலிருப்பதை நோக்க வேளாளரும் ஒருவகை வைசியவகுப்பிற்சேர்ந்தவரென்பது வெளியாகின்றது. ஆழ்வார்திருநகரிக் கோயிற் சத்தாவரண உத்சவங்களிற்படிக்கவேண்டிய 'திருப்

பணிமாலை' படிப்பவருக்கு ஏற்பட்ட சுதந்தரங்களைத் தெரிவிக்கும் கோயிற்கணக்கில் திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்றிருக்கிறது. அந்தச் சுதந்தரங்களை இப்போது வத்தராயிருப்பு ஆழ்வாரப்பபிள்ளை என்பவர் பெற்றுவருகிறது கொண்டு இந்நூலாசிரியர் இவரின் மூன்னோராயிருக்கலாமென்று சிலர் நினைக்கின்றனர். ஆழ்வாரப்பபிள்ளையின்பந்துவாகிய அமிர்தகவிராயரின் வம்சத்தில் 'திருக்குருகைப் பெருமாள்கவிராயர்'கள் சிலரிருந்திருக்கின்றனர். சென்னை ராசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலையிலுள்ள திருவரங்கத்தந்தாதியின் பழையவுரையெழுதிவைத்தவர் திருக்குருகைப் பெருமாள் கவிராயர். இவர் இந்நூலாசிரியரல்லர். இவர் 'மாறன்கோவை' இயற்றிய வேங்கடத்துறைவான்கவிராயர் வம்சத்தவராயிருக்க வேண்டும். இப்பெயரினர் 'O.K.S.' என்ற நவீனக்குறியால் வழங்கப்படுகிற திருநெல்வேலி ஜில்லா வைணவ வேளாள வகுப்பைச் சேர்ந்தவரென்று தெரிகிறது.

ஊர்:- திருக்குருகூர் என்னும் ஆழ்வார்திருநகரி. இவற்றிற்குப் பிரமாணம்:-

"பெருநிலம் புகழ்திருக் குருகைப் பெருமா
ளருள்குரு கூர்வரு மனகன் செழுந்தேன்
மருக்கமழ் சிரகத் தார்வணி கன்புகழ்த்
திருக்குரு கைப்பெரு மாள்கவி ராயன்
அருட்குணத் துடன்வளர் சடையன்
பொருட்டொடர் நவம்புணர் புலமை யோனே"

(மாறனலங்காரப்பாயிரம்)

"குருகையம் பதித்திருக் குருகைப் பெருமாள்
பொருவில்பே ரன்புடன் புரந்தருள் புதல்வன்
மருக்கமழ் சிரகத் தார்வணி கேசன்
திருக்குரு கைப்பெரு மாள்கவி ராசன்

அருட் குணத்தவர்புகழ்சடையன்
பொருட்டொடர்நவம்புணர்புலமையோனே''

(மாறனகப்பொருட்பாயிரம்)

''இருக்குமுதற் பனுவலினு லியற்றமிழ்தேர் நாவீற
னென்னு மேன்மை
யருட்புயலைப்புகழ்புலமைத் திருக்குருகைப் பெருமாள்பே
ரன்புகூருந்
தருக்குலவும் பொழிற்குருகா புரிவணிகன் சடையனிதைத்
தமிழாற் சாற்றித்
திருக்குருகைப் பெருமாள்வண் கவிராச னெனப்புனைபேர்
சிறந்த தொன்றே''

(திருக்குருகாமான்மியப்பதிகம்)

முதலியன.

மதம்:- வைணவம். இவர், '**மணவாளமாமுனி**' முதலிய தென்கலை ஆசார்யசிரேச்டர்களை அலங்கார நூலின்மத்தியில் வணங்கியிருப்பதாலும், சீனிவாசசீயர் என்னும் தென்கலை ஆசார்யபுருசரது சிடராதலாலும், தென்கலை வகுப்பைச் சேர்ந்தவர்.

ஞாநாசிரியர்:- இந் நூலாசிரியருக்குப் பஞ்சசம்ச்கார மென்னும் தீட்சைமுதலியசெய்து வைத்தஞாநாசிரியர் '**சீனிவாசசீயர்**' என்பது 'சிற்குணச் சீநிவாதனின் னருளா, னற்பொருண் மூன்றையும் நலனுறவுணர்வோன்' என்னும் மாறனலங்காரப்பாயிரத்தாலும், 'சிற்குணத் திருமலைச்சீநிவாதன், பொற்புடைத் திருவடிபோற்றியபுனிதன்' என்னும் மாறனகப் பொருட்பாயிரத்தாலும் தெரிகிறது. அன்றியும், மாறனலங் காரத்துள்ளே இவ் வாசிரியரைச் சில இடங்களில் வாழ்த்தி யிருக்கிறார்.

அச்செய்யுள்கள் வருமாறு:

''முத்திக் கவனே முதற்கார ணனென்றும்
பத்தி விடாதே பயிலென்றுஞ்—சத்தியமாய்ச் இ

செல்வத் திருப்பதிவாழ் சீநிவா தன்பகர்ந்த
சொல்வித் தகமே துணிந்து''

(காபாலிகாந்தியகுளகம், குரவன்வாழ்த்து)

''முப்புரிநூன் மார்பினன் முக்கோல்கைக் கொண்டுளான்
பொய்ப்புலனை வென்ற பொறையுடையான்—மெய்ப்
பொருளைச்
சேவிக்கு நுண்ணுணர்வான் சீநிவா தன்றமியே
னாவிக் கருள்புரிந்தாள் வான்''

(திணை-வாகை. துறை-தாபதவாகை)

இவ்வாசிரியர், ஸ்ரீமணவாளமாமுநிகள் ஆசிரியர் திருவாய்மொழிப்பிள்ளையால் தாபிக்கப்பெற்ற திருநகரி உடையவர் (ராமாநுசர்) சந்நிதி எம்பெருமானார் சீயர்மடாதிபபரம்பரையில் 8 (?) வது சுவாமியாக எழுந்தருளியிருந்தவர்; திருப்பதி மடத்திலிருந் தெழுந்தருளியவர் (மேற்குறித்த பிரமாணங்களை நோக்குக) இவர் திருப்பதியிலிருந்தெழுந் தருளும்போது கொண்டுவந்த சீனிவாசன்படத்திற்கு நாளிதுவரை நித்திய பூசையும் உத்சவமும் நடத்திவருகிறார்கள். இந்த சீயர், தாம் வீற்றிருந்தமடத்தைச் சார்ந்த உடையவர் சந்நிதியை சீர்ணோத்தாரணஞ் செய்தாரென்பது, பின்வரும் ஆழ்வார்திருநகரித்திருப்பணிமாலைச் செய்யுளால் விளங்கும்.

''இவர்ந்த பூதூ ரெதிராசன் கோயிலை
யுவந்தனைத் தமுகுங் கண்டுலகி னோங்கினன்
சிவந்தபங் கயமுகன் சீநி வாசமா
தவன்றிரி கோற்கோன் மாதவர் கிரீடமே''

சென்னை ராசாங்கக்கையெழுத்துப் புத்தகசாலைப் புத்தக அட்டவணையில் இவரை சீனிவாசாசார்யர் என்றெழுதியிருக்கிறது. இந்த சீயர் சுவாமி உபயவேதாந்தப்ரவர்த்தகராய்த் திக்குவிசயம்செய்து வாக்மியாயிருந்தாரென்று சொல்லப்படுகிறது.

இந்நூலாசிரியர்செய்த வேறுநூல்கள்:- 1. மாறனகப் பொருளும் அதன் உதாரணம் நூற்றெட்டுத்திருப்பதிக் கோவையும். 2. திருக்குருகாமான்மியம். 3. நம்பெருமாள் மும்மணிக்கோவை. 4. மாறன்கிளவிமணிமாலை முதலியன. இவற்றில் முன்னையதைத்தவிர மற்றைய நூல்களெல்லாம் மாறனலங்காரத்தில் உதாரணமாக எடுத்துக்காட்டப்பட்டுள் ளன.*

காலம்:- இந்நூலால் இவர் காலம் இன்னதென்று தெரி யாமற்போன போதிலும், இவர் செய்த மற்றொரு நூலாகிய திருக்குருகாமான்மியம் அரங்கேற்றிய காலம் அதிற் குறிக்கப் பட்டிருப்பதால் அதிலிருந்து அவர் கால மின்னதென்றேற் படுகிறது. அச் செய்யுள் வருமாறு:-

"அறந்திகழாண் டவையெழு நூற் றிருபான் மூன்றி
  லணிகிளர்கார்த் திகைமாத மெட்டில் வாழ்வு
சிறந்திடுதிங் களினுளுத் தரத்தி லேகா
  தெசியின்மக ரமுகூர்த்தந் திருந்த முற்றத்
துறந்தவரெண் மகிழ்மாறர் திருமுன் னுதிச்
  சுருதியுடன் மிருதியுஞ்சொற் றமிழின் வாய்மை
பிறந்தபெருங் காப்பியமுந் தெரிந்தோர் கேட்கும்
  பெற்றியுட னரங்கேற்றப் பெற்ற தன்றே"

இதிற் குறிப்பிட்டுள்ள வருடம் கொல்லம் ஆண்டு. கொல் லமாண்டு 723-வது எனவே இப்போது 1090 நடப்பதால், 365

---

* மாறனலங்காரத்தில் கௌடச்சமநிலைக்கு உதாரண மாகக் காட்டப்பட்ட 'பனிப்பிறை' என்னும் முதற்குறிப் புள்ள 95-ஆம் பாட்டு, ஷை திருப்பதிக்கோவையில் உ0அ-ஆம் பாடலாகச் சிறிது பாடபேதத்துடன் காணப்படுவது ஆரா யத்தக்கது.

வருடங்களுக்கு முன் இவர் இருந்தாரென்றேற்படுகிறது. குருகாமான்மியத்திலிருந்து இந்நூலுக்கு உதாரணமெடுத்திருப்பதால் இந் நூல் பின்னுற்செய்யப்பெற்றதென்று வைத்துக் கொள்வோம். ஆகவே ஏறக்குறைய 360-வருடங்களுக்கு முன் இந்நூலியற்றப்பெற்றதென்பதுஏற்புடைத்தாகும். சீயர்காலம் நிர்ணயிக்கப்புகுமிடத்தும் இக்காலவரையறை சரியாயேற்படுகிறது. உரையாசிரியர் காலமும் இதுவேயாகும். இதுபற்றியே தான் செந்தமிழில்' இரண்டு மூன்றிடங்களில், உரையாசிரியராகிய இரத்திநகவிராயர் பிரத்தாபம்வருமிடத்து ஸ்ரீ உ. வே இராகவையங்காரவர்கள் '350-வருடங்களுக்கு முன்னிருந்த' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இவர் பெருமை: — இவர் பாலியத்திலேயே நிகண்டு இலக்கணம், இராமாயணம் சங்க நூல்கள், பழையவுரைகள் இவற்றை ஐயந்திரிபறக் கற்றுச் சிறந்தவித்வானாகிய தமது தகப்பனாரிடம் கற்றுவல்லுநராய், மாணக்கர்க்குப் பாடமோதியும் பழைய நூல்களைத் தேடித் தொகுத்து வைத்துக் 'கல்விக் களஞ்சிய'மொன் றேற்படுத்தியும், **பொருட்டொடர் நவம் புணர்புலமையோன்** (மா அக 8. அல) என்றபடி புதுவகையான பெருங்காப்பியம் சிறுகாப்பியமுதலான நூல்களியற்றியும், தற்காலத்து வித்வான்களுடன் வாதஞ்செய்தும், அரசராற் சன்மானிக்கப்பெற்றும் தமிழை விருத்திசெய்து சிறந்த வீரவைணவப்புலவராய் வீற்றிருந்தார் இவர் விடயமாய் அரபியுக்தரருளிய பின்வருஞ்செய்யுளையும் நோக்குக.

"நேற்றுப் பிறந்துவரும் பாவியான நிலாநெருப்புக்
காற்றும்படி தொங்கறந் திலனே யருட்கூடற் சங்கந்
தோற்றும் படிசொன்ன சொன்னற்பத் தொன்பதை
யைம்பதென்று
சாற்றுந் திருக்குருகைப் பெருமாணஞ் சடைக்
குட்டியே"

இந்நூலாசிரியர்

இந்நூலுக்குச் சிறந்த விருத்தியுரை யருளிச் செய்தவர் தென்றிருப்பேரைப் பதியிற் பிறந்த காரிரத்நகவிராயர் என்பவரே. தென்றிருப்பேரை யென்னும் பாடல்பெற்ற திவ்ய தேசம் ஆழ்வார் திருநகரிக்குக் கிழக்கே மூன்று மைல் தூரத்துள்ளது. இவர், திருக்குருகைப் பெருமாள் கவிராயர் அநேக மாணுக்கர்க்குப் பாடமோதிக்கொண்டு சிறந்த வித்வானு யிருப்பதைக் கேள்வியுற்று அவரிடம் கல்வி கற்றுச் சிறந்த வித்வானுனார். செந்தமிழ்ப் பத்திரிகையில் இவரைக் குறிக்க நேரும் போதெல்லாம் இவர் பெயரை இரத்திநகவிராயரென்றே குறித்திருக்கிறது. ஆனல் உற்றுநோக்கும்போது இவரது இயற்பெயர் 'காரிரத்நகவிராய'ரென்பதென்று தெரிகிறது. 'காரிரத்நம்' என்பது ஆழ்வார் திருநாமம். காரிராசன் பெற்ற இரத்திநம் போன்ற புதல்வன் என்பது இதன் பொருள். 'காரிதந்தருள்கலைக்கடலியற்பெயர்புனைந்து' (மா. அல.) 'காரிமாறன் சடகோபன்' (திருவாய்) 'காரி... ...ரத்நம்' (மாறன் கோவை) முதலியவற்றையும் நோக்குக. இவருரை மிகவுஞ் சிறந்ததோருரை. இவ்வுரையின்றேல் இந்நூலின் பெருமை வெளிப்படாது. சங்க நூல்கள் பிற சான்றோர் நூல்கள் முதலியவற்றிலிருந்து மேற்கோள் காட்டியிருக்கிறார். சில உதாரணச் செய்யுள்களிலுள்ள உள்ளுறையுவமம், ஏனையுவமம், இறைச்சிப் பொருள் முதலியவற்றை அழகாய் விளக்குகிறார் சில உதாரணச் செய்யுளுக்குக் குறிப்புரையும் சிலவற்றிற்குப் பொழிப்புரையும் கூறுகிறார். இவர் வேண்டுமிடங்களில் தண்டிமதம். தொல்காப்பியர் போன்ற பிற நூலாரின் கருத்து முதலியவற்றையெடுத்துக் கூறித் தக்க சமாதானங் கூறுகிறார். உதாரணச் செய்யுள்களைச் சூத்திரப் பொருளோடு அழகாய்ப் பொருத்திக் காட்டியிருக்கிறார். இவர் காலம் முன்னே கூறப்பட்டது. இவர் செய்த வேறு நூல்கள்: — தொல்காப்பிய நுண்பொருண்மாலை

பரிமேலழகருரை நுண்பொருண்மாலை (இது செந்தமிழில் வெளிவந்துள்ளது), ஆசிரியர் செய்த நம்பெருமாள் மும்மணிக் கோவைக்கு விருத்தியுரை, மாறன்பாப்பாவினம் முதலியன.

இவருக்குக் கோயிலில் "வாகனமாலை" படிப்பதற்காக அக்காலத்தரசன் சிறந்த மானியங்கள் விட்டிருந்தான். அவற்றை இன்னமும் இவர் சந்ததியார் அனுபவித்துவருகிறார்கள். இவரைப் போலவே இவர் வமிசத்தோரும் சிறந்த வித்வான்களாயும் வைணவர்களாயுமிருந்து தமிழையபிவிருத்தி செய்தார்கள். மகா-ள-ள-ஸ்ரீ தாமோதரம் பிள்ளையவர்கள், பிரம்ம ஸ்ரீ மஹாமஹோபாத்யாய சாமிநாதையரவர்கள், ஸ்ரீ-உ. வே. ரா. இராகவையங்காரவர்கள் முதலியோருக்கு அரும்பெறற்றமிழ் நூல்களருளிய குடும்பம் இதுவே. இக்குடும்பத்தினர் ஏடுகளே திருக்கோவையாருரையாசிரியர் பேராசிரியரென்றும், அச்சிட்ட தொல்காப்பியச் செய்யுளியலுரை முதலியவை பேராசிரியரது; நச்சினார்க்கினியரதன்றென்றும், பரிபாடலுரையாசிரியர் பரிமேலழகர் என்றும் அறியுமாறு அருமையான பல விடயங்களைத் தெரிவித்தன. இக்குடும்பத்தார் காப்பாற்றிவைத்த ஏடுகளின் பெருமை பிரம்ம-ஸ்ரீ வே. சாமிநாதையரவர்கள், ஸ்ரீ-உ. வே. இராகவையங்காரவர்கள் முதலியோருக்கே தெரியும். இவ்வமிசத்தவர் வைணவபரமாய் எத்துணையோ தமிழ் நூல்கள் செய்திருக்கிறார்கள். தமிழுரை செய்திருக்கிறார்கள். வடமலையப்ப அரசரின் சமத்தான வித்வான் சிறியகாரிரத்நகவிராயர் இவ்வம்சத்தவர். சாபாநுக்ரக சக்தியுடன் கவி பாடத் தகுந்த புலவர் இவ்வம்சத்தி லநேகரிருந்திருக்கின்றனர். குமரகுருபரசுவாமிகள் வம்சபரம்பரையோரில் ஆழ்வார்திருநகரிக் கிளையினர் அநேகர் இவ்வம்சத்தாரிடம் பாடங் கேட்டிருக்கிறார்களென்று தெரிகிறது. இம்மாறனலங்

கார உரையாசிரியர் விடயமான சிறப்புப்பாயிரச் செய்யுளை யெடுத்துக்காட்டி இதனுடன் நிறுத்துகிறேன்.

தருகாள மேகங் கவிராய ராயன் சடைய னன்பாற்
குருகா புரேசர் புனையலங் காரங் குவல யத்தே
கருகாத செஞ்சொ லுரைவிரித் தான்கற் பகாடவிபோல்
வருகாரி ரத்ந கவிராயன் பேரை வரோ தயனே.

A. M. சடகோபராமாநுசாசார்யன்,
திருச்சிராப்பள்ளி.
25—5—1913.

மாறனலங்காரம்

பொருளணியியலுரை

1. பொருளினுஞ் சொல்லினும் புனையுறு செய்யுட்
கணிபெறப் புணர்த்தலி னணியெனும் பெயர்த்தே.

என்பது சூத்திரம். இவ்வோத் தென்னுதலிற்றோவெனின், ஓத்து நுதலியதூஉ மோத்தினது பெயருரைப்பவே விளங்கும். ஆயின் இவ்வோத் தென்னபெயர்த்தோவெனின்? பொருளணி யியலென்னும் பெயர்த்து; பொருளானு மணிக ளுணர்த் தினமையின். ஆயின், இதன் றலைச்சூத்திரம் என்னுதலிற்றோ வெனின்? சொல்வான் றொடங்கிய அணியென்பவற்றிற்குக் காரண மிவையென்பதூஉம் அவை செய்யுட் கின்ன சிறப் புடைத்தாகப் புணர்த்தலி னிப்பெயர்த்தாயிற் றென்பதூஉ முணர்-ற்று.

(இ-ள்) புலவராற் றொடுக்கப்பட்ட கவிகட்குப் பொரு ளானுஞ் சொல்லானும் அழகெய்தப் புணர்ப்பதால் அணி யென்னும் பெயரை யுடைத்தாயிற் றிவ்வலங்காரமென்றவாறு.

புலவரா லென்பதூஉம் அலங்கார மென்பதூஉஞ் சொல் லெச்சம். அணி யிரண்டனுண் முன்னையது அழகாம். பின்னையது பூணும். எனவே பொருளானுஞ் சொல்லானு மணி யிரண்டென்பதாயிற்று.

2 அவற்றுள்,

புவனம் போற்றிய பொருளணி புகலிற்
றவலரும் பான்மைத் தன்மை யுவமை
யுருவக முள்ளுறை யொட்டுல் லேக
மொப்புமைக் கூட்டம் வேற்றுமை திட்டாந்த

தற்குணம் பிரத்திய னீகஞ் சந்தய
மற்புத நிதரிசனந் தற்குறிப் பதிசயஞ்
சிலேடை பின்வரு நிலைதீபக நிரனிறை
பூட்டுவி லிறைச்சிப் பொருள்கோள் பொருண்மொழி
யதிகம் வகைமுத லடுக்கிணை யெதுகை
விரோத முபாயம் விசேடஞ் சமாயித
மேதுச் சுவைபரி யாய மிலேசந்
தற்பவ மசங்கதி தடுமா றுத்தி
புணர்நிலை வேற்றுப் பொருள்வைப்பு விபாவனை
யார்வ மொழிநெடு மொழிபரி வருத்தனை
காரண மாலை காரிய மாலை
யேகா வலிபிர தீபம் பிறவணி
முன்ன விலக்கப நுதிநிந் தாத்துதி
புகழ்வதி னிகழ்தன் மாறுபடு புகழ்நிலை
பரிசங்கை காவிய லிங்கம் பரிகர
முறுசுவை வினோத்தி சமுச்சய முதாத்த
மாசி சங்கரஞ் சங்கீரணமே
பாவிக மெனவறு பானுன் காகும்.

(எ-ன்) வைத்தமுறையானே பொருளாறு மணிகளது பெயருமுறையுந் தொகையு முணர்-ற்று

(இ-ள்) அங்ஙன மிரண்டுகூற்றவாகிய அணிகளுள் உயர்ந்தோர் முதலெனப் போற்றப்பட்ட பொருளணியொன்றனையுங் கூறுமிடத்துத் தன்மை முதலாகப் பாவிகமீறாக அறுபத்துநான்கா மென்றவாறு.

இவற்றிற்கெல்லா மெண்ணும்மை தொக்கு நின்றன என என்பது எண்ணிடைச்சொல்; என்னை? 'என்று மெனவு மொடுவு மோரோவழி, நின்றும் பிரிந்தெண் பொருடொறு நேரும்'' என்றனல். எனவென்பதனைத் தன்மை முதலாக வெண்ணிய வெங்கு மொட்டுக

அஃதாக; இச்சூத்திரத்துள் சிலேடை, பின்வருநிலை, தீபகம் நிரனிறை முதலிய சொல்லாறுமணிகளு மிதனுட் கூறுநிற்பப் பொருளணியியலென்ப தென்னையெனின், மிகுதி பொருண்மேலவாதலின் மிக்கவற்றாற் பெயர்கொடுத்தார்; அஃ தியாவதுபோலவெனின், அங்கராகமாகிய சந்தனத்துடன் குங் கும கற்பூர கத்தூரி கூடினும் பூசியது சந்தனமென்பதுபோலக் கொள்க.

அற்றேல் இவை முறையாயினவாறென்னையோவெனின். இயல்பு விகாரமெ - விரண்டாகிய வவற்றுள், தன்மை யியல் ப கலான் முற்பட்ட முறைமைத்தாக வைக்கப்பட்டது. உவ மையை மூன்று றுப்படக்கிய பிண்டமாகுந் தொல்காப்பியத்து ளிறுதிநின்ற பொருளகத் தகப்பட்டதாக அலங்காரத்தினையுங் கூறிய ஒல்காப்புலமைத் தொல்காப்பியனுரு முவமையென்ப தொன்றுகத் தொகைபெற்று வினை முதலிய நான்காய் வகுத் துப் பலவேறு விரிவாய் நின்று விகாரமாயதன்றிப் பிறவலங் காரங்கட்கு முபகாரமுடைத்தாகலானு மஃதொன்றினையுமே முக்கியமாக்கி யதனுட னுருவகமும் உள்ளுறையுவமமும் வகுத்துக்கூறிய முதன்மையானும், இதற்குத் தனியே முத னூல் செய்த தெண்டி யாசிரியரும் அவர் நோக்கமே தாமு முடம்பட்டாராகத் தன்மையின்பின் னுவமையை வைத்தாராக லானும், இநவர் நோக்கமு முட்கொண் டிந்நூலுடையா ரவையிரண்டிற்கு மிந்நூல் வழிநூலாதலானுந் தன்மையை முதல்வைத் ததன்பின்ன ருவமையையு முதல்வைத்தது முறை யெனக் கொள்க. உருவகமும், உவமையும், பொருளும் வேறு பட்டு நில்லா தொன்றென்னும் பான்மைத்தாய மாட்டேற்று முவமையாதலானும் உள்ளுறை யுவமமும் இசைதிரிந் திசைக் கப்படுவதா யுவமையோ டுவமிக்கப்படும்பொருள் பிறிதோராறு தாராது அவ்வந்நிலங்களிற் பிறந்த கருப்பொருளோடுஞ் சார்த்தி யுள்ளுறுத்திக்கொள்ளுமுவமை யாதலானும் அவை முறையே வைக்கப்பட்டன ஒழிந்த ஒட்டு உல்லேக முதலி

யனவு முவமையைப் பின்சென்றிருத்தலா னவை வைத்த முறையு முய்த்துணர்ந்துகொள்க. அவையெல்லா மீண்டுரைப் பிற் பெருகும். உவமையைப் பின்சென்றனவல்லாத அலங் காரங்களையுந் தமக்குப் பொருந்தினமுறையே வைத்த முறையு முய்த்துணர்ந்துகொள்க. அவையு மீண்டுரைப்பிற் பெருகும்.

அஃதாக; ஆறு லிந்நூலுடையார் முதனூல்களிற் கூறிய படியே வழிநூலிற் சிறிது புடைநூலிலக்கணந் தவறாது கூறப் புகுந்து மிகவுமிதன் முதனூலாகிய தண்டி கூறிய அணிகளுள் நுட்பமென்னும் அலங்காரத்தைக் குறைத்துப் பிற முதனூ லணிகள் கூறிய அணிகளையுந் திரட்டிக்கூறி, முந்து நூல்களுட் கூறாத பூட்டுவில் இறைச்சிப்பொருள் கோள் பொருண்மொழி யென்னு மூன்றினோடும் வகைமுதலடுக்கு இணையெதுகை உபா யம் உறுசுவை புகழ்வதினிகழ்த லென்னும் அலங்காரங்களை யுங் கூட்டி அறுபத்துநாலாக மிகுத்ததூஉ மொருவழிக் குன் றக் கூறன் மிகைபடக்கூற லென்னும் குற்றமாம்பிறவெனின், ஆகாது; என்னை? நுட்பமென்பது பரிகரத்து ளடங்கு மெனக் குறைத்துச் செய்யுட் கணிபெறப் புணர்ப்பதெல்லா மணியெனப்படுதலான் முன்னைய மூன்றுஞ் சொல்லிலக்கணத் தினும் பொருளியலினும் புறத்திணையினுங் கூறியபடியே செய் யுட்கழகாதலி னணியிற்கூட்டி மிகுத்தார்; ஏனையவைந்து மழகெய்துவதா யிலக்கியங்கண்டதற் கிலக்கண மியம்பியதாக்கி மிகுத்தாராகலானென்றுணர்க. அன்றியும், வழிநூலும் புடைநூலுஞ் செய்தற்கேதுத் தொகுத்தன் முதலிய நான்கி னுள்ளு முதலன விரண்டு மிகவு மேதுவாகலானுங் கூறப்பட் டன. அற்றேல் ஐயமுந் தெரிதரு தேற்றமும் பொதுநீங் குவமையுந் தெண்டியாசிரியருவமவிரியுட் புணர்க்க, அவற்றை யேனையாசிரியர் வேறுவேறணியாகப் புணர்க்க, இந்நூலுடை யார் முதலிரண்டும் பிறர்நோக்கத்தோடுங் கூட்டிப்பிறிதோ ரணியாக்கிப் பின்னையது தெண்டிநோக்கத்தோடுங் கூட்டிப்

புணர்த்ததூஉங் குற்றமாமெனின், குற்றமன்று. இருவர்க்கும் முதலான தொல்காப்பியனார் "தடுமாறுவமங் கடிவரையின்றே" யென வழுவமைதிவாய்பாட்டாற் கூறினமையானும் அவற்றுள் உவமவுருபு புணராமையானு முவமையைப் பின்சென்று பிறிதோரணியாகப் பிறருடம்பட்டது தானுடம்படுதல் என்னு முத்தியா னுடம்பட்டும், ஏனையது "தானே தனக்குவமைதா" னென உவமவாசகம் புணர்ந்தமையானும் "ஒரீஇக் கூறலு மரீஇய பண்பே" என்றாராதலானும் பிறர் மதங்களைதலென்னு முத்தியானுங் கூறப்பட்டது. இங்ஙனம் பெயரு முறையுந் தொகையுமாகிய அணிகளை முதனூலாசிரியர் வகைப்படுத்தியும் விரித்துங் கூறிய நோக்கத்தோடுஞ் சிலவற்றை யிந்நூலுடையார் தன்கோட்கூறலென்னு முத்தியானுந் தன்குறியிடுதலென்னு முத்தியானும் வகுத்ததன்மேல் விரித்துவகுத்தும் விரித்ததன்மேல் விரித்ததையும் அவ் வணிகட் குணர்த்தும் பீடிகைமுதலாய வுரைநடைநோக்கங்களா னுங்காங்குக் கண்டு கொள்க. அவையெல்லா மீண்டுரைப்பிற் பெருகும்.

க-வது தன்மையலங்காரம்

3. வழுவா மரபினெப் பொருளையும் விகாரந்
தழுவா நடைபெறப் புணர்ப்பது தன்மை.

(எ-ன்) மேனிறுத்தமுறையானே தன்மையென்னு மலங்காரத்தினது பொதுவிலக்கண முணர்-ற்று.

(இ-ள்) இருதிணையுட் குற்றமில்லாத இலக்கணத்தை யுடைய எவ்வகைப்பட்ட பொருள்களையு முவகை முதலிய விகாரவணிகள் கூடாதே சுபாவநடைபெறப் புலவன் பாடுவது தன்மையென்னு மலங்காரமா மென்றவாறு.

நடை - ஒழுக்கம். குற்றமில்லாத எவ்வகைப்பட்ட பொருளையுமெனவே குற்றமுள்ளவற்றின் சுபாவத்தைப் பாடுவதுந்

தன்மையா மெனினும் அலங்காரத்தின்பாற் கூடாதென்பதாம். வழுவாதமரபென்னும் வினையெதிர்மறுத்த பெயரெச்சவாய்பாடு செய்யுள் விகாரத்தாற் றொக்கேற்றுயிர்மெய் கோவாமுத்தமென்பதுபோலக் குறைந்து நின்றது. தழுவா வென்பது மது. விகாரம் ஆகுபெயர்.

4. அதுவே,

ஒண்பொருண் மக்க ளுயிருள வஃறிணை
சினைவினை பண்பிட மெனவுஞ் சிவணும்.

(எ-ன்) தன்மையின் சிறப்பிலக்கணப் பாகுபாடுணர்-ற்று.

(இ-ள்) அத் தன்மையென்னுமணி, உயர்திணையிடத்துப் பொருட்டன்மையும் மக்கட்டன்மையும், அஃறிணையிடத்துயிருள்ள அஃறிணைத் தன்மையும், உயிரில்லாத அஃறிணைத் தன்மையும் அப்பொருளின் சினைத்தன்மையும், வினைத்தன்மையும், பண்புத்தன்மையும், இடத்தன்மையுமெனத் தனித்தனி புலப்படப் பொருந்துமென்றவாறு.

அதுவே, என்பது "சீர்கூறுதல் நேரடிக்குரித்தே" யென்பதனாற் சீர்கூறுயிற்று. இவற்றிற்கெல்லா மெண்ணும்மை செய்யுள்விகாரத்தாற் றொக்குவிரிந்தன. உயிரில்லஃறிணை யென்பது முயர்திணையென்பது யெதிர்மறையெச்சமாகி விரிந்தன. இன்னு மவ்விலேசானே யுயிருள வஃறிணையு ளியங்குதிணையும் உயிரில்லவற்றுட் கருத்துப்பொருளுங் கொள்க.

5. அவற்றுள்,

பொருளியல் பாண்பெண் ணெனவிரு புலப்படும்.

(எ-ன்)இதுவும் பொருட்டன்மைக்கோர் பகுதியுணர்-ற்று.

(இ-ள்) அச் சொல்லப்பட்ட வுயர்திணை யஃறிணையுட் பொருட்டன்மை ஆடூஉப்பொருட்டன்மை மகடூஉப்பொருட்டன்மை என விருவகைத்தாய்த் தோற்றுமென்றவாறு.

6. அரும்பெறன் மக்கட் டன்மையு மற்றே.

(எ-ன்) இதுவும் உயர்திணைக்கண் மக்கட்டன்மைக்கோர் கூறுபாடுணர்-ற்று.

(இ-ள்) பெறுதற்கரிய மக்கட்டன்மையும் பொருட்டன்மைபோல விருவகைப்படு மென்றவாறு.

அற்று உவமவுருபு. அஃறிணைக் கொருமை பன்மையென்பதல்லாது ஆண்பெண் ணென்பது சிறப்பின்மையாற் கூறுராயினர்; என்னை? "ஆண்பெண்பலரெனமுப்பாற்றுயர் திணை", "ஒன்றேபலவென்றிருபாற்றஃறிணை" யென்பதனு லறிக.

இவற்றிற்கெல்லாஞ் செய்யுள் வருமாறு:—

செம்பொ னுடை செறிதிரு மருங்கின
னம்புயத் தனிமல ரலர்ந்த வுந்தியன்
கவுத்துவக் கடவுட் கவினிமுன் முழுமணி
பவித்திரத் திருமகள் பதிந்த மார்பினன்
வலம்பயின் முப்புரி நூலொடும் வாடா
திலங்கிய வனமா லிகைபுனை யிணைப்புய
னிகல்புரி திகிரிசங் கேந்திய கரத்தினன்
கதிர்மணி மௌலி கவித்த சேகரன்
மதிதவழ் சோலை மலையலங் காரன்
பூதலந் தாய பொன்னடி
காதலித் தவர்வல் வினைகடந் தவரே.

இது ஆடூப்பொருட்டன்மை. திணை - பாடாண். துறை - கடவுள் வாழ்த்து. உரையிற்கோடலென்பதனு லுரையெழுத வேண்டுவதில்லை. பா-நேரிசையாசிரிப்பா.

கனையிருள் கடிவயிரப் பரல்செறி தமனியப்
புனைகழ லொடுவனை பரிபுரப்பூந் தாளினன்

குறங்கிணையொடு மருங்கிணைவளை பொலந்துகிலின
னறந்தழைதரு மயன்றனையரு ளலருந்தியன்
கவுத்துவமணி வனமாலிகை கலந்தொளிர் திருப்
பவித்திரமுடன் மலர்மாமகள் பயின்மார்பினன்
வான்றோய்கதி ரினிற்றிகிரியை வலனேந்தியு
மீன்றோய்மதி யினில்வரிவளை யிடனேந்தியு
மகரக்குழை தழைகாதினன் மணிமௌலியன்
சிகரப்பல தலைசேர்திரு மலைமேலுறை
செல்வனை,
மனமொழி மெய்களின் வழிபடு பவராய்ப்
புனாநறு மலர்பொழி பவர்பாற்
கனவிலு முறுன்கொடுங் கணிச்சி யோனே.

கனையிருள்-செறிந்தவிருள். வயிரப்பரல்-வயிரமணி; உள்ளீடாயதரி. தமனியப்புனைகழல்-பொன்னாற்புனையப்படும் வீரக்கழல். பூந்தாளென்றது பொலிவினையுடைய சீபாதம். வான்றோய்கதிர்...ஏந்தியும்-வானிடத் தலமரல்பொருந்திய கதிராற்கொண்ட சக்கரத்தை வலத்தேதரித்தும், மீன்றோய்........ இடனேந்தியும்-நாண்மீனோடு பொருந்திய மதியாற்கொண்ட வலம்புரியை யிடத்தே பொறுத்துமென்க. என்னை? வான்றோய் கதிர்போன்ற திகிரியை, மீன்றோய் மதிபோன்ற வலம்புரியை யென வுவமைத்தொகைத்தொடர்மொழியன்றோவெனின், அன்று; "இமையாதமுக்கண், மூவரிற் பெற்றவ" ரென்பது போலக் கொள்க. ஈரிடத்தும் இன் சாரியை. ஆல் என்னுமுருபு இல்லென் மூன்றுவ தைந்தனுருபாய் மயங்கின. கொண்ட வென்னும் வினையுந் தொக்கது. செல்வனை யென்பது தனிச்சொல். சீபாத முதலியவற்றை யுடையனாகித்திருமலைமேனிலைபெற்ற திருவுடையானைத் திரிவித கரணங்களாலும் அருச்சனைசெய்பவராய்க் கைகளா னறுமலர்தூயவரிடத்துக் காலன் நனவினுங் கனவினு மணுகானென்றவாறு. இது பத்தடியாய்ச் செல்வனை யென்னுந் தனிச்சொற்பெற்று மூன்றடி

நேரிசையாசிரியச்சுரிதகத்தாலிற்ற சிந்தடிவஞ்சிப்பா. அலங்காரமுந் திணையுந் துறையு மிதுவுமது.

பூங்கமலக் கோயிலாள் புத்தமிர்தி னுட்பிறந்தாள்
வீங்குதுணை முலையாள் வெண்ணகையா—ளோங்குபுனற்
பொன்னி நடுவுட் பொருண்மார் பகத்தாளென்
சென்னி பிரியாத் திரு.

இது மகடூஉப் பொருட்டன்மை. இதனுள், பொன்னி நடுவுட் பொருள் என்ற திரண்டாற்றிடைக் கண்வளர்ந்த நம் பெருமாள், திணை—இதுவுமது. துறை - பெண்பாற் கடவுள் வாழ்த்து

முப்புரிநூன் மார்பினன் முக்கோல்கைக் கொண்டுளான்
பொய்ப்புலனை வென்ற பொறையுடையான்—மெய்ப்
சேவிக்கு நுண்ணுணர்வான் சிநிவா தன்றமியே[பொருளைச்
னுவிக் கருள்புரிந்தாள் வான்.

இஃது ஆடூஉ மக்கட்டன்மை. ஆவியை என்பது ஆவிக்கென இரண்டாவது நாலாவதாயிற்று. திணை - வாகை. துறை - தாபதவாகை; என்னை? "பொறியுணர் வெல்லாம் புலத்தின் வழாமை, லொருவழிப் படுப்பது தொகைநிலைப் புறனே", "மனத்தினை யொருவழி நிறுப்பது பொறையே", "நிறுத்திய மனத்தினை நிலைதிரி யாமற், குறித்த பொருளொடு கொளுத்துத னினைவே" என்ற முறையே தொகைநிலை பொறைநிலை நினைத லென்னு மூன்று மிப்பாட்டினுள்ளே கூறினமையான் "அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்" என்னுஞ் சூத்திரத்துள் 'நாலிரு வழக்கிற் றாபதபக்கமு' மென்னு மெட்டனுள் தவஞ்செய்து யோகம் பயில்வார்க்குரிய விம்மூன்றும் வந்தமையா லெனக்கொள்க.

கூரெயிற்று ருண்கண்ணார் கொம்மை யிளமுலையார்
வார்புருவத் தார்திலக வாணுதலார்—காரகத்தெம்

மால்வரையா ரெண்ணிறந்த மாதருணின் ஞற்குறித்த
கோல்வளையா ராரிறைவ கூறு.

இது மகடூஉமக்கட்டன்மை. கூரெயிறு - கூரியபல். உண்கண் - மையுண்கண். கொம்மை - திரட்சி. இளமை - மேனிவனப்பு, வார்புருவம் - நீண்ட புருவம், கோல்வளை - திரண்டவளை, வாணுதல் - ஒளி பொருந்திய நுதல், பகுதி - சேட்படை, துறை - அறியாள்போன்றவனிளைவுகேட்டல்.

வள்ளுகிருந் தோலடியுஞ் செவ்வாயும் வார்சிறைகூர்
புள்ளியுமென் கூட்டுமுறு பொற்பினதா—மொள்ளியரை
மாறிவரு வாதியரை வென்றமகிழ் மாறனு
ரேறிவரு வெள்ளோதிமம்.

இஃது உயிருளதா யியங்கு மஃறிணைத்தன்மை. வள் - கூர்மை, தோலடி - என்பில்லாத அடி, புள்ளி - பொறி, திணை- பாடாண் பொதுவியல். துறை - அன்னவாழ்த்து. என்னை? பாலறிமரபிற் பொருநர் கண்ணும் வாகைத்திணையுட் கூறிய சூத்திரம் போல வென்றி கூறாது அன்னத்தினது தன்மை கூறியதனுலும் வாழ்த்தெல்லாம் பாடாணுதலானு முணர்க

பரியரைத்தாய்த் திணிவயிரம் பயின்றுநிலங்
கிளைமுதற்றாய்
விரிசினைத்தாய்ப் பசுந்தழைத்தாய் விரைமலர்த்தாய் விழை
கனித்தாய்ப்
பெரியகதி ரவன்மறைந்த பிழம்பிருட்கு முறங்காது
வரிவளையூர் புனற்குருகூர் மகிழ்மாறர் திருப்புளியே.

இஃது உயிருளதாகி யியங்கா வஃறிணைத்தன்மை. இவை யிரண்டுங் கடவுட்டன்மையுடைத்தாயினு முலகின்கட்டோன் றும் வடிவ மஃறிணைத் தன்மையவாதலி னிங்ஙனம் கூறுவ தாயிற்று. திணை - இதுவுமது, துறை - தாவரவாழ்த்து. பா - தரவுகொச்சகக்கலிப்பா, இருள் - ஆகுபெயர்.

ஆதார பீடத் தமர்ந்துயர்ந்த பாதசெடி
மீதா யமுந்த மிதித்துமிர் தாட்டுணைத்தாய்த்
தாழ்ந்த துதிக்கையினைத் தாவியிரு கைபற்ற
வாழ்ந்த பகுவா யகத்தோங்கு நாவின்
வளைமெயிற்றுக் கூர்ங்கோட்டு வான்பிடர்வீழ் கற்றை
யுளைவனப்பிற் பாங்கருயர் செவித்தாயொண் கருக்கி
னாமொன்றிய சீர்த்தொடுற்ற முறுமாளி யின்மே
லாழங் குடைத்தாய தன்மேற்கொ ளாளியதாய்
நான்றதலைப் போதிகைத்தா நாவிறர் வண்புளிக்கீழ்த்
தோன்றுதிருக் காவணக்கற் றூண்.

இஃது உயிரிலஃறிணைத்தன்மை. இது பத்தடியான்வந்த பஃறொடைவெண்பா. திணை - இதுவுமது. துறை - மதலை வாழ்த்து.

நீண்ட செவியுறவி னீள்புருவத் திம்பரொளி
கூண்டுபய நோக்கமுங்கைக் கொண்டதாம்—பாண்டவர்தந்
தேர்ப்பாக னைசிறு புலியூரா னுலகங்
காப்பான்றன் மால்வரையாள் கண்.

இது சினைத்தன்மை. உபயநோக்கம் - அருணோக்கமு மருணோக்கமும், பகுதி - சேட்படை, துறை - கண்ணயப் புரைத்தல்.

கைச்சிரத்தா னுந்துதிப்பக் கன்றினரா கந்திறந்து
பச்சிரத்த முண்டுயிருண் பான்மைத்தே—வச்சிரத்தாற்
குன்றெறிந்தா னும்பரவுங் கோயிலான் பாரதப்போர்க்
கன்றெறிந்த வன்சக்க ரம்.

இது வினைத்தன்மை. ஆகம் - மார்பு, திறத்தல்-பிளத்தல். பச்சிரத்தம் - குளிர்ந்த ரத்தம், அன்று - முற்காலத்து, குவ் வுருபு மயக்கம். திணை - வாகை, துறை - திகிரிவென்றி.

பூரித் துடலம் புளகித் திடப்புலமை
சீரித் துயிர்தளிர்ப்பச் சேர்ந்துருகும்—பாரித்த

முத்தமிழ்மா றன்ஞான முத்திரைக்கை கண்டுதொழு
மூத்தமராய் வாழ்வா ருளம்.

இது பண்புத்தன்மை. பூரித்தல் - தடித்தல், புளகித்தல் - உரோமஞ் சிலிர்த்தல், புலமை - அறிவின்றன்மை, சீரித்தல் - இடைவிடாமற் பழகுதல், தளிர்த்தல் - தழைத்தல், சேர்ந் துருகுதல் - பரத்துவ சொரூபத்தை யோகித்துக் குழைதல், பாரித்தல் - விரித்துரைத்தல், முத்தமிழ் - சித் தசித் தீச்சுர மூன்றுங் கூறுந் தமிழ்; அது திருவாய் மொழி. உளம்-ஆன்ம ஞானம். முத்தமிழ்மாறன் ஞானமுத்திரைத் திருக்கையைக் கண்ணினாற் கண்டுங் கையினாற் டொழுது முத்தமராய் வாழ் வாரது ஆன்மஞானமான துடலந் தடித் துரோமஞ் சிலிர்ப்பப் பரத்துவ ஞானத்தோடும் பயின்ற பரத்துவ சொரூபத்தை யோகித்துக் குழையுமெனக் கூட்டுக. திணை - பாடாண். துறை - பழிச்சினர்ப் பரவல்.

உற்றபர மேட்டிமுத லோங்கியவைம் பூதநிலை
பெற்றுளதாய்ச் சோதிப் பிழம்பதாம்—பற்றிலர்பே
ரானந்த மெய்துவதா மாதியிடை யென்பவுடன்
றூனந்த மில்லான் றலம்.

இஃது இடத்தன்மை. பரமேட்டி முதலாய வைம்பூத மாவன — பரமேட்டி. புமான், விச்சுவம், நிவிர்த்தி, சருவன். இது பரமபதமாகிய இடத்தன்மை. திணை - பாடாண் பொது வியல், துறை - புலவரேத்தும் புத்தேளுடுவாழ்த்து, புலவர் - நித்தியசூரியர்.

ஏழா வரணமிசைந் தீர்ந்தண் புனற்பொன்னி
சூழா மணிமாடஞ் சூழ்ந்துளதா—வாழ்மறையோர்
வேத வொலியும் விழாவொலியுங் கூர்தகைத்தா
நாத னரங்க நகர்.

இதுவும் இடத்தன்மை. திணை - இதுவுமது, துறை - நகர் வாழ்த்து.

தேவும் புவனமுந் திரண்ட மன்னுயிர்
யாவும் யாவரு மிறந்தொடுங் கியஞான்
றொருபெருந் திருமா லுந்தியங் கமலத்
தருள்பகி ரண்டகோ டிகளொனு மவற்று
ளொன்றய னுலகா தியாயவீ ரேழி
னயனிலை மேரு நடுக்கொள்பூ லோக
நவகண் டமதா நாவலந் தீவொடு
முவரொன் றியநீ ருடைக்கருங் கடலொடு
மேழ்பெருந் தீவு மேழ்பெருங் கடலும்
வாழ்வுடைத் தாகியும் வானவர் வைகு
மேம பூதல மிடையிடு திகிரிக்
காமர் மால்வரை கடந்தநள் ளிருளா
யண்டபித் தியினகத் தண்டகோ ளகைக்கீழ்
மண்டுமாழ் புனற்குமேல் வடக்கொடு குணக்கெதி
ரைம்பது கோடியோ சனைத்தென வளவை
யும்பரோ டிம்பரு முணர்வுற வுணர்வான்
றீதறு பான்மையிற் றெருட்டும்
போதமுற் றோங்கிய புராணசித் தமதே.

இதுவும் இடத்தன்மை, திணை - இதுவுமது. துறை - பேரண்ட வாழ்த்து. இதனுள், தே என்றது அன்னியதெய்வங்கள். புவனம்-இருநூற்றொருபத்துநாலு புவனமும், யாவும் யாவரும்-அஃறிணைகளும் உயர்திணைகளும். மேருநடுக்கொள் பூலோகம்-மேருவைத் தனது மத்திமத்தே தாங்கிக்கொண்ட பூலோகம். வானவர் வைகு மேமபூதல மிடையிடுதிகிரிக் காமர்மால்வரை - கடவுளர் அரமகளிரோடு மின்பமெய்தி வைகும் ஏமபூதலத்தை நல்லதண்ணீர்க்கடற்குந் தனக்கும் நடுவாகவைத்த சக்கரவாளகிரி யென்னு மழகிய பெரிய மலை. மண்டுமாழ் புனல்-கெர்ப்போதகம். வடக்கொடு குணக்கெதிர் என்பது வடதிசைக்குங் கீழ்த்திசைக்கு மவற்றிற் கெதிரான தென்றிசைக்கும் மேற்றிசைக்கு மென்பதாம். புராணசித்தம்- ஆகுபெயர். ஒழிந்த அகலமு முரையிற்கொள்க. பா-நேரிசை

யாசிரியம். எனவு மென்னு மும்மை யெச்சவும்மையாதலாற் காலத்தன்மையு முள.

நித்தமாய் மூன்று நெறித்தா யிலவமுதல்
வைத்தபான் மைக்குரித்தா மாண்பிற்றே யத்திகிரிச்
செங்கண்மா லுந்தியின்மேற் செங்கமலத் தோன்முதலா
மங்கண்ஞா லம்புகழ்கா லம்.

இது காலத்தன்மை. இதனுள் மூன்றுநெறியென்றது இறப்பெதிர்வு நிகழ்வு. இவை முதலியனவும் முன்றே பிரம கற்பமீருக வுணர்ந்துகொள்க. திணை பொதுவியல். துறை-பருவவாழ்த்து.

தன்மையலங்காரம் முற்றும்

உ-வது உவமையலங்காரம்

7. உவமையின் வகையே யுணருங் காலை
வினைபய னுறுப்புரு வென்ற நான்கினுந்
தமிதமி நிகழ்ந்துந் தம்மின் விரவியுங்
காதல் சிறப்பே நலன்வலி யுடனிழீ
போதிய வைந்து முறுநிலைக் களனு
யிருதிணை யைம்பா லிவற்றொடு மயங்கியு
முதலொடு சினைகளின் முறைமையிற் பிறழ்ந்து
முதல்சினை வினைகுண மின்றியு முயர்ந்தும்
பெருமையுஞ் சிறுமையும் பெற்றியிற் சிறந்து
மெண்மெய்ப் பாட்டி னெழில்பெற மரீஇ
யுகத்தினும் புறத்தினு மமர்தரு நெறித்தா
யுரனுடை யுரவோ ருளங்கொள முதனூல்
வரன்முறை புணர்க்கு மாண்பிற் றுகும.

(எ-ன்) வைத்தமுறையானே உவமையென்னு மலங்காரத்தினது பொதுவிலக்கண முணர்-ற்று.

(இ-ள்) உவமையென்னு மலங்காரத்தினது கூறுபாட்டை யாராயுமிடத்து வினையும் பயனு மெய்யு முருவு மென்னு நான்கும் காரணமாகத் தோன்றுவனவாகியும் அங்ஙனந் தோன்றுவன வொரு பொருளோடொருபொரு ளுவமஞ் செய்யும்வழி யொன்றேயன்றியிரண்டு மூன்று விரவுவனவாகியும் காதலுஞ் சிறப்பு நலனும் வலியு மவற்றோடுங் கிழக்கிடும் பொருளுமாகிய வைந்துந் தமக்கு நிலைக்களனாகியும் உயர் திணைக் குயர்திணையு முயர்திணைக் கஃறிணையு மஃறிணைக் கஃறிணையு மஃறிணைக் குயர்திணையு மாண்பாற் காண்பாலு மாண்பாற்குப் பெண்பாலும் பெண்பாற்குப் பெண்பாற்குப் பெண்பாலும் பெண்பாற் காண்பாலும் ஒருமைப்பாற் கொரு மைப்பாலு மொருமைப்பாற்குப் பன்மைப்பாலும் பன்மைப் பாற்குப் பன்மைப்பாலும் பன்மைப்பாற் கொருமைப்பாலு மயக்காதும் மயங்கியும் முதற்கு முதலும் முதற்குச் சினையும் சினைக்குச் சினையுஞ் சினைக்கு முதலுமாகப் பிறழாதும் பிறழ்ந் தும் முதலுஞ் சினையும் வினையுங் குணனு மின்றியு மவமங் கூறுவனவாகியும். பொருளினு முவம முயர்ந்து பிறப்பவுயர்வு பிறப் பிழிபு முவமிக்குங்கா லின்னவாகச் செய்யாது கேட் போர் மனங்கொள்ளும்படி சிறப்பிற்றீராவாகிச் சேர்தலியல்பு சிறந்தும், எட்டு மெய்ப்பாட்டினோடுங் கூடி யழகுபெறு நிலை யைத்தாகி, அகப்பொருளினும் புறப்பொருளினுஞ் சென்று பொருந்துநெறியை யுடைத்தாய்க் கற்றுவல்ல அறிவுடையோ ரறிவிற்குப் பொருந்த முதனூல் வரலாற்றுமுறைமையிற் றிரியாது சேர்க்கப்பெறும் பெருமையை யுடைத்தென்றவாறு.

இதனுள் நான்கினுமென்ற வும்மை யெச்சவும்மையாகலா னவை நான்குமே காரணமாகியவற்றோடுஞ் சொற்பொருள் காரணமாகவும் உவமை பிறக்குமென்றவாறு. அவை மேற் கூறப்படும் மயங்கியும் பிறழ்ந்து மென் றது எதிரதுபோற்றுந் தந்திரவுத்தி. இவற்றிற்கெல்லாம் உதாரணம் உரைநடை யானுஞ் செய்யுணடையானும் வருமாறு:—

புலியன்ன மறவனென்பது வினையுவமம். 'மாரியன்ன வண்மை'யென்பது பயனுவமம் 'துடியன்ன விடை' யென்பது

உறுப்புவமம். 'செவ்வானன்ன மேனி'யென்பது உருவுவமம். 'செவ்வானன்னமேனி' யென்பது வண்ணமொன்றுமே பற்றி யுவமஞ்சென்றது. "ஊர்ந்ததேறே சேர்ந்தோளுமையே, செவ்வானன்னமேனியவ்வா, னிலங்குபிறையன்ன விலங்குவால் வையெயிற்" றென்பது வண்ணத்தோடு வடிவும் பற்றியுவமஞ் சென்றது.

வள்ளைக்கொடிமிசைபாய் மைக்கயல்போல் வார்குழையி
னுள்புக்கு லாவருமை யுண்கண்ணாய்—புள்ளார்
வகுளாம் புயன்வரைமேல் வான்பிறைக்குன் செங்கை
முகுளாத தென்னோ மொழி.

இதனுள் வினையு முருவு முறுப்புமாகிய மூன்றுவமையு மொரு பொருட்கண்ணே பிறிதொரு பொருளுங்கூடி வந்த வாறு காண்க. இவை விரவுவமை. பகுதி - நாணநாடல். துறை - பிறைதொழுகென்றல்.

"பாவையன்ன பலராய மாண்கவின்" எ-து மகள்கட் சென்ற காதலுவமைக்கு நிலைக்களனாயிற்று. 'என்னனை' யென்பது மது. "முரசமுழங்குதானை மூவருங்கூடி, யரசவையிருந்த தோற்றம்போலப், பாடல் பற்றிய பயனுடையெழாஅற், கோடியர்தலைவகொண்டதறிந" எ-து சிறப்பினாற்பெற்றவுவமமாத லிற் சிறப்புநிலைக்களனாயிற்று. உலகத்து னியல்புவகையா னன்றி விகாரவகையாற் பெறுஞ் சிறப்பு 'ஓவத்தன்ன விட னுடைவரைப்பின்' என்புழி அந்நகரின் செயற்கை நலந் தோன்றக் கூறினமையின் நல னிலைக்களனாயிற்று. நலனென்பது அழகு. 'அரிமாவன்னவணங்குடைத்துப்பிற், திருமாவளவன் றெவ்வர்க்"கென ஒருவன் வலிநிலைக்களனாயிற்று. "அரவு நுங்குமதியி னுதலொளிகரப்ப" என்றது ஒன்றினிழிபுதோன்ற வுவமித்தலி னிழிபுநிலைக்களனாயிற்று.

குமர னனையானுங் குறமக ளன்னாளு
மமரர் குழாமெனக் கூண்டன்பர்—தமரணங்கே
நின்றிறைஞ்சு மாயோனை நின்றவூ ரங்கிதன்முன்
சென்றிறைஞ்சு வார்நீ திரும்பு.

இதனு ளுயர்திணைக் குயர்திணையும் ஒருமைப்பாற் கொரு மைப்பாலும் பன்மைப்பாற்குப் பன்மைப்பாலும் ஆண்பாலுக் காண்பாலும் பெண்பாற்குப் பெண்பாலும் வந்து திணையும் பாலு மயங்கா துவமையாயிற்று. பகுதி-உடன்போக்கு. துறை-இயைபெடுத்துரைத்தல். நகரடைந்தமைகூறலுமாம்.

"மகிழ்வார்க்கு மல்லார்க்குந், தாயாகித் தலையளிக்குந் தண்டுறையூரனீ," "கலங்கவிழ்ந்தநாய்கன்போற் களைதுணை பிறிதின்றிப், புலம்புமென் னிலைகண்டும் போகலனே யென்றி யால்" என்பனவிவை யாண்பாற்குப் பெண்பாலும் பெண்பாற் காண்பாலு மயங்கிவந் துவமை யாயிற்று.

அரிக்குழா மன்ன வடலரக்கர் வாவும்
பரிக்குழாந் தேர்க்குழாம் பாயுங்—கரிக்குழா
மோர்வாளி பட்டுருள்வா ஞெங்குசிலைக் கால்வளைகைக்
கார்வான மாலிமையோர் கண்.

எனவும்,

பிறைபுரை வெண்கோட்டுப் பிணர்த்தடக்கை வேழத்
திறைபுரந்த பொன்னகருக் கிப்பா—றுறைதருவான்
பூணவா வற்றெனமால் பொற்புருடை யாட்கி ரங்கும்
வேணவா நெஞ்சே விடு.

எனவும், வரு மிவற்றுள் உயர்திணையாண்பாற்பன்மைக் கஃறிணையாண்பாற்பன்மையும் அஃறிணைப் பன்மைச்சினைக் குயர்திணை யொருமை முதலும் மயங்கிவந் துவமையாயிற்று. வேழத்தையுடையவிறை ஈண்டிந்திரன். அற்றென-அதுபோலு மென. பூணவா - மனத்துட்பூண்ட ஆசை. வேணவா - வேட் கைப்பெருக்கம். இவ்விரண்டினுண் முன்னது திணை வாகைப் பொதுவியல். துறை-வில்வென்றி; அல்லது திணை-பாடாண்-துறை-கடவுள்வாழ்த்துமாம். பின்னது பகுதி-இரவுக்குறி, துறை-அருமைகேட்டழிதல்.

முத்த நகைவெம் முலைபோன் மலைகொடியே
யெய்த்த விடைநுதலுக் கேந்திழா—யொத்ததுதா
னேற்றுருவங் கொண்ட நிலாத்தளிரே கூற்றுருவம்
வேற்றுருவங் கொண்டனையாண் மெய்.

இதனுள், பன்மைச்சினைக்குப் பன்மைச்சினையும், பன்மைச் சினைக் கொருமைமுதலும், ஒருமைச்சினைக் கொருமைமுதலும், ஒருமைச்சினைக்கு ஒருமைச்சினையும், பெண்பாற் காண்பாலும் மயங்காதும் மயங்கியும்வந்துவமையாயிற்று. இதனுள் முத்த மும் நகையும் முலையும் சாதியேகவசனம். பகுதி-சேட்படை. துறை-தலைவன் பாங்கிக் கவயங்கூறல்.

'கருஞாயிறன்னான்,' விசும்புதோலுரிப்பனபோல,' 'மலை நடந்தனைய,' அமிர்துபுளித்தாங்கு' இவை முதலுஞ் சினையும் வினையுங் குணமுமில்லாதன வுவமையாயின.

"கடல்கண்டன்னகண்ணகன்பரப்பின்", "மாரியன்ன வண்மைத், தேர்வேளாயைக்காணிய", "தெள்ளமிர்தென்னத் திருந்தியதேமொழி", "ஏறுபோற்பீடுநடை" என்பன உவமை யினதுயர்ச்சியாற் பொருட்குயர்ச்சியாயின.

"அவாப்போலகன்ற வல்குன்மேற் சான்றோர், குசாப்போல வுண்டே மருங்கு" லென்பன கழியபெரியவாயினுங் கழிய சிறியவாயினுஞ் சிறப்பிற்றீரா வுவமையாயின. சிறப்பிற்றீர் வனவு முவமவொழிபிற் கூறுப. எண்மெய்ப்பாட்டினும் அகத் தினும் புறத்தினும் வருவன முந்து நூல்களுட் கண்டுகொள்க.

அஃதாக; இதன் முதனூல்செய்த தெண்டியாசிரியர்பண்பு முதலாகக் காரண மூன்றென்ப துணர்ந்து மிந்நூலுடையா ருறுப்பினைக் கூட்டிக் காரண நாலென்பதூஉம் நிலைக்கள னின்றென்பதூஉம் மிகைபடக் கூறலென்னுங் குற்றமாமாலோ வெனின்? ஆகாது; என்னை? தெண்டியாசிரியர் "வடிவி னளவின் வண்ணத்தின் வ'ரூஉ" மென்னுஞ் சூத்திர நோக்கி வடிவும்

பண்பினுளடங்குமென் றுட்கொண்டாரேனுமிந் நூலுடையார், உற்றுணரும் பண்பும் கட்புலனும்பண்புமெனப் பண்பினை வேறுபடக்கொண்டார், அங்ஙனங்கோடல் வடிவுயற்றிய பண்பு இருளின் கண்ணும் உற்றுணரப்படும்; வண்ணமாகிய கட்புலனும் பண்பு அவ்வாறுணரப்படாதாதலால் வடிவினைக் கூட்டி நாலென்றார். அன்றியும், "வினைபய மெய்யுரு வென்ற நான்கே, வகைபெற வந்த வுவமைத் தோற்றம்" எனவு மிக் கருத்தேபற்றி முதனூல் செய்த ஒல்காப்பெருமைத் தொல்காப்பியனாருங் கூறினார்; இதற் கதுவுமுந்து நூலாகலின் அவர் கருத்தே யிந்நூலுடையாரும் உட்கொண்டாரென வுணர்க.

அன்றியும், "விரவியும் வரூஉ மரபின வென்ப," சிறப்பே நலனே காதல் வலியோ, டந்நாற் சொல்லு நிலைக்களனென்ப," "கிழக்கிடும் பொருளோ டைந்து மாகும்," "முதலுஞ் சினையு மென் றாயிருபொருட்கு" "நுதலிய மரபினுரியவையுரிய", "உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங்காலை" பெருமையுஞ் சிறுமையுஞ் சிறப்பிற்றீராக், குறிப்பின் வரூஉ நெறிப்பாடுடைய," "பெருமையுஞ் சிறுமையு மெய்ப்பா டெட்டன், வழிமருங் கறியத் தோன்றுமென்ப" எனவுங் கூறிய சூத்திரங்களானு மேனையவுமுணர்க.

8. அதுவே,

நிறைவினுங் குறைவினு நிகழ்த்துத னெறித்தாய்த்
துறைதொறும் பழமையும் புதுமையுந் தோய்ந்து
விரியினுந் தொகையினும் விழுமிதி னடைபெறும்.

(என்) இதுவும் அவ் வுவமைக்காவதோர் பொதுவிலக்கண முணர்-ற்று.

(இ-ள்) அதுவே-அவ்வகைப்பட்ட வுவமை யென்னுமது, நிறைவுவமை குறைவுவமை யெனப் புலவராற் கூறுதலைத் தனக் கிலக்கண நெறியாகவுடைத்தாய் வினைமுதலாய் நால் வகைப்பட்ட இடந்தோறு முந்து நூற்புலவராற் கூறப்பட்ட தொன்மைத்தாகியும், அதன் பின்னர் அவ்வக்காலத்துப் புலவ

ரார் புதுவதுபுதுவதாகக் கூறப்பட்டுவருவனவுமாகப் பொருத் தமுற்று விரியுவமை தொகையுவமை யென இரு திறத்தினும் விழுமியதாக நடைபெறு மென்றவாறு.

விழுமிதினென்று சிறப்பித்தவதனால் இவை நான்கும் இனிமேல் வரும் விரியுவமையனைத்திற்கும் பொதுவாமெனவும், இன்னு மவ்விலேசானே அவற்றுள் விரியுவமையுந் தொகை யுவமையும் வினை முதலிய நான்கினோடு மெட்டாமெனவுங் கொள்க; என்னை? "நாலிரண் டாகும் பாலுமா ருண்டே" என் றாராகலின்.

9. அவற்றுள்,

முக்கியப் பொருட்டிற முற்றுத னிறைவே.

(எ-ன்) நிறைவுவமையின திலக்கண முணர்-ற்று.

(இ-ள்) உவமேயத்தி னன்குகூறுபாடு முவமையினு முற்றக் காண்பன நிறைவுவமையா மென்றவாறு.

ஆரா வமுத மளித்ததிருப் பாற்கடலு
ளாரா யணனு கனைமீது—நேரிழா
யெப்படியே கண்வளரா நின்றா னனுமரங்கத்
தப்படியே கண்வளர்வா னும்.

இது நிறைவுவமை. இதனுள், திருப்பாற்கடனு தனுவமை. ஆரிய ரிதனைப் பூரணவுவமை யென்ப. அங்ஙன மாதல், அவன் கண்வளரா நின்றதுபோல விவனுங் கண்வளரா நின்றானென வினையுவமையும், அவன் றிருமேனி யெப்படியே யிருக்குமென்னும் அப்படியே யிவன் றிருமேனியுமிருக்கு மெனவே வடிவினோடு காந்தியாகிய பண்பும், அவனைச் சேவிப் பார்க்கச்சேவை காரணமாக முத்தியாகிய காரியம் பயக்கு மெனப் பயவுவமையும் உவமையாகிய திருப்பாற்கடலிடத்தும் வினை முதலிய நான்கும் பூரணமாகி யுவமை யுயர்ந்தபடியுங்

காண்க. எப்படியே கண்வளரா நின்றனெனுமென்பது பிரமன் முதலாயினோர் புராணங்களெப்படியே கூறுமென்பதாம். பய வுவமையென்பது ஒன்றன்றொழி லேதுவாகப் பிறக்குங் காரி யம். அஃதெச்சமாயிற்று. நேரிழா யென்பது மகடூஉ முன்னிலை. இரண்டாற்றிடை யரங்கத்துத் திருமதிட்குப் பாற்கடனள் ளிடை யாவரண முவமை. திணை-பாடாண். துறை-கண்படை வாழ்த்து.

பனிமதிக் கிரணம் வியன்கள நடுவட்
பரந்துடல் கதுவுபோர்ப் பாய்மா
முனியுறப் பொழியு மிருண்மத முடுக்க
முரணிழந் திரியல்போம் வேடர்
குனிதிரைத் திப்பாற் கடலினைக் கடைநாட்
கொதித்தெழுங் கருவிடந் தொடரத்
தனிதனி யுலக்கற் றறிவிழந் திரிந்த
தலைமைவா னவரையொத் தனரே.

இதுவுமது. இதனுள், திருப்பாற்கடலீன்ற கருவிடந் தொடர்ந்தது வெண்ணிலவு வியன்களநடுவட் பரந் துடல் கதுவிய போர்ப் பாய்மாப் பொழியு மிருண்மத முடுக்கினதற் குவமை. முரணிழந் திரியல்போம்வேடரென்பது தனித்தனி யொருவர்க்கொருவ ருதவாது ஓடின தலைமை வானவரையொத் தன ரென்றவாறு.

இருண்மத முடுக்கவெனவே பண்பும் வடிவும் வினையுவ மையும், அறிவிழந்தெனவே அதனாலாய காரியமாதலாற் பய னுவமையுமாகிப் பூரணவுவமையாயவாறு காண்க.

10. ஒன்று தியசில லொப்பது குறைவே.

(எ-ன்) குறைவுவமையாமா றுணர்-ற்று.

(இ-ள்) உவமேயத்தின் வினை முதலிய கூறுபாடு நான் கும் ஒவ்வாது அவற்றுள் ஒன்று முதன் மூன்றொப்பது குறை வுவமையா மென்றவாறு.

இஃது "ஒரீஇக் கூறலு மரீஇய பண்பே" என்பதன்பாற் படும்.

வாவித் திருக்குருகூர் மாறுநின் வண்டமிழென்
ஞவிற் கினிமை நயப்பதாற்—றேவர்
மருந்துநிக ரென்றே மதித்துரைப்பன் முற்றப்
பொருந்துவமற் றின்மையினிப் போது.

இஃது ஒன்றொருத்த குறைவுவமை.

வெள்ளைப் பிறைக்கோட்டு வெங்கரியை வென்றவிரற்
பிள்ளைப் பெருமான்றென் பேரைவாழ்—வள்ளைக்
குழையாரைத் தோய்ந்தகன்ற கொற்றவனைக் காய்ந்த
பிழையார் பொறுப்பார் பிறர்.

இஃது இரண்டுபெற்றவுவமை.

பாயுங் கருங்கயல்போற் பாங்கியிவ ளென்றுமருங்
கேயும் படிதா வினதியற்பாத்—தோயும்
புவிநா வலர்புகழ்மால் புட்குழியாள் செவ்விக்
கவிஞ னனத்துலவுண் கண்.

இது தொழில் பண்பு வடிவு மூன்றும்பெற் றொன்று குறைந்தவுவமை.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி. பகவன் முதற்றே யுலகு" "மாதர் முகம்போ லொளிவிட வல்லையேற், காதலை வாழி மதி" என்பனவும் எடுத்துக்காட்டுவமை எனவும், ஒன்றொருத்த குறைவுவமை எனவும் படும்.

செய்ய கமலமுகஞ் செங்கனிவாய் முத்தநகை
வெய்ய களபமுலை மின்மருங்குன்—மொய்யிமாய்
பையரவப் பாயலாண் பாடகத்தான் மால்வரைவாழ்
தைய லடிமாந் தளிர்.

இதுவுமது. பகுதி-சேட்படை. துறை-தலைவன் பாங்கிக் கவயவங்கூறல். வடநூலார் உலுத்தவுவமை யென்பது மிது.

முந்துநூற் புலவராற் கூறப்பட்டுத் தொன்றுதொட்டுவரு முவமையாவன-'புலிபோற்பாயுமறவன்,' 'மாரியன்னவண்மை,' 'துடிபோற் சுருங்கு மருங்குல்,' 'பவளம்போன்ற செவ்வாய்,' 'குறைபடுமதியங்தேயக்குறுமுய றேய்வதேபோல்,' 'நஞ்சுமமிர்த முமேபோல்குணத்த,' 'கருமணியம்பாலகத்துப்பதித்தன்ன,' 'பொருகயற்கண்' என்பன முதலியன.

அதன்பின்ன ராகுங்காலங்கடோறும் புலவராய் புதுவது புதுவதாகப் புணர்த்தவற்றுட் சில வருமாறு:

கோமுறைய காஞ்சிரைதாம் பழுத்தருகே நிற்பவற்றிற்
குறுகா தாங்குக்
காழிலவாங் கொழுங்கதலிக் கனிகளைச்சேட் சென்றருந்துங்
கவிகண் மார்க்க
மூழிலவாய்ப் படைத்தபொருள் பிறர்க்குதவா
துசித மான [வுலுத்தரைநீத்
வாழ்வுடையோர் பொன்மனைச்சென் றமிர்தருந்திப்
மார்க்க மானும். [பசிதணிவார்

வாசமொரு சிறிதின்று யிணரூழ்த்த செம்மலர்தம்
மருங்காய் நிற்பப்
பூசல்வரி வண்டினங்க ணிளிடைப்போய் வாலிதாம்
பூந்தேன் மாந்த
லாசறக்கற் றுணர்ந்தறியா ரவைக்களநீத் தேசெலச்சொல்
பவராய் நுண்ணூல்
காசறக்கற் றவர்கழகத் தடைந்துநல னுணர்பவர்தங்
காட்சி மானும்.

உற்றவயக் களிற்றினொடும் பிடியினையாங் கொருபாந்த
ளொருவாய்க் கொள்ளக்
கற்றதுகண் டிருதலைப்பு ளவற்றிருகை கவர்ந்தெடுப்பக்
கௌவு காலைப்
பற்குலமுக் கிடருழந்த நிலையினைவந் தடியிடுநாட்
பசைய தாகப்
பெற்றபொரு ளினைப்பேணி முதலுமிழுந் திடருறுவோர்
பெற்றி மானும்.

உச்சவான் மலைச்சிகரத் துறுகொடிகள் படர்பாங்க
ருடைய வாகும்
பச்சைவேய்ங் கழைத்தலையிற் சுழல்வனவாய்த்
பயிலு நீர்மை [தோகைநடம்
மொய்ச்சுலாங் குழற்கழைக்கா ரிகைபாசம் பூண்டகழை
முடிமே னின்றே
விச்சைமே தகப்பவுரி காட்டுவதா மெனக்கவினும்
விளம்பின் மன்னோ.

காவின்மேற் படுபலவின் கனிகடுவன் கொடுசினைதாழ்
காமர் வல்லி
மாவின்மேற் படர்ந்ததன்மேன் மந்திகடாம் வயிற்றிடையே
மகவைத் தாங்கித்
தாவினுற் றவறுடைத்தா மெனவருவ தொடுபோகுந்
தன்மை கூத்த
ரோவில்வான் கழைக்கயிற்றின் முழவுதழீஇ யெதிர்நடப்ப
தொப்ப தாமே.

வெதிரெதிர்சென் றேபொரவின் டுகுதழலவ் வெதிரினையும்
வெண்ணி ருக்கி
யெதிர்பொருதற் றிறனறியாச் சந்தனத்தேம்
மெரித்த மார்க்கம் [பொதும்பரையு
பதிரெனவாழ்ந் திடுசிறியார் விளைத்தசின் மவர்திருவின்
பெற்றி தேய்த்துச்
சதிருடன்வாழ்ந் திடுதலைமைத் தமர்திருவுருந்
தன்மை மானும். [தொலைத்திடுமத்

வீங்குபரா ரைக்கழைகண் முனிந்தனவா யுயிர்த்ததமன்
மிறைசெய் காலை
யோங்குபசுங் கழைக்குலங்கண் மழைக்குலங்கிண்
லொழித்த பான்மை [டுகுபுனலா
தீங்குவிளைத் திடுமுதுவ ருறுமிடரை யகருலத்துட்
சிறுவர் மன்னர்
பாங்குபடைத் துளகருணை முகத்தவராற் றணித்தருளப்
பான்மை மாறும்.

கருநிறப் பசுஉக்காழ்க் களங்கனி வகுளக்
காமர்தீங் கனிகண்மாங் கனிகள்
பெருமிதப் பலவின் கனிசுவைத் ததன்பின்
பீடுலாங் காழிலாக் கனியை
யொருமுகப் படவுண் சுகமுறு சுகமாங்
குபயநூல் கலைமுறை முறையே
குருமுகத் துணர்ந்த பின்னர்நான் மறைதேர்
குறிப்பினர் சுகம்பொரு வருமே.

இவை எட்டும் குருகாமான்மியத்திற் கந்தமாதனச் சருக்கத்திற் பாட்டு. இவற்றுள் நால்வகைக்கும் புதுவதா முவமை புணர்த்தவாறு காண்க.

11. உவமையு முருபு மேதுவும் பொருளுந்
தவலருஞ் சிறப்பிற் றும்விரி வனவிரி.

(எ-ன்) வைத்தமுறையானே விரியுவமைக் கிலக்கண முணர்-ற்று.

(இ-ள்) உவமையும், உவமவுருபும், வினை பய முறுப் புருவென்ற நன்கினு ளொன்றும், உவமேயமும் என்னு நான் கும் ஒன்றற்குவமங் கூறுமிடத்துத் தொகாது விரிவன விரியு வமையா மென்றவாறு.

தவலருஞ் சிறப்பிற் றும்விரிவன வென்றதனாற் பெயரு முறையுந் தொகையுஞ் சிதையாமல் வருதல் சிறந்ததென் றுணர்க. அவையாவன: பவளம்போலச் செவ்வா யென்புழி, பவளம் உவமையெனவும் உவமானமெனவும் படும். போல வென்பது உவமவுருபு. செம்மை யென்பது குணமாகியவேது. வாயென்றது உவமேயமெனப்படும். இப்பெயர் - பெயர், இம் முறை முறை, இத்தொகை தொகை யெனக்கொள்க

கருங்குவளை போற்கருங்கண் கன்னல்போ லின்சொற்
சுருங்கு துடிபோற் சுருங்கு—மருங்குல்
பிடிபோலி யங்குநடைப் பெய்வளையைக் கண்டாற்
குடிபோங் குடிபோங் குணம்.

இதனுள் உவமைமுதலிய நான்கும் முறையே வந்தவாறு காணக. அன்றியும், வினை பய முறுப் புரு வென்ற நான்குவ மையு மிதனகத்து வந்தவாறுங் கண்டுகொள்க. அடுக்குத் துணிவின்மேற்று. குணம்-அறிவு குடிபோமென்றல் தன்னி லையி னீங்குமென்றல். பகுதி-பாங்கற் கூட்டம் துறை-தலைவன் வியத்தல்.

இலவிதழ்போற் செவ்வா யியற்றமிழ்போ லின்சொல்
கலகநன் போலவடுங் கண்க—டிலகப்
பிறைபோல் வளை நுதலிப் பெண்ணமிர்தைக் கண்டா
லறைபோ மறைபோ மறிவு.

இதுவுமது. இதனுள்ளும் நான்குவமையும் வந்தவாறு காண்க. துறை-இதுவுமது. இதன்கண் ணடுக்குந் துணிவின் மேற்று. அறைபோதல்-கீழறுத்தல்.

12. உரைத்த நான்கினு ளொன்றிரண் டிடையன
யாப்பினு ளிடைப்பட் டெஞ்சலுந் தொகையே.

(என்) ஏனைத் தொகையுவமையிலக்கணமுணர்-ற்று.

(இ-ள்) விரியுவமைக் குவமை முதலாகச் சொல்லப்பட்ட நான்கனுளிடைப்பட்டன விரண்டனு ளொன்றேயாயினும் இரண்டேயாயினும் யாப்பினிடத் திடைப்பட்டுத் தொகுவது தொகையுவமையா மென்றவாறு.

இதனுள், தொகையென்றதல்லது உவமையென்பது பெற்ற தியாதோவெனின், விரியுவமைக்கு முதலே யுரைத்த சூத்திரத்தாற் பெற்றதெனக்கொள்க.

அம்பவளச் செவ்வாயு மாரநிரை வெண்ணகையும்
பைம்பொ னசலப் பணைமுலையின்—விம்பமுடன்
கண்டுகளித் தேந்திருமால் காட்கரையார்
கன்னலின்சொல்
லுண்டுகளிப் புற்றிலமன் றே.

இஃ துவமவுருபொன்று மிடையிற் றொக்க தொகை யுவமை; இதனுள் அம்பவளச்செவ்வாய் முதலியவற்றிடையிற் போலவென்னு முவமவுருபு தொக்கதனாலறிக. நெஞ்சமே யென்னு முன்னிலையு மெழுவாயு மெச்சம். மன்னும் ஓவும் அசை. பகுதி - இயற்கை. துறை - கிளவி வேட்டல்.

நீலம்போற் கண்ணு நிறைமதியம் போன்முகமும்
வாலமதி போனுதலும் வண்டிமிர்பூங்—கோலத்
தொடைத்துளப மாலைத் தொழுமாறன் வெற்பிற்
படைத்துளதேன் மன்னுயிர்நண் பா.

இஃதுவமவேதுவென்பதொன் றிடையிற்றொக்க தொகை யுவமை.

(இ-ள்) கருங்குவளைபோலக் கரியகண்ணினையும், எல்லாக் கலைகளு நிரம்பின மதிபோன்ற செம்முகத்தினையும், பிறை போல வளைந்த நுதலினையும் வண்டுகளாரவாரிக்கு மழகிய தொடையாகிய துளபமாலிகையையுடைய மாயோனைத் தொழு

மாறன்றுடரிவெற்பிற் றனக்குறுப்பாகப் பெற்று நிற்ப நீ கண்டதுளதே லஃதென் னிலைபெற்ற வுயிராமென்றவாறு.

இதனுள் நிற்ப நீ கண்டது என்னுஞ் சொற்களையும் அஃதென்னென்னுஞ் சொற்களையு மெச்சமாக நின்றனவாக்கி விரித்துரைக்க. பகுதி-பாங்கற் கூட்டம் துறை-அவ்விடத் தேகல்.

அஃதாக; இதன் முதனூல் செய்த தெண்டியாசிரியர் வினை பய முதலிய வேதுக்கடொகுவதே தொகையுவமையென நோக்கவும் இந்நூலுடையா ருவமவுருபு தொகுவதுந் தொகையுவமையென்ற தென்னையோவெனின், அஃதே; நன்று சொன்னாய்! இவையிரண்டிற்கும் முதனூலாகிய தொல்காப்பியத்துள் "உவமைத் தொகையே யுவமவியல" என்பதனாலும், அதன் பின்னர் நேமிநாதர் பவணந்தி முதலியோரும் "உவமவுருபி லதுவமத் தொகையே" என்பதனாலுங் கூறப்பட்டது.

பவளவாய் முத்தநகைப் பைந்தொடியீ ருழி
யவளவாய்க் கங்கு னெடிதாமோ—துவளருவிச்
சோலை மலையார் துணைத்தோளிற் பைந்துளப
மாலை மலையா மயிற்கு.

என்ப திரண் டிடையிற் றொக்க தொகையுவமை; என்னை? பவளம் போலச் சிவந்த வாயினையு முத்துப்போல வெளுத்த நகையினையுமென்னு முவமவுருபும் பண்பு மிடையிற் றொக்கதா லென்றுணர்க. திணை-பெருந்திணை. துறை-கண்டுகைசோர் தல்.

கறைவேல்விழி யிலவிதழிதழ்
நறைநாண்மல ரஃதானனம்
புருவஞ்சிலை யுருவம்புய
லுருவம்புரி குழலெனுமது
பொன்னங்கிரி கொங்கைத்துணை

மின்னென் றுரை யிடைகண்டிலன்
எனவாங்குக்
கற்றறி வுடையவென் னிறையினைக் கலந்து
ணற்றிரு வுறைவிட நண்பா
சொற்றமிழ் மாறன் றுடரிவண் பொழிலே.

இதுவு மிரண்டு தொக்க தொகையுவமை. இஃதாறடித்தா யொன்றியும் ஒன்றுதும் வரும் வஞ்சித்தளையான், எனவாங்கு என்னுந் தனிச்சொற்பெற்று மூன்றடி நேரிசையாசிரியச்சுரிதகத்தாலிற்ற குறளடி வஞ்சிப்பா. பகுதி - பாங்கற்கூட்டம். துறை - இயல்பிடங்கூறல்.

'இடைப்பட்டெஞ்சலு'மென்ற வும்மையா னிடைப்பட்டுத் தொகாது முதலானும் முதலைக்கூறச் சினையறிகிளவியாகிய வாகுபெயரானு முவமையு முவமவுருபும் விரிந் திற்றி லிரண்டு தொகுவனவு முளவென்பதூஉந் தோன்றி நின்றது.

கொடிபோல் வடவரைபோற் கொவ்வைபோற் காமற்
பிடிபோ லிளமான் பிணைபோல்—வடிவமைந்த
தென்னா ருயிரமரர்க் கின்னமிர்தன் றீந்தபிரான்
றன்னாகை யன்னா டனக்கு.

(இ-ள்) கொடிபோ னுடங்குகின்ற விடையினையும், வடமலை போலப் பெருத்த முலையினையும், கொவ்வைக் கனிபோலச் சிவந்த வாயினையும், அழகிய பிடி போன்ற மென்னடையினையும், இளைய மான்பிணைபோல வெருண்ட நோக்கினையு முடைத்தாகிய வடிவா லழகமைந்திருப்பதொன்று; தோழீ யெனக்குயிர்போலச் சிறந்தவனுமாகி யமரர்க்கு முன்னைநா ளமிர்த மீந்த பிரான் றிருநாகையனையாட்கென்றவாறு.

இதனு ளீற்றில் விரித்த விரண்டுஞ் செய்யுட்கட்டொக்கவாறு காண்க. தோழீ யென்னு முன்னிலை யெச்சமாயிற்று. பகுதி-சேட்படை. துறை-தோழிக் கவயவங்கூறல்.

இரண்டுமென்ற வும்மை யெச்சமாதலா னிற்றின் மூன்று தொகுவனவுமுள.

அன்னநடை மானேக் கணியிழாய் வார்சுமந்த
பொன்னைசலந் தன்னைப் பொறுப்பதாய்—முன்னுதித்த
வெய்யா நடுவறக்கொன் றிட்டதைவைத் தென்னேசெங்
கையான் மறைத்தமையுண் கண்.

என்பது, அன்னநடை போன்ற மென்னடையினையு மானேக் குப்போன்ற வெருண்ட நோக்கினையு மழகிய பூணினையு முடையாய்! வாரைச் சுமந்த வாய்ப் பொனமலை போலப் பணைத்த முலையானவை தம்மைச் சுமப்பதுமாய்த் தாம் பிறந்து பணைப் பதற்கு முன்னை பிறந்த வுடன்பிறப்பாகிய தேயா நடுவினை முற் றக்கொன்றவற்றைக் கொல்கவென வெளியில்வைத்து யானுய் யும்படிக் குனதுயிர் போன்ற தோழியைக் காட்டித்தந்த மையுண் கண்களைக் கைகளான் மறைத்த தென்ன பேதை மையோ வென்றவாறு.

உண்கண்களையென் றோர் சொல் விறுதி யிரண்டாவது தொக்கு விரிந்தது. ஒழிந்த சொல்லெச்சங்களும் குறிப்பினுல் விரித்துரைத்தவாறுங் காண்க. பகுதி - இடந்தலை துறை-நாணிக் கண்புதைக்க வருந்தல்.

13. இருமையு மொருதொடர் பினுளுற வியல்பே.

(எ-ன்) இன்னுமத் தொகை விரி யுவமைகட் காவதோர் விதியுணர்-ற்று

(இ-ள்) அத்தொகையுவமையும் விரியுவமையு மாகிய விரண்டு தன்மையு மொருசெய்யுளகத்து வருதலுமா மென்ற வாறு. உம்மை செய்யுள் விகாரத்தாற் றொக்கது.

மொழியமுத முற்று முலைமுகுளம் வைவேல்
விழிமகிழ்மா றன்றுடரி வெற்பி—லெழின்மயிற்கு
நன்போத விழ்குழல்கார் நண்பனேசெம் பேனி
பொன்போன்மபல் வெண்முத்தம் போன்ம.

என்பது, நண்பனே! மகிழ்மாறன் றுடரிவெற்பி லழுகிய மயில் போலுஞ் சாயலுடையாட்கு மொழி யமுதம் போலும்; இள முலை தாமரைமுகுளம் போலும்; விழி கூரிய வேல்போலும்; செருகிய முல்லையரும்பவிழாநின்ற குழல் கார்போலும்; சிவந்த மேனி பொன்போலும்; வெண் பல் முத்த நிரைபோலு மென்ற வாறு

இதனுள் முன்னைய நான்கும் உவம வுருபு மேதுவு முவமே யத்தை முன்னிட்டுத் தொக்கன. எழின்மயின் முற்றுவமை. பின்னைய விரண்டும் விரியுவமை போலு மென்னு முவமவுரு பீற்றினுகரம், "செய்யுமெ னெச்சவீற் றுயிர்மெய் சேறலுஞ், செய்யுளு ளும்முந் தாகலு முற்றே னுயிருமுயிர் மெய்யு மேகலு முளவே" என்பதனுல் முற்றுதலின் உயிர் கெட்டது "மெல் லெழுத் தியையின் னகார மாகும்" என்பதனுல் லகாரம் னகார மாய்த் திரிந்தும், "னகார முன்னர் மகாரங் குறுகும்" என்ப தனு லீற்றுமகாரங் குறுகியும், "செய்யு ளிறுதிப் போலி மொழி வயின், னகார மகார மீரொற்ருகும்" என்பதனு லீரொற்றுட னிலையாயும், மேலே பகரவொற்று வருதலின் செய்யுளிடைப் பட்டும் வந்த முற்றுப் போன்ம் என்ருயிற்று. "ஐவிரைமாண் பகழியரந்தின்வாய்போன்ம்போன்ம்போன்ம். பின்னுமலர்க் கண்புனல்" எனப் பரிபாடலாகிய சங்கச் செய்யுளகத்தும் பகர மேலே வருதலாற் செய்யுளிடைப்பட்டும் வந்தமை காண்க. இது தொகைவிரியுவமை.

இன்னும் வேறுபட வருவனவெல்லாந் தொகைவிரியு வமைக்க ணமைக்க.

14. அவைதாம்,

வெளிப்படை குறிப்பினும் விழுமி தினடைபெறும்

(எ-ன்) இதுவு மவ்விருவகை யுவமையின் கூறுபா டுணர் - ற்று

(இ-ள்) அங்ஙனங் கூறப்பட்ட விரியுவமையுந் தொகை யுவமையுமென்னு மிரண்டும் வெளிப்படையுவமங் குறிப்புவம மென்னு மிரண்டாய் விழுமிதாக நடைபெறு மென்றவாறு.

பவளச்செவ்வா யென்புழி இரண்டற்கும் பொதுவாய செம்மைக் குணத்தை வெளிப்படையாகக் கூறினமையான், குறிப்பின்றியுவமை கொள்ளப்படுதலாலானும், பவளவாயென நின்றவழிப் பவளத்தினையும் வாயினையுங் கூட்டிச் செம்மைக் குணம் பற்றி யுவமஞ் செய்ததெனக் குறித்துக்கொள்ளப்படுவ தல்லது வல்லென்ற பவளத்திற்கும் மெல்லென்ற விதழிற்கு முள்ளதோரொப்புமைக் குணங்களாண்டில்லை யென்பதூஉம், பானல்போற் கருங்கண் ணென்புழியும் இரண்டற்கும் பொது வாய கருமைக் குணத்தை வெளிப்படையாகக் கூறினமையாற் குறிப்பின்றி யுவமையே கொள்ளப்படுதலானும், பானலுண் கண் ணெனநின்றவழிப் பானலையுங் கண்ணினையுங்கூட்டிக் கருமைக் குணம்பற்றி யுவமஞ்செய்ததெனக் குறித்துக்கொள் ளப்படுவதல்லது பல விதழினோடும் பலவல்லியுந் தாதுவுங் கூடிய பரிமளப்போதிற்கும் நீண்டு பிறழ்ந் துலாய்க் குழைமேற் றுறய கண்ணிற்குமுள்ளதோ ரொப்புமைகளாண்டில்லை யென் பதூஉமுணர்க பிறவுமன்ன; என்னை? “சுட்டிக் கூறா வுவம மாகிற், பொருளெதிர் புணர்த்துப் புணர்ந்தன கொளலே” என்றாராகலிற் கொள்க.

விழுமிதி னடைபெறு மென்றதனால் விழுமிதாய குறிப் புவமையுமுள அவையு மேற்காட்டுதும்.

> பாற்கடல்வெய் யோனிலொளி பாரித்த சோதிவட
> நூற்கடலைத் தென்னுரைநன் னூற்கடலாய்
> —மாற்கடிமை
> வாய்ந்தாரீ டேற வகுத்தளித்தான் றண்ணளிதாந்
> தாந்தா மெனும்வகுளத் தான்.

இது விழுமிதாய குறிப்புவமை.

(இ-ள்) உலகின்கண்ணேயிருந்து நோக்குவார்க்குத் திருப்பாற்கடலின்கட்டோன்று முதயதிவாகரனைப்போல ஒளியைப் பாத்தின சோதிச் சொரூபத்தை யுடையான் அவன் யாரெனில் வடமொழியாகிய சுருதிக் கடலைத் தென்னுரை நூற்கடலாக்கித் திருமாலுக்கடிமையாகத் தோன்றினார் பேரின்ப மெய்தப் பாடித்தந்தான் குளிர்ந்த வண்டுகள் தாந்தாமெனப் பாடித் தேனையுண்ணும் வகுளமாலிகையை யுடையான்; அவன் பரம கருணையிருந்தபடியோ! வென்றவாறு.

இது விழுமிதாய குறிப்புவமையாயது, இதனுள், திருப் பாற்கடலிற்றோன்று முதியதிவாகரன் றனது செய்யமேனியி லாயிரங் கிரணங்களைப் பரப்பி யுலகத்திருளைத் துரத்தி யுலகி னுள்ளார்க்குக் கடபடாதிகளைக் காட்டி யின்பத்தைப் புரந்தாற் போல விவனும் வெண்டிரைப் பொருநைத்துறை மாடத் திருக் குருகூரினிடத்துச் சிவந்த மேடுந் தோன்றித் திருவாய்மொழி யாகிய வாயிரம் பாடல்களையும் விரித்ததனோடு மன்னவாகனத் தினுந் தோன்றித் தன்னை மனோவாக்குக் காயங்களாற் றியா னித்தும் வாழ்த்தியும் வணங்குவார்மனத்து ளறியாமையாகிய வந்தகாரத்தை நீக்கிப் பரப்பிரமத்தைக் காட்டித்தருவனென வினையுவமம் பயவுமம் வடிவுவமம் உறுப்புவமமென்னும் நான் குவமையுங் குறிப்பினாற் கொள்ளக்கிடந்தமையானெனக் கண்டு கொள்க.

தண்ணளி .... தான் என்பதற்குக் குளிர்மையுடன் கூடியதாய வண்டுகள் பாடித் தேனையுண்ணும் வகுளமாலி கையை யுடையானெனினுமாம் வெண்டிரைப் பொருநை மாடத் திருக்குருகூரொடும் அன்ன வாகனமுந் திருப்பாற் கடற்குவமை.

இக்குறிப்புவமை இந்நூலுடையார் யாண்டுப்பெற்றா ரெனின்? நலமிகு புலமை நக்கீரர் "உலக முவப்ப வலனேர்பு

திரிதரு, பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாஅங், கோவறவிமைக் குஞ் சேண்விலங் கவிரொளி" எனக் கூறிய முருகாற்றுப்படுத்த துட் பெற்றாராம்.

வாழ்த்தெல்லாம் பாடாணுதலால் திணை-பாடாண்சார்ந்த பொதுவியல். துறை-பனுவல்வாழ்த்து; அன்றியும், வாகையைச் சார்ந்த பொதுவியலிற்கூறிய பாடல்வென்றியுமாம்.

மின்பதிந்த கார்மேனி விண்ணகர்மா லைப்புலவன்
பின்பதிந்து செசு‍ற பெருமானை — முனைபதிந்து
சேவித்தா ராளுந் திருநாடு தேவரெனப்
பாவித்தார்க் கெட்டாப் பதம். (162)

இதுவுமது; என்னை? மின்குடிகொண்ட கார்போலுந் திருமகள் குடிகொண்ட மார்பினோடுங் கூடிய கரியதிருமேனியையுடையான் எனக் குறிப்புவமை கொள்ளக்கிடந்தமையானெனக்கொள்க. தேவரெனப் பாவித்தார்க் கெட்டாப்பதம் என்பது-கண்டாகன்னனாலறிக. திணை-பாடாண். துறை பழிச்சினர்ப்பரவல்.

15. உவமே யத்திய லுயர்த்திய பின்ன
ருவமப் பொருளிய லுயர்த்தி முடித்தலுங்
கவினப் பொருட்குறிற் கடிநிலை யிலவே.

(எ-ன்) இஃது தவ்வுவமத்திற் செய்தாதசெய்து வித்தது.

(இ-ள்) முதலே யுவமேயத்தினது பட்டாங்கை யுயர்த்திக் கூறி, அதன்பின்னர் உவமப்பொருளின்பட்டாங்கை யுயர்த்தி முடித்தலும் அவ்வுவமேயத்திற் குயர்ச்சி குறிப்பினாலுண்டாம் படி பயனிலை தோன்றுமெனி னீக்கப்படா தென்றவாறு. கவின் ஆகுபெயர்.

முத்திரைக் கைம்மாறன் மொழிந்ததிரு வாய்மொழியே
சத்தியநூ லென்பர் தகைசான்ற—மெய்த்தமிழோர்

மேதினிமே லாரணப்பா மெய்த்திருமா லேபரனென்
றோதியதூஉ மாதியினி லுண்டு.

(இ-ள்) திருஞானமுத்திரைக்கையினையுடைய காரிமாறப்பிரான் ஸ்ரீமந்நாராயணனே பரதத்துவமென்று அவனது சொரூபரூப குண விபூதிகளைக் கூறிய திருவாய்மொழியே யுண்மைநூலென்றுபெருமை பூர்த்தியான வாய்மைத் தமிழ்ப்புலவோர் கூறுவர். அத்திருவாய்மொழியேயன்றி யுண்மைப்பொருளான திருமாலே பரதத்துவமென் றாதிகாலத்துப் பூலோகத்துக்கு மேலாய சத்தியலோகத்தினுமிருந்து வடமொழியாகிய சுருதி கூறியதூஉ முண்டென்றவாறு.

எனவே, ஆதியாய்ச் சத்தியலோகந் தொடங்கிப் பரந்த வடமொழியா யுணர்த்திற்றென்று சுருதியாகிய நூலை மிகச் சிறப்பித்துக் கூறுவானாகித் திருவாய்மொழியாகிய நூலை யுயர்த்திக் கூறுததுபோல வியல்பினுலாய வுவமங் கூறினாராயினும், மண்ணின்குடத்தோடு பொன்னின்குடத்திற்குண்டாய வேற்றுமைபோல அந்தணரு மேனை மூவகைக் குலத்தோரு மோதுவதாகவும் பரந்துபோகாதே தமிழ்மொழியா லெவ்வுலகத்தாரும் பரதத்துவத்தையுணரும்படிக்கு மறைவின்றி யிருட்டற வேதசாரத்தை யெடுத்துக்கூறித் தெருட்டிற்றெனத் திருவாய்மொழிக்கேற்றமானதோர் பயனிலை குறிப்பினாற் றோன்றினவாறு காண்க. என்னை? "உவமத் தன்மையு முரித்தென மொழிப, பயனிலை புரிந்த வழக்கத் தான" என ஒல்காப் பெருமைத் தொல்காப்பியனார் கூறிய விலக்கணத்தானும், "பாரி பாரி யென்றுபல வேத்தி-யொருவற் புகழ்வர் செந்நாப் புல்வர்-பாரி யொருவனு மல்லன் மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே" என்னுஞ் சங்கச் செய்யுளாகிய இலக்கியத்தானு முணர்க. திணை-பாடாண். துறை-பனுவல் வாழ்த்து; அல்லது வாகை சார்ந்த இயல்வென்றியுமாம். இதுவுங் குறிப்புவமைப் பாற்படும்.

16. பலபொரு ளொருபொரு ளொருவயிற் பலவயிற்
போலியில் பொருண்மறு பொருள்விப ரீத
மருட்கை தலைதடு மாற்றம் விகாரந்
தடுமாற் றம்மே சமுச்சய மின்சொ
னியம மநியமம் புகழ்நிந்தை யுவம
மோக மவயவ மவயவி முற்றே
யேக மாலையந் தாதிபொது நீங்கலென்
றுக வையைந் தாமதன் விரியே.

(எ-ன்) இதன் முன்னர் உவமையெனத் தொகையா னொன்றாய் நின்றது வினை பய முறுப் புருவென்ற நான்கினோடுங் கூடி யேதுவைந்தா மெனனுமவை முதலிய வகையின் பாகுபாடுகளெல்லா முணர்த்தி யவற்றினின்றும் விரிந்த வுவமையினது பெயர் வேறுபாடுந் தொகையுமுணர்-ற்று.

(இ-ள்) அதன் விரி - அங்ஙனங் கூறுபடுத்தின வுவமையின் விரி, பலபொருளுவமை முதலாகப் பொது நீங்குவமையீறுக விருபத்தைந்தா மென்றவாறு.

இவற்றிற்கெல்லாம் எண்ணும்மை தொக்கன. போலி யென்பதனை யிறுதிவிளக்காக்கி, இருவயினுங் கூட்டி, உவம மென்பதனை மத்திம தீபமாக்கி, முன்னும் பின்னும் எல்லாவற் றோடுங் கூட்டி யுரைக்க. என்றென்ப தெண்ணிடைச் சொல்; "என்று மெனவு மொடுவு மொருவழி, நின்றும் பிரிந்தெண் பொருடொறு நேரும்" என்பதனு லறிக. இவை யெல்லாஞ் சொல்லின்முடியு மிலக்கணத்தனவாதலாற் பெரும்பான்மை யும் தம் பெயருள்ளே இலக்கணமும் புலப்படும். அல்லதூஉம் உரையினுங் கொள்க.

க. அவற்றுள், **பலபொருளுவமையென்பது** ஒரு பொருட்குப் பல பொருளுவமை காட்டுவது. பலபொருளுவமை யெனப் பொதுப்படக் கூறினமையான், அது ஒன்றுபலகுழீஇய

பலபொருளுவமையும், வேறு பலகுழீஇய பலபொருளுவமையு மென விருகூற்றவாம். அவற்றுள், ஒன்றுபலகுழீஇய பல பொருளுவமை வருமாறு:—

எண்ணிற் கடங்கா விளனாயி றொன்றியபோற்
கண்ணிற் கடங்காக் கதிர்விரிக்கும்—விண்ணிற்
பரந்தாம மாதவன்பொற் பாதங்களைந் தேத்தும்
வரந்தாம் படைத்தார் வசம்.

இஃது ஒன்றுபலகுழீஇய பலபொருளுவமை. இதனுள், பரந்தாமம் என்றது பரமபதம். வரந்தாம் படைத்தார் வசம் என்பது மாதவன் றிருவடிகளை யிப்பிறப்பிற் சிந்திக்கவும் வாழ்த்தவும் முற்பிறப்பில் வரம்படைத்தவர்தா மெவர் அவர் கைப்படும்பொருளாமென்றவாறு.

கொடியு மொருபிடியுங் கோளரவு மின்னுந்
துடியும் புரைமருங்குற் றோகை —வடிநெடுங்கண்
ணென்னுயிர்க்குத் தம்பமதா யிந்தனூர் மால்வரைத்தன்
மன்னுயிரைக் காட்டு மதித்து.

இது வேறுபலகுழீஇய பலபொருளுவமை. ஒரு பிடி-ஒரு கையை விரன்மடக்கின அளவாம். "ஒருபிடி நுசுப்பினாட்கே" எனச் சிந்தாமணியினுங் கூறினமை காண்க. பகுதி-இயற்கை. துறை-பாங்கியையறிதல்.

ஆலம்போற் செவ்வே ளயில்போ லடுங்காலன்
சூலம்போற் காமன் றொடுத்தியக்கு—நீலம்போற்
கொல்வான் பிறழ்கட் கொடிக்கிடமா மூலமெனச்
செல்வான் கடிகைச் சிலம்பு.

இதுவுமது. பகுதி-பாங்கற்கூட்டம். துறை-இயல்பிடங் கூறல்.

உ. ஒருபொருளுவமை யென்பது பலபொருட் கொரு பொருளுவமை காட்டுவது:—

இமிழ்திரைநீர் ஞாலத் திருளிரிய வான்றோய்ந்
துமிழ்கதிர்வெண் டிங்க ளுடனேயெஞ் ஞான்றும்
வலஞ்செய் சுவண வடவரைபோன் மாடம்
பொலஞ்செய் மதிள்கோ புரஞ்சிகர பந்தி
யிலங்கு மதிளரங்கத் தெம்பிரான் பல்புகழைப்
பாடினார் பாதந் தனைப்பாடிச் சென்னியின்மேற்
சூடினார்க் குண்டோ துயர்.

என்பது பலபொருட் கொருபொருளுவமை. பலபொருள்-செம் பொன் மாட முதலியன. உவமை வடமேருவெனும் ஒன்று. பா-ஏழடியான் வந்த பலவிகற்பப் பஃறொடைவெண்பா. திணை-பாடாண். துறை-பழிச்சினர்ப்பணிதல்.

வண்ண வனச மலர்போற் றிருமுகமுங்
கண்ணு மலரடியுங் கைக்கொண்ட—பெண்ணரசைச்
செந்தமிழ்மா றன்சிலம்பிற் சேர்ந்தகன்றென்
பாலுரைக்க
வந்தவனே திண்ணியனு வான்.

இதுவும் ஒருபொருளுவமை. பகுதி-இதுவுமது. துறை-தலைவனை வியத்தல்.

ந. ஒருவயிற்போலி என்பது ஒரு தொடர்மொழிக்கட் பலவுவமைவந்தா லுவமைதோறும் உவமைச் சொற் புணராது இறுதியிலோருவமைச் சொற் புணர்ப்பது:—

வாவித் திரையெறிந்த நித்திலத்தின் மள்ளரெறி
காவித் திரள்சேர் கமலமலர்—பாவைமார்
வெண்ணகையுண் கண்ணு னனம்போன்
மெனத்தோன்றுங்
கண்ணபுரத் தானிமையோர் கண்.

இஃ தொருவயிற்போலி. திணை-பாடாண், துறை-கடவுள் வாழ்த்து; நாடுவாழ்த்துமாம். திரையெறிந்த நித்திலத்தினோடு மள்ளர் களைகட்டெறிந்த காவிகளுஞ் சேர் கமலமென்க.

போன்மெனத் தோன்றுமென்பது போலத்தோன்று மென்ற வாறு. ஒழிந்த அகல முரையிற்கொள்க.

ச. **பலவயிற்போலி** யென்பது ஒருதொடர்மொழிக்கட் பல வுவமைவந்தா லுவமைதோறு முவமைச்சொற் புணர்ப்பது.

> பொன்மலைபோ லுந்திருமால் புட்குழியாள் பூண்முலைமேல்
> மன்னருவி போலுமணி வடங்கள்—சொன்னதன்மேற்
> செக்கர்வான் போலுமெழிற் செம்படா மும்புனைந்தா
> ரெய்க்குநா லென்னு மினி.

இது பலவயிற்போலி. எய்க்குநால் - எய்யாநிற்குநால். பொன்மலைபோன்ற முலையின்மேற் பொற்பூணையும் பூட்டிமுத்து வடத்தையும் பூட்டிச் செம்படாத்தையு முத்தரீகமாகப்போட் டமையா னினி யிடையிறுமென்றவாறு. என்னு மென்பது குறிப்புமொழி. எனவே, இடையைத் தாங்கி வடமுதலியவற் றைத் தாங்கிப் புடைபெயர்த்துத் தனத்தைப் பரிசித்து மருங் கணைந்தாளும். பகுதி-இடந்தலை. துறை-மருங்கணைதல்.

ரு. இல்பொருளுவமையாவது முன்பில்லாதவொன்றை யொன்றற் குவமையாக்கி யுரைப்பது:—

> உதிக்குங் கருஞாயி றென்றே யுவமை
> மதிக்கும் வடமலைமா யோனைத்—துதிக்குந்
> திருநா வுடையபிரான் செந்தமிழை யோதி
> யிருநாவே வாராதிடர்.

என்பது இல்பொருளுவமை. என்னை? கருஞாயிறு இல்லாத பொருளாதலால் அதனைக் காளமேகம் போன்ற திருமேனிக் குவமை கூறினமையா னென்றுணர்க. திணை-பாடாண். துறை-ஓம்படை.

> சொன்னவா றொன்றுரைக்கக் காணேன் றுணைமேரு
> வென்னவாழ் வுற்றவிணை முலையாண்—மன்னவா
> பந்துகழங் கம்மனைகைப் பற்றுகவென் றின்றெனையும்
> வந்துதழீஇக் கொண்டாண் மகிழ்ந்து.

இதுவுமது; இதனுள் துணைமேருவென்றதனல் வடமேரு ஒன்றல்ல தில்லையால் இல்பொருளுவமையாயிற்று. இவ் வணஞ் சிந்தாமணியினும் "கோண்மின்னு மீன்சூழ் குளிர் மாமதித் தோற்ற மொத்தே" என வந்தமையா லிதனது வேறு பாடுங் காண்க. பகுதி-உடன்போக்கு, துறை-குறிப்புணர்தல்.

௬. மறுபொருளுவமை யென்பது முன்னர்வைத்த பொருட்கு நிகராவதோர் பிறிதொருபொருள் பின்னரு மதன்கண் வைப்பது —

மாண்குலா மாறுநின் வண்டமிழ்போன் மற்றொருநூல்
காண்கலே ளுங்கதுபோற் காண்கலேன்—மீண்டும்
புதல்வற் கருள்புரிந்து பொற்றாணிற் றேன்று
முதல்வற் கிணையா முதல்.

இது மறுபொருளுவமை. திணை-பாடாண், துறை-பனுவல் வாழ்த்தோடு கடவுள் வாழ்த்துமாம்.

௭. விபரீதவுவமையென்பது முன்பி லுவமையாக வந்த தனைப் பொருளாக்கிப் பொருளை யுவமையாக்குதல்:—

மென்றோ ளெனத்திரண்ட வேயினங்கள் வெம்முலைக
ளன்றோ வெனக்கோங் கரும்புறு—நின்றனவால்
வண்டமிழ்மா றன்றுடரி வண்பொழிலு மின்றெனக்கவ்
வொண்டொடியாய்த் தோற்ற முறும்.

இது விபரீதவுவமை. என்னை? "பொருளே யுவமஞ் செய்த னர் மொழியினு, மருளறு சிறப்பினஃ துவம மாகும்" என்றாக லின். அன்றோ வென்பது அல்லவோவென எதிர்மறையாகி ஆம் என்றாயிற்று. பகுதி-பாங்கற்கூட்டம், துறை-பொழில்கண்டு மகிழ்தல்.

௮. மருட்கையுவமை யென்பது உவமை கூறுவான் மருட்கை வயத்தனாகி யொருபொருட்குக் கூடாத பண்பினைக் கூடுவதாகக்கொண்டு அதனை யொன்றிற் குவமையாக்கி யுரைப் பது:—

தாகம் பெறநுகர்நீந் தண்மருந்து கைத்தழலின்
வேகம் பயின்ற விதிபோலு—போகம்
படையாத மாறன் பணிவரைமே லென்னோய்
துடையாது நீயுரைக்குஞ் சொல்.

இது மருட்கையுவமை. தெண்டியாசிரியர் கூடாவுவமை யென்பதுமிது. தீந்தண்மருந்து - இனிய குளிர்ந்த வமிர்து கைத் தழலின் வேகம் பயிலுதல்-கயந்து தழல்போலச் சுடுங் கோப மிடைவிடாமை. பகுதி-இதுவுமது. துறை-பாங்கனை நொந்துகூறல்.

கூ தலைதடுமாற்றவுவமை யென்பது மேற்றொடு முதலே வந்த வுவமப்பொருளிடையினு மீற்றில் வந்த வுவமே யப்பொருண் முதலினும் இடையினின்ற வுவமவுருபு இறுதி யிற் றொக்கதும் விரிந்ததுமாகப் புணர்ப்பது:—

மையமருண் கண்காவி வாய்பவளந் தோளிணைவே
யையவிடை நுண்ணூ லகலல்குல்—பையரவந்
கஞ்சத் திருமாது காதலிக்கு மார்பகத்தான்
றஞ்சைத் திருமான் றனக்கு.

இது தலைதடுமாற்றவுவமை. இவை யுவமவுருபு இறுதி யிற்றொக்கது. "குவவின கொங்கை குரும்பை குழல் கொன்றை" யென்பதுமிது. மையமருண்கண் - கருமை பொருந் திய மையுண்கண். ஐயவிடை நுண்ணூல்-உண்டில்லையென்று சந்தேகமுற்ற விடை நுண்ணிய நூல் போலு மென்றவாறு. ஐயவிடை யென்பதற்கு ஐயனே யென அண்மை விளியா யுவப்பின்கண்ணே மயங்கியதாகக் கூறினுனெனினுமாம். பகுதி- இதுவுமது துறை-இயல்பிடங்கூறல்.

கய. விகாரவுவமை யென்பது உவமையாகிய தன்மைப் பொருள்களை விகாரம் பண்ணியதாக உவமிப்பது:—

தெள்ளமிர்தத் துள்ளாய தீஞ்சுவையை மெய்வேதத்
துள்ள வுணர்வை யுணர்வினு - லள்ளி

யெடுத்திசைத்த தொன்றெனலா மின்பொருளான் மாறன்
றொடுத்திசைத்த வுத்தமப்பாச் சொல்.

இது விகாரவுவமை. உணர்வை யுணர்வாலள்ளி யென்பது உபநிடதச் சொல்லுளிருந்த ஞானத்தைத் தனதுண்மை ஞானத்தாற் சொல்லை நீக்குத் திரட்டியெடுத் தென்றவாறு. இரும்பை யிரும்பினாலறுத் தென்பதுபோலக்கொள்க. சொல்லெனவே சொல்லு மதனுட் பொருளும்மாயிற்று. சொல்லு மதனுட்பொருளும் அமிர்தினுள்ள சுவையையு முபநிடதச் சொல்லினுள்ள வுணர்வையுந் தனது பரமஞானத்தா லள்ளி யெடுத்துச் சொல்லும் பொருளுமாகத் தொடுத் திசைத்த தொன் றெனலா மென்க. இது பனுவல் வாழ்த்து

கக. தடுமாறுவம மென்பது ஒரு பொருள் ஒருகால் உவமையுமாய் ஒருகாற் பொருளுமாகி யொருதொடர்ச்சிக்கண்ணே தடுமாறி வருவது —

மெய்வேதம் போன்றதுநின் மெய்த்தமிழ்நின் மெய்த்தமிழ்போன்
மெய்வேத முங்காட்சி மேயதால்—வையகமெண்
ணுவலவர் காரிதரு நாவீறு நின்னிகராம்
பாவலரிங் காரோ பகர்.

இது தடுமாறுவமை; என்னை? "தடுமாறுவமங் கடிவரையின்றே" என்றாராகலின். தெண்டியாசிரியர் இதரவிதரமென் பது மிது. திணையுந் துறையு மிதுவுமது.

கஉ. சமுச்சயவுவமை யென்பது இதனோயன்றி யிதனையொப்பதினானு மொக்கும் என்பது:—

வண்ணத்தா லன்றி வடிவா லளவினு
மெண்ணிற் கமலமுகை யேய்க்குமே—கண்ணன்
வழியார் துணைமாறன் மால்வரையாய் கன்னன்
மொழியார் துணைமா முலை.

இது சமுச்சயவுவமை. கண்ணன்வழியார்-கண்ணனே பரதத்துவமென நிற்கு மார்க்கத்தினையுடையார். துணையென்றது அவர்களான்மாவுக் குறுதித்துணை யென்றவாறு. மாறன் மால்வரையிலுள்ள தலைவனே! கன்னலினது பாகுபோலு மொழியையுடையாரென்று நீ சொல்லப்பட்டவ ருபயமுலை செம்மை நிறத்தா லொத்ததன்றி வடிவினாலு மளவினாலு முள்ளத்தா லுவமைகுறிக்கின்ற செந்தாமரை முகையை நீ சொன்னபடியே யொக்குமென்றவாறு.

குறிவழிச் சென்ற பாங்கன் தலைவி தனமுங் காண்பனோ வெனிற் காண்ப துண்டென்பதற்குச் செய்யுள்:— "அரனம்பலத்தி, னியலுளவேயினைச் செப்புவெற்பாநினதீர்ங்கொடிமேல்" என்றதனு லறிக. மால்வரையா யென்றதனு னில மொன்றென்பதாயிற்று. பகுதி-பாங்கற்கூட்டம். துறை-செவ்விசெப்பல்.

கரு. இன்சொலுவமை யென்பது பொருளினு முவமைக்கோர் மிகுதி தோன்றக் கூறி யுவமேயத்தினு மிகுதியுளவேனு மொப்பதன்றிச் சிறந்ததன்றென்பது:—

ஒன்றாய நின்முகத்த தொண்டமிழ்வே தங்குரவ
னன்றாயு நான்முகத்த தவ்வேத—மென்றாலும்
வண்டமிழ்மா றவண்ட மிழ்மறைக்கொப் பன்றிமறைக்
குண்டெனலா மோவே றுயர்பு.

இஃது இன்சொலுவமை. இதனுள் ஒப்பதன்றி யென்பது ஒப்பன்றியெனச் செய்யுள் விகாரத்தாற் றொக்கது. திணை-பாடாண். துறை-பனுவல் வாழ்த்து.

கச. நியமவுவமை யென்பது இன்னதற் கின்னதேயுவமை யென்று மேற்றேகாரம்பெறத் துணிந்துசொல்லுவது:—

வாய்மைமறை யேநினது வாய்ந்த தமிழ் மறையின்
வாய்மைதனக்கிணையாம் வாழ்த்துங்காற்—றாய்முலைப்பா
லுண்ணாத மெய்ஞ்ஞான மோங்கியமா றாகமலக்
கண்ணனே நின்னிணையாங் காண்.

இது நியமவுவமை. வாய்மைமறை-மெய்வேதம். திணை வாகை. துறை-தாபதவாகை

பைம்பொற் குன்றே பணையிள வனமுலை
யம்புத் துணையே யரிமத ருண்கண்
குனிசிலை யிரண்டே கொடுநன் புருவம்
பனிமா மதியே பழிதீர் நன்முகங்
கொடியே தளரிடை கொண்மூ வேகுழ
லாடர வின்பட மாமே கடிதடங்
காந்தளின் றுணைமலர்க் கவினே கையும்
பூந்தளி ரன்றே புடைபெயர் மெல்லடி
மாதே,
படர்புகழ் மாறன் பராங்குசன்
றடரிமால் வரைவளர் தோகைய நியலே.

இதுவு மது. பா-பொதுச் சீர் பதினாறும்வந்து நேரிசையாசிரியச் சுரிதகத்தாலிற்ற குறளடிவஞ்சிப்பா. பணையிளவனமுலை-பெருத்த இளைய அழகிய முலை. அரிமதருண்கண்-செவ்வரி பரந்து கண்டார்க்கு விருப்பத்தைக்கொடுக்கு மையுண் கண். பகுதி-சேட்படை. துறை-அவயவங்கூறல்.

கரு. **அநியமவுவமை** யென்பது நியமித்த வுவமையை விலக்கிப் பிறிதுமோருவமை புணர்ப்பது.

தேன்சுவைக்கொண் டோங்குமகிழ்ச் செல்வாநின் செந்தமிழின்
வான்சுவைக்கு வான்சுவைகொள் வான்கனியே —நான்பகர்தற்
கொப்பாகக் கண்டதுமற் றுள்ளிற் சுவைதெவிட்டா
தப்பான்மைத் தானதுமொப் பாம்.

இஃது அநியமவுவமை.

(இ-ள்) வண்டுகள் தேனையுண்ணும் பரிமள வகுளமாலிகையையுடைய செல்வனே! நினது திருவாய்மொழியிலுண் டான சொல்லும் பொருளும் கேட்ட செவிக்கும் ஓதின நாவிற்

கும் உற்ற வுணர்விற்கும் இனிமை தரும் பெரிய வினிமைக்குப் பரமபதத்துள்ளார் மனோ வாக்குக் காயங்களால் இனிமை கொள்ளும் பரமபதநாதனுகிய அக்காரக்கனியே நான் சொல்லு தற் கொப்பாகக் கண்டது; அஃதன்றி வேறுவமை குறிப்பேனு கின் முப்பொறிகளுஞ் சுவை தெவிட்டாத திருவாய் மொழியே போலப் பண்ணும் பாடலுமாய் நடைபெறுஞ் சுருதியும் அதற் கொப்பா மென்றவாறு.

அப்பான்மைத்தானதும் என்றது சுருநிலை துறை-பனுவல் வாழ்த்து

கசா. புகழுவமையென்பது உவமையைப் புகழ்ந்துவமிப் பது:—

விண்ணோ ருயிர்தளிர்ப்பான் வேலைவா யன்றுதித்த
தண்ணா ரமிர்தந் தனைநிகர்க்கும்— பண்ணாற்
றிருந்துமறை யைத்தமிழ்செய் தேவேசன் வெற்பின்
முருந்து நகையார் மொழி.

இது புகழுவமை. பண்ணாற்றிருந்து மறை—கீதநடைத் தாய்க் குற்றமற்ற மறை; அது சாமவேதம். மறையைத் தமிழ் செய் தேவேசனெனவே வேதந்தமிழ் செய்த பெருமாள் என்னு நாவீறுடையபிரான் என்பதாயிற்று. பகுதி - இயற்கை. துறை- புணர்ச்சியிறுதிக்கட்டலைமகன் காதற்சிறப்புரைத்தல்.

கஎ. நிந்தையுவமை யென்பது உவமையை இகழ்ந் துவ மிப்பது:—

உறைகழித்துக் கைம்மிசைக்கொண் டொண்மறவ
ரோச்சின்
மிறைபுரிவே லொப்பெனினு மேலா— நறையூர்வாழ்
தேந்துளப மால்வரைமேற் றேனேதெ றுஞ்செயலா
லேந்திழையாள் வன்கண் ணிணை.

இது நிந்தையுவமை. ஒண்மறவர் - கொலைமேற்கொண் டொழுகு மொள்ளிமையுடைய மறவர்; ஓச்சில்-செலவிடுக்கில்.

யிறைபுரிவேல் - கொலையை விரும்பும் வேல்; எடுத்தெறிதலை விரும்புவார் தொழிலை வேலின்மே லேற்றியது காரண காரிய மயக்கம். மறவரோச்சுகிற் கொல்வதல்லது வன்கண்போற் ரூனெதெறுஞ்செய லின்றென்பதனுல் நிந்தையுவமையாயிற்று. பகுதி-பாங்கற்கூட்டம். துறை-உற்றதுரைத்தல்.

கஅ. **மோகவுவமை** யென்பது ஒரு பொருளின்மே லெழுந்த வேட்கையாலதற்கு உவமையாகக் குறிக்கப்பட்ட வதன் மேலும் வேட்கை நிகழ்ந்ததாகக் கூறுதல்: —

அம்பவள மொன்றிருப்ப வன்புறுமா தொண்டையெனச்
செம்பதுமத் தேனேநின் செவ்வாயை—விம்பமுநே
ராதற் கதைவிரும்ப மாழியான் கோழியூர்க்
காதற் சிறப்புடையேன் கண்.

இது மோகவுவமை.

(இ-ள்) ஆழியான் கோழியூர்ச் செய்யபதுமத்தினிடத்து விளைந்த தேன்போலு மொழியையுடையாய்! நினது சிவந்த வாயை யதற்கொத்த அழகிய பவளமுளதா யிருப்பவும் ஆதொண்டையை யொப்பென நோக்கி யன்புறுநிற்கு மஃதன்றி யவ் வாதொண்டை செய்ய வாயினிறத்தோடும் வடிவிற்கு மொப்பதால் அவ்வாயினையுங் காதலிக்கப்பட்ட சிறப்புடையே னேடுங் கூடிய கண்கள் அவ் வாதொண்டையையும் விரும்பா நின்றவென்றவாறு.

ஆதற் கென்பது மூன்ருவது நான்காவதாயிற்று. அதை யும் என்று மும்மை விகாரத்தாற்றொக்கது. விம்பம்-வடிவம். பகுதி-இடந்தலை, துறை-காதற்சிறப்புரைத்தல்.

கக. **அவயவவுவமை** யென்பது அவயவத்தையுவமித் தவயவியை வாளாதே கூறுவது:—

மாத ரிலவிதழ்போன் மாண்பிற்றே மாதவனுல்
வாஞே.ரருந்து மருந்து.

இதனுள், மாதரென்றதவயவி. இலவிதமென்றதவயவம். பகுதி இதுவுமது. துறை-நலம்புனைந்துரைத்தல். புணர்ச்சி மகிழ்தலுமாம்.

வல்லிக் கொடிமருங்குன் மாதினுக்கு மேருமுலை
யல்லிக் கமல மனையதடி—சல்லதர்தீ
சொல்லும் பொழுதாங்கர் தொன்னகர்சேய்த் தாயிழாய்
செல்லும் படிக்கெளிதோ செப்பு.
உதுவும் அவயவவுவமை.

(இ ள்) வல்லிக்கொடிபோலு மருங்குல்; வட மேருப்போலு முலை; அல்லியோடுங் கூடிய தாமரைபோலுந் தாள்கள்; பாலைலோடுங் கூடியவதரும் அழல்போலச் சுடும். சொல்லுங்காலத்தில் அரங்கர்நகரமென்றால் நெடுந்தூர மாகையா லாராய்ந்தணிந்த பூணினையுடையாய்! நினைது மாதினுக் கென்றேடும்வரும்படி யெளியதோன்றல்ல வென்றவாறு. பகுதி-உடன்போக்கு. துறை - அருமையுரைத்தல்.

உம. **அவயவியுவமை** யென்பது அவயவியை யுவமித்து அவயவத்தை வாளாதே கூறுவது:—

பொன்னங் கொடியனைய பொற்றொடிதன் றட்சுவடு
மென்னன் புறத்தோன்று மிங்கிவைக—ளன்னங்
கடிக்கமலஞ்.சேரரங்கர் கானிகராங் கானை
யடிச்சுவடு மாங்கவையே யாம்.

இஃது அவயவியுவமை, அரங்கர்கானிகாராங் கானை-அரங்கர்புதல்வனுங் காமன்போல்வானுங் கானையென்பதாம். பகுதி-இதுவும து. துறை - சுவடுகண்டறிதல்.

உக. **முற்றுவமை** யென்பது அவயவ அவயவிகளை யொரு செய்யுளகத் தொக்க வுவமிப்பது:—

பொன்னெடுங்குன் றெனச்செறிந்து புடைபரந்த புளக
முலை
மின்னனலா நுணுகிடைய வேய்புரையுந் தடமென்றோட்
குளிர்மதிபோன் மிளிர்வதனக் கோமளப்பூங் கொம்பன்னா
டளிர்புரைமெல் லடிச்சுவடுந் தளர்ந்தனவெய் யோன்
மன்னோ.
குடதிசைவான் கதிர்சுருக்கிக் கொடித்தேரி னொடு
மறைந்தா
னடல்புனைவே டுவர்குறுகி யற்றம்பார்த் தாறலைப்பார்
பொனபுனைபூண் மணிமார்பிற் புரவலன் றிருவீரு
நன்குலத்தெம் மில்வைகி நறுந்தேன்செந் தினையருந்தி
மரையதளிற் றுயில்வைகி வைகறைவாய்த் துயிலெழுந்து
விரைகமழ்தார் மகிழ்மாறன் மெய்த்தமிழ்ச்சொற்
குருகூரின்
முதிர்திரைப்பா லாழியின்வான் முகடுரிஞ்சு முதயகிரி
கதிர்வருமுன் சேர்தல் கடன்.

இது முற்றுவமை

(இ-ள்) பொன்மேருவாகிய மலைகளென்னும்படி சிக்கென்று மருங்ககன்ற புளகமுலையினையு மின்னெனத் தகுவதா நுண்ணிய விடையினையு மூங்கில்போலும் பெரிய மெல்லிய தோளினையு மதிபோல விளங்கு முகத்தினையு முடைத்தாய பூங்கொம்பன்னாள் தளிர்போன்ற மெல்லிய வடியிரண்டுந் தளர்ந்தன, ஆதித்தனுங் குடதிசைவாய் வானிற் கிரணங்களை யொடுக்கிக் கொடியையுடைய தேரினோடு மறைந்தான். வெற்றியையுடைய வேடுவர்கள் அற்றம் பார்த்து வழிபறிப்பர், இனிப் பொன்னினாற்செய்த பூணினையணியு மார்பினையுடைய மன்னனே! இற்றைப்போது நீங்களிருவீரு முத்தமகுலமாகிய எங்களில்லின்கண் வந்து நல்லதேனினோடுங் கூடிய தினைமாவினையுந் துய்த்து, மான்றோலிற் றுயிலமர்ந்து, வைகறையிற் றுயிலெழுந்து, மணங்கமழாநின்ற வகுளமார்பன்

மெய்த்தமிழ் பாராட்டப்பட்ட கீர்த்தியுடைய குருகாபுரியி டத்துப் பெருத்த திரையையுடைய திருப்பாற்கடலின்கண் வாணினதுச்சியைத் தைவருங் கொடுமுடியையுடைய வுதயகிரி யிற் கதிரோனுதிக்குமுன்னமெய்துவதே முறைமை யென்ற வாறு.

மன்னும் ஓவும் அசை. பகுதி - இதுவுமது. துறை - நெறி விலக்கு. பா - வெண்கலிப்பா.

உஉ. ஏகவுவமை யென்பது உவமையும் உவமேயமுந் திணை பான் முதல் சினை பெயர் வினை யென்பன மயங்கா தொன்றாயிருக்கை:—

முற்ற வுணர்த்து முதுகாப் பியம்புணர்ப்பா
னுற்றவர்தங் கணபோன் றுறங்காவா—மிற்பிரிந்தா
னல்லியலார் வந்தனைசெய் நாவீறன் மால்வரைமேன்
மெல்லியலா ரின்ப விழி.

என்பது ஏகவுவமை. இதுவும் பூரணவுவமைப்பாற்படும்.

(இ-ள்) நெஞ்சமே! நன்புலவ ரஞ்சலிசெய்யு நாவீறுடைய பிரான் வண்குருகூரினிடத்து மெல்லிய சாயலையுடை யாரின்ப விழியானது இனி நாமிவரை யில்லின்கண்வைத்துப் பிரிவோமாகில் அற முதலிய நாற்பொருளு மலை கடலுடு முத லிய பதினெட்டு வருணனையு மொழிந்தனவுங் குறைவின்றி யுணர்த்தப் படுவனவாகும் பெருங்காப்பியம் பாடுதற்குட் கொண்ட புலவர்கண்போலத் துயிலொழிந்ததோடும் துன்ப விழியாமென்றவாறு

இது, கற்பினு ளில்வாழ்க்கையென்னும் பகுதிக்கண் பிரிந்து சேய்நாட் சென்று வந்து கூடிய தலைமக னவளுறுப்புக ளை வேட்கை மிகுதியாற் புதுவது புதுவதாகப் பாராட்டத் தலைமக ளிஃதொன்றுடைத்தென வஞ்சியவழிப் புணர்ச்சி

யந்தியத்துந் துயிலாததைத் துயின்று துயிலொழிந்தோன் தன்கட் பிரிதற் குறிப்புளதாகக் குறித்த வேறுபாடெனக் குறிப்பானறிந்த தலைமகன் முன்னிலைப் புறமொழியாகத் தன் னெஞ்சிற் கவள்குறிப்பறிவுறுத்துவான் போலவினி நின்னிற் பிரியேனெனப் பிரியாத தன் குறிப்பினைத் தலைமகட் கறிவுறுத் தல். கலியுள்ளும், "மாசில்வண் சேக்கை மணந்த புணர்ச்சியுட் பாயல்கொண் டென்றோட் கனவுவா ராய்கோற், றொடிநிரை முன்கையாள் கையாறுகொள்ளாள். கடிமனை காத்தோம்ப வல்லுநள் கொல்லோ" எனத் தலைமகன் புணர்ச்சியந்தியத்துக் கனவினாற்றியதனைத் தலைவி துயிலொழிந்திருந்தவன் குறிப் புணர்ந்தனளென்பது முணர்க. அன்றியும், கற்பினுட் குறிப் பறிவுறுத்த லென்னு மதிகாரத்தின்கண் வள்ளுவரும் "கரப்பி னுங் கையிகந் தொல்லாநின் னுண்க, ணுரைக்க லுறுவதொன் றுண்டு" என்னுங் குறட்பாவினுட் டலைவன் றன்பிரியாமைக் குறிப்பினைத் தலைவிக் கறிவுறுத்தவாறுங் காண்க. இதனுள், தலைவி இஃதொன் றுடைத்தென நாடின் மடனழிந்ததன்றோ வெனின்? தலைவன்கட் டலைவி விரும்புதலா லதுவுங் கடனு யிற்று. என்னை? "தன்வயிற்கரத்தலுமவன்வயின்வேட்டலு, மன்னவிடங்களல்வழியெல்லா, மடனொடுநிற்றல்கட னென மொழிப" எனனும் பொருளியற் சூத்திரத்தா னுணர்க. முது காப்பியம் புணர்ப்பா னுற்றவர்தங் கண்போன் றுறங்காவா மென்றதனுல் தோழி கூற்றன்று; தலைவன் கூற்றெனவுணர்க; என்னை? "இவ்விடத் திம்மொழி யிவரிவர்க் குரியரென், றவ்வி டத் தவரவர்க் குரைப்பதை முன்னம்" என்னுஞ் செய்யுளியற் சூத்திரத்தான், பெருங்காப்பிய வொழுக்கம் அறிவது பெண் டன்மைக் குரிமையன்மையி னுணர்க. இங்ஙனங்கூறிய விலக் கணங்க ளிறந்தவற்றிற்கு மினிமேல்வருவனவற்றிற்கு மிலக் கணமென வுணர்க.

உக. மாலைவுவமை யென்பது ஒருபொருட்குப் பல வுவமை வந்தா லவை யொன்றோடொன் றிடைவிடாது

தொடர்ச்சியுடையனவாகப் புணர்த்துக் கடைக்கட் பொருளை வெளிப்படையாகக் கூட்டி முடிப்பது:-

பாற்கடலுண் மால்போல வன்மார்பிற் பைந்தொடிபோற்
கோற்றெடியுட் கொண்ட குண மேபோ—னூற்கடலாய்ந்
தாமா றுணர்ந்தா ரறம்பயின்ற நாவகலா
பாமாறன் சொன்ன தமிழ்ப் பா.

இது மாலையுவமை. அறம்-வேதம். உட்கொண்டகுணம்-கருணை துறை-பனுவல்வாழ்த்து.

தென்னரங்க னுந்திச் செழுமலர்போ லம்மலருண்
மன்னு மயன்போல யன்மனத்து—ணன்மறைபோ
லீங்கா தொருபொழிற்கண் ணோவியம்போ னின்றதொன் று
பாங்காகக் கண்டனன்வெற் பா.

இதுவுமது.

(இ-ள்) வெற்பனே! திருவரங்கேச னுந்தித்தாமரை போலவும் அத்தாமரையுள்வைகும் பிரமனைப்போலவும் பிரமன்மனத்துட் குடிகொண்ட நல்ல சுருதிபோலவும் ஒரு பொழுதும் நீக்கமின்றி நீகூறிய பொழிற்கண் ணோவியம் போனின்றதொரு பெண்ணுருவத்தைக் காவின தொருபக்க மாகக் கண்டன னென்றவாறு.

ஓவியம்போனின்ற தென்றான் உயிர் நின்னிடத்தும் உடலங்குமாக நின்றதென்பது தோன்ற. ஒரு பக்கத்தே நின்ற தென்றான் ஆயத்தை நீங்கிநிற்பது தோன்ற. பகுதி-பாங்கற் கூட்டம். துறை—பாங்கன் கண்டமை கூறல்.

உச. அந்தாதியுவமை யென்பது ஒரு செய்யுளகத்துப் பல பொருட்குப் பலவுவமை வந்தால் முதலேயுவமஞ் செய்த வுவமேயப் பொருட் பெயரினை யாகுபெயராதல் அன்மொழித்-

தொகைப்புறத்துவந்த பெயராத லாக்கித் துணித்து நிறீஇ யவ்வுவமேயப் பெயரினை யந்தாதித்துவமானப் பெயராக்கி யுவம வுருபு கொடுத்துப் பின்ன ரதன்மேல் வருமுவமேயப் பொருளோடு புணர்த்து நிகழ்த்துவது:—

குருமணி குயின்றபொற் குடமெனத் தகைசால்
பருமணி வடந்தோய்ந் தெழுதரு பணைமுலை
முலையெனப் பொடித்ததா மரைமுகை முகைநெகிழ்
பொழுகுதண் ணறவென வுறுநர்நன் மார்பத்
திழுகுமான் மதமளா யெழுபுனற் சங்கணித்
துறைவளங் கெழீஇய தொன்மைசான் மரபி
னீங்கிது புவனம் யாவையுந் தழைத்தற்
கோங்கிய விராமா நுசமுனி யிருக்கை
யாங்கது தருமமோர் படிவமுற் றனைய
பாங்குறு சக்கர பாணிபேர் புனைபதி
மழைகிழித் தெழுந்தபொன் மாளிகைச் சூளிகைத்
தழைதுகிற் கொடித்திர டாமவெண் மதியகட்
டுறுமறுத் துடைத்துவா னொரீஇ நுடங் கூங்குது
முருகார் மொய்ம்மகிழ் மாறன்
குருகா புரியெனக் கூறுநன் னகரே.

இஃது அந்தாதியுவமை. இதனுள், பணைமுலை யென்பது பணைத்த முலையினையுடையாயென வினைத்தொகைப்புறத்து வந்த வன்மொழித்தொகைப் பெயராய் அண்மைவிளியேற்றுத் துணித்துநிறீஇயவாறும் முலையென வருபெயரினை யுவமானப் பெயராக்கி, யுவமவுருபு கொடுத்துப் பின்ன ரதன்மேல் வருந் தாமரை முகையென்னு முவமேயப் பொருளோடும் புணர்த்த லுங் காண்க. முகை நெகிழ்பு-முகை நெகிழ்ந்து. ஒழுகு தண் ணறவென-ஒழுகு தண்ணறவு போல. வுறுநர் - தன்னிடத்திலே பரிசிப்பார். இழுகுமான்மதம்-பூசுங் கத்தூரி. அளாயெழுபுனற் சங்கணித்துறை-கலந்தோடும் புனலையுடைய திருச்சங்கணித் துறை. ஈங்கிது வென்றது தமக்கு முன்னனவிடத்தை. ஆங்கது

வென்றது தமக்குச் சேய்த்தானவிடத்தை. ஊங்குது வென்றது இரண்டிற்கும் நடுவான விடத்தை. தாமவெண்மதி-ஒளியையுடைய மதி. ஒழிந்த வகலமுறையிற் கொள்க.

அஃதேல், "அடுக்கிய தோற்றம் விடுத்தல் பண்பே" எனத் தொல்காப்பியனா ரிதனைக் கூறி மறுக்கவும் இங்ஙனங் கூறுமது மாறுகொளக் கூறலென்னுங் குற்றமாம் பிறவெனின், ஆகாது; என்னை? அஃதொரு பொருளோ டொருபொருளை யுவமித்தகற்குவமவுருபு கொடுத்துப் பிறிதொரு பொருளை யுவமித்தல். அதற்குச் செய்யுள், "மதியத் தன்ன வாண்முகம் போலும், பொதியவிழ் தாமரைப் புதுப்பூம் பொய்கை" என்பது; மதியத் தன்ன வாண்முகத்தை யொக்கும் தாமரை யென்றமையின் அவை யொன்றிேனாடொன்று பொருந்தா தென்பது கருதி மறுத்தார், இஃ தன்ன தன்று. என்னை? பருமணிவடந்தோய்ந் தெழுதரு பணைமுலையினையுடையாயெனத் துணித்துக் கூறினமையா னென்றுணர்க. "ஈர்ந்து நிலந்தோயு மிரும்பிடித் தடக்கையிற், சேர்ந்துடன் செறிந்த குறங்கினைள் குறங்கென, மால்வரை யொழுகிய வாழை வாழைப் பூவென" என்பது போலக் கூறினாரென்க. பகுதி - உடன்போக்கு. துறை - பதிபரிசுரைத்தல். பா-நேரிசையாசிரியப்பா.

உரு. பொதுநீங்குவமை யென்பது உவமையைக் குறிப்பினானுதல் வெளிப்படையானுதல் கூறி மறுத்துப் பொருடன்னையே பொருட்குவமையாக்கி யுரைப்பது:—

முற்குணத்தான் மாதர் முலைப்பா லருந்தாத
நற்குணத்தால் வேதமொரு நான்கினையுஞ்—சிற்குணத்தா
லோதா துணர்ந்துணர்த்து முத்தமமா றற்கிணைபார்
மீதார் மனனே விளிம்பு.

இது குறிப்பால் வந்த பொது நீங்குவமை. இதனுள் மனனே விளம்பென்மது மரபுவழுவமைதி; என்னை? நாவாகிய

பொறியினது கிரியையை அந்தக் கரணத்தின்மேலேற்றி யதனைக் கூறுக வென்றதனால். நாவாகிய பொறிக்குச் சொற்கிளத்தலுஞ் சுவையறிதலுமாகிய இருதிறத்தனவா மவையிரண்டு மந்தக்கரணங்கள்கூடாதே யதற்குங் கூடாதாதலானதனை யங்ஙனங் கூறப்பட்டது. திணை - பாடாண். துறை - "அமரர்கண முடியு மறுவகை யானு" மென்பதனான் முனிவர்வாழ்த்து.

வாரியை மொண்டுண்டோன் வசிட்டன் முதலாய
சீரியரின் ஞானஞ் செறிந்ததாற்—காரிதருஞ்
சேயே யுடையநங்கை செம்முலைப்பா லுண்ணுதாய்
நீயே நினக்கு நிகர்.

இது வெளிப்படையாய்வந்த பொதுநீங்குவமை. துறை - இதுவுமது.

ஆகப் பலபொருளுவமைமுதற் பொதுநீங்குவமையீறாக வுவமவிரி யிருபத்தைந்தும் அடைவே காண்க.

17. சிறப்பினும் வரூஉந் திறமுமொன் றுளதே

(எ-ன்) இஃது உவமவிரியு ளோதாததாகவொழிந்த தொன்றுணர்-ற்று.

(இ-ள்) ஒரு பொருளைப் பிறிதொருபொருளாகச் சிறப்பித்துச் சொல்லுமிடத் துளவாய்வரூஉங் கூறுபாடு மொன்றுளதென்றவாறு.

சிறப்பென்பது ஒருபொருளையெடுத் ததற்குச் சிறந்த பல அடைகளையு முவமித் தவற்றுனே யுவமையாக்கி யுரைப்பது.

நுண்டுகிற் கொடிக ளுடங்குபுவ ளங்கெழு
வெண்பொன் மாளிகை சுலாம்வீதி தெண் டிரையெழும்
பாற்கடற் பரப்பதாய் வரிபல பயின்மதிண்
மேற்பட நிவந்து விளங்கு கோபுர

மைவாய்ச் சேடன் மண்டலித் தனளுகிப்
பைவாய்த் தலைநிமிர் பான்மைய வாகக்
கருங்கடன் மொண்டெழுங் கருவிக் கார்மழை
யொருங்கத னனந்தலை யுறப்படிந் ததொடு
மோங்குபொற் கம்பத் துச்சிமே லதனொளி
பாங்குற வுச்சியிற் பதிதரு பானு
யோகநித் திரைகொளு முரவோ னுந்தியி
னேகதாட் டாமரைப் பொகுட்டிறை வணிநகர்
சினகரக் குருகா புரியினுட் செவ்வியி
னனவர தமுஞ்சரா சரங்க ளாக
வுதிக்குமன் னுயிர்களை யுவந்தே
துதிப்பர்நித் தியரெனத் துறவு ளோரே.

இது சிறப்புவமை. திணை - இதுவுமது. துறை - சினகர வாழ்த்து

18. அடையொடு பொருட்கடை புணர்க்குமஃ திரட்டை.

(எ-ன்) இதுவும் விரியுளோதாத வொழிபுணர்-ற்று·

(இ-ள்) அடையடுத்த முக்கியபொருட் கொப்புமை கூறும் ஒப்புடைப்பொருளிடத்து முக்கியப்பொருளி னடை புலப்படப் புணர்ப்பது மிரட்டையுவமையா மென்றவாறு.

புணர்ப்பது மென் னு மும்மையால் ஒற்றைக்கிளவியும் இரட்டைக்கிளவிவழித்தாகிவருவன; என் னை? "இரட்டைக் கிளவி யிரட்டைவழித்தே" என்றூராகலின். உவமை யென்பது அதிகாரத்தாற் பெற்றது.

நறைமல்கிய கொழுங்காவியைப் போனள்ளிர வினுநீ
டுறைமல்கிய கண்டுயிலாமை யன்பர்க்குரைக் கிலநான்
மறைமல்கிய செந்தமிழ்பா றன்வண்குரு கூர்ப்பொருநைத்
துறைமல்குசே வற்சிறையிறை நீங்கிற்றுயரன்னமே.

இஃ திரட்டையுவமை;நறைமல்கியகாவிபோ லுறைமல்கிய கண்ணென்பதா லறிக. மல்குதல் - பெருகுதல். உறை - துளி. இறை நீங்கில் - சிறிது நீங்கில். துயரன்னம் - துன்புறுமன்னம். பகுதி - ஒருவழித்தணத்தல். துறை - ஓதிமப்பெடையோடு யுரைத்தல்.

ஊனூறிய விருகோட்டொரு மாவையுறு புனல்வன்
மீனூறுசெய் வதைதீர்த்தபி ரான்வடவேங் கடத்திற்
றேனூறில விதழைக்கண்ட போழ்திலென்சிந் தையும்பர்
வானூர்மதி முகத்தாளித ழாகமதித் திடுமே.

இஃது ஒற்றைக்கிளவி யிரட்டைவழித்தாய்வந்த வுவமை; இதனுள், தேனூறிலவிதழைக்கண்டபோழ்தெனக் கூறியவழிப் பானமூறுமித ழென்றுதே இதழென ஒற்றைக்கிளவியாய்க் கூறினமையா னென்றுணர்க. பின்னர்வந்த விதழ்-அதரம். உம்பர் வானூர் மதிமுகத்தா ளென்பதன்கண்ணு மிவ்வுமமை வந்தவாறு காண்க. அது, "கருங்கால் வேங்கை வீயுகு துறுகல் லிரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை" என்னுங் குறுந்தொகைப் பாட்டினுங் காண்க. முன்னர்வந்ததற்கும் "பொன்காண் கட்டளை கடுப்பச் சண்பின்-புன்காய்ச் சுண்ணம் புடைத்த மார்பின்" என்பதனுட் காண்க. பகுதி-இடந்தலை. துறை-புனங்கண்டுமகிழ்தல்.

19. உவமையு முருபுந் தொடர்வழிப் பிறிதுமொன்
றுவமே யப்பொருட் கடைபுணர்ப் பதுமுள.

(எ-ன்) இதுவு மெய்தாத தெய்துவித்தது.

(இ-ள்) ஒப்புடைப் பொருளொடு புணர்ந்த வுவமவுருபிற் குப் பின்னுகப் பிறிதுமோ ரொப்புடைப்பொருண் முக்கியப் பொருட் கடையாக முன்னோராற் புணர்க்கப்பட்டுவருவது முளவென்றவாறு. இஃ திலக்கியங்கண்டதற் கிலக்கணங் கூறியதெனவுணர்க.

அம்பனைய வேற்கண் ணணங்கா லறிவழிந்த
திம்பருனக் கெய்தியதா லெவ்வுளா—னும்பரெலாம்
போற்றவருண் மாலைப் போற்றூர்போ லாயினையான்
மாற்றமிதற் கென்னுரைக்கேன் மற்று.

அம்பனையவேற்கண்ணென்றவழி யுவமப்பொருளின் றுருபின் பின்னர் வேற்கண்ணென வந்தவாறு காண்க. இதற்கு முன்னோர் கூறிய விலக்கியமாகக் கண்டன யாவையோ வெனின், "துப்புறழ் தொண்டைச் செவ்வாய்" எனத் திருத்தக்கமாமுனிகள் கூறிய சிந்தாமணியினும், "ஆம்பனாறுந் தேம்பொதி நறுவிரைத்-தாமரைச் செவ்வாய்" என்புழித் 'தேம்பொதி நறுவிரை யாம்பனாறுந் தாமரைச் செவ்வாய்' என இளங்கோவடிகள் பாடிய அந்திமாலைச்சிறப்புச்செய்காதையினுங் கண்டவையென்றுணர்க. இம்பருனக்கும் என்னு மும்மை செய்யுள் விகாரத்தாற் றொக்கது. பகுதி-பாங்கற்கூட்டம். துறை-பாங்கன் கழறல்.

20. மரபினும் வருவதோர் மரபுடைத் தென்ப.

(எ-ன்) இதுவு மெய்தாததெய்துவித்தது. இலக்கியங் கண்டதற்கிலக்கணங் கூறலுமாம்.

(இ-ள்) ஒரு தொடர்பினு ளொருபொருட்காதல் பலபொருட்காதல் உவமை கூறுமிடத் துவமப்பொரு ளொருகுழுவினு ளொருமரபாகப் பலவுவமம்வருவது மரபுவமையா மிலக்கணத்தை யுடைத்தென்று கூறுவர் சான்றோரென்றவாறு

செந்தா மரைவதனஞ் சேதாம்பல் வாய்நயன
நந்தாத செங்குவளை நாடுங்காற்—கொந்தார்
வதுளம் புனைவார் வரைமயிற் குக்கஞ்ச
முகுளம் புணர்மா முலை.

இது மரபுவமை; என்னை? கோடு கொடி நீர் நிலம் என்னும் நால்வகைப் பூக்களுள் நீர்ப்பூவாகிய குழுவுள், செம்மையென்னு மோரிலக்கணத்தனவாந் தாமரை யாம்பல் குவளையென்னும் மூன்றினையும் முகம் வாய் நயனம் முலை யென நான்கிற்கு மரபு பொருந்துவனவாக வுவமம் புணர்த்தலினெனக் கொள்க. இதற் கிலக்கியங்கண்டதாவது: "கடையாயார் நட்பிற் கமுகனைய ரேனை, யிடையாயார் தெங்கி னனையர்-தலையாயா, ரெண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே, தொன்மை யுடையார் தொடர்பு" என்பதனுள் ஓரினத்தனவாகிய புறக்காழ்ப் புன்மரமேகூறி யொழிந்தமரங்களொப்பன வுளவாயினுங் கூறாராயினாராதலான் மரபுவமையாமென வுணர்க. துறை-இயல்பிடங் கூறல்.

21. ஒத்தது வென்றதென் றொருபொருட் குவமை
வைத்தன வாயொரு தொடர்பினும் வருமே.

(எ-ன்) இதுவு மெய்தாத தெய்துவித்தது.

(இ-ள்) ஒரு பொருட் குவமை கூறுமிடத்து ஒரு பொருளை யொத்தது ஒரு பொருளை வென்றது என் றிருபொருளைக் குறித்தனவா யொரு செய்யுளகத்து வருவனவு முவமவிலக்கணத்திற்குக் கூடியும் நீங்கியும் வருமென்றவாறு:—

கூற்றுவன்வேல் போன்று குகன்வேலை வென்றுகொலை
யாற்றலுறும் வன்கண் ணமர்விழிப்பத்—தோற்றமுறுங்
கொலவிப்பா வைக்கிணையாய் நின்றதெவன் கோகனக
வல்லிப்பா வைக்கிணையா வாய்.

இஃது ஒத்தது வென்றதென்றல். ஆற்றல்-பெருமை. தோற்றம்-பொலிவு. கொல்லிப்பாவை-காமுகரைக் கொல்லும் பாவை. கோகனகவல்லிப்பாவை-திருமகள். பகுதி-இயற்கை. துறை-இரந்து பின்னிற்றல்.

தெண்ணறவை வென்றுதிரைத் தெள்ளமிர்தை
யொத்தமொழிப்
பெண்ணரசே மாதவன்றென் பேரைவாய்த்
—தண்ணறும்பூக்
கொய்யாம லாயமுடன் கூடாம லூசலிற்றுள்
வையாம னின்றதென்னோ மற்று.

இது வென்ற தொத்த தென்றல் பகுதி-இதுவுமது.
துறை-முன்னிலையாக்கல்.

22. ஏது நுதலிய முதுமொழி யினும்வரும்.

(எ-ன்) விரியுவமையினு ளின்னு மோரொழிபுணர்-ற்று.

(இ-ள்) அவ்வுவமை யேதுப் பொருளைக் குறித்து முடித்தற்குப் பிறிதொரு பழமொழியினும் வருமென்றவாறு.

பாம்பு கடித்ததற்குத் தேளுக்குப் பார்ப்பதுபோ
லாம்புகழ்மால் கச்சி யணிவரைவா—யாம்பகட்டா
லோடத் துணிந்தளித்தா னுய்த்தநோய்க் கின்றுவெறி
யாடத் துணிந்தா னறிவு

இஃது ஏதுநுதலியமுதுமொழியுவமை; என்னை? "நுண்மையுஞ் சுருக்கமு மொளியுடைமையு, மென்மையு மென்றிவை விளங்கத் தோன்றிக், குறித்த பொருளை முடித்தற்கு வரூஉ, மேது நுதலிய முதுமொழி யென்ப" என்றாராகலின். இதனுட் குறித்த பொருண் முன்னரொரு முதுமொழியினை வைத்துப் பின்னர்த் தான் குறித்த பொருளை வெளிப்படையாக வைத்தமையா னெனவுணர்க. பகட்டாலோடத் துணிந்தளித்தானென்பது யானையைக்கண் டியாங்கள் பயந்தோடா நிற்ப அவ்வியானையையும் பொருதற்குத் துணிந் திவளுயிரைத் தந்தானென்க. உய்த்தநோய்க்கு-தந்தநோய்க்கு. வெறியாடத் துணிந்தான் என்பது இகழ்ச்சிக் குறிப்பு அறிவென்ற தீண் டறியாமை.

'உழுத வுழுத்தஞ் செய் யூர்க்கன்று மேயக், கழுதை செவியறிந் தற்றால் வழுதியைக், கண்டாங் கண்ணீ ருகுப்பப் பெரும் பணைத்தோள், கொண்டன மன்னோ பசப்பு'' என்பது மிது. துறை-வெறிவிலக்கு

23. பிசியினும் புலப்படும் பெற்றிய தாகும்.

(எ-ன்) இதன் முன்னர் விரியுவமையி னொழிபுகூறி யித னுட் டொகையுவமையினதொழிபுணர்-ற்று.

பிசியென்பது நற்பொருள்; என்னெனின்? ''பிசியென்ப பொய்யுஞ் சோறும் பேசுநற் பொருளும்'' என்பதனு லறிக

(இ-ள்) பிசியென்ற இலக்கணத்தோடும் புலப்படு மியல் பினையுமுடைத் தவ்வுவமை யென்றவாறு.

அஃதாவது உவமேயப் பொருட்குள்ள சினை வினை சார்பு முதலியன வுவமப் பொருட்கண் ணில்லையாயினும் அவற்றை யதனோடு சார்த்தி யுவமப் பொருளொன்றனையுங்கூற வுவமே யப் பொருளு மேதுவு முவம வுருபும் விரிந்து புலப்படுதலாம்.

வருங்குன் றினைக்கடிந்தெம் மன்னுயிரைத் தந்தா
னிருங்கங் கணக்குன் றிருப்பப்—பெருந்தகைசால்
செந்தமிழ்மா றன்சிலம்பிற் சேய்நீ நடித்தருந்த
வந்தையா னேதடுப்பேன் மற்று.

இஃது ஒப்பொடுபுணர்ந்த வுவமத்தானுஞ் சார்பினானும் வந்த பிசியுவமை; என்னை? 'ஒப்பொடு புணர்ந்த வுவமத் தானுந், தோன்றுவது கிளந்த துணிவி னானு, மென்றிரு வகைத்தே பிசிவகை நிலையே'' என்றாராகலின். இதனுள், வருங்குன்றினை யென்றது யானையை எனவும், இருங்கங் கணக்குன்றென்றது சார்போடுந் தோளினை யெனவும் வினை யானும் வடிவானும் சார்பானும் உவமவுருபுமுதலியனவு முவ மேயப்பொருளும் புலப்படுவதாயிற்று. ஒழிந்த அகல முரை

யிற்கொள்க. பகுதி-இதுவுமது. துறை-களிற்றிடையுதவிக் கறத்தொடு நிற்றல்.

24. முக்கியப் பொருட்கு முக்கியப் பொருளுவமை
புணர்ப்பது முதன்மைப் புலனெறி வழக்கே.

(எ-ன்) இதுவு மொருவகையா மொப் புணர்-ற்று.

(இ-ள்) உவமேயப்பொருட் குவமேயப்பொருள்களை யுவமமும் பொருளுமாக்கிச் செய்யுளகத் துரைப்பனவும் புலவராற்று வழக்கமா மென்றவாறு. இஃது இலக்கியங்கண்டதற் கிலக்கணங் கூறல்.

சீதரனே முத்தனெனுந் தேற்றமுறச் சிந்தையினுட்
பேதமைபோ லற்றபிறர் நசையும்—பாதகமாம்
பொன்று வழுக்கா றெனப்போ யதுபுலமைக்
கொன்றுப் புறங்கூ றலும்.

என்பது, நெஞ்சமே! நாம் ஸ்ரீமந்நாராயணனே யகிலாண்ட கோடி பிரமாண்டங்களையுஞ் சத்தாவரணங்களையும் பிரகிருதியையும் கடந்து மேலாய விரசைக்கக்கரையா முத்தியைத் தருவதற்குரியனென்ப தாரியனுலுணர்ந்து அறிவு பிறந்த பின்னர் நம்மிடத்து முன்பு நின்ற வறியாமை போல வகன்ற தொழிந்த அரனயனென்னு மிருவரைப்பற்றின நசையும்; அதுவுமன்றிப் பாதகத்திற் கேதுவா மழுக்காறகன்றதுபோலகன்றது அறிவிற்குப் பொருந்தாப் புறங்கூறலும்; ஆதலாலினி நாமீடேறினே மென்றவாறாயிற்று.

திணை-பொதுவியல். துறை-முதுகாஞ்சி. எதிர்மறைகளை யுவமமும் பொருளுமாக்கிய திரண்டானும் பெறுதற்கு இலக்கியம். 'இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்குங், கழிபேரிரையான்க ணோய்'' என்பதனுலறிக.

25. உருவக நிரனிறை யதிசயஞ் சிலேடை
தற்குணந் தற்குறிப் பற்புதம் விரோத
மொப்புமைக் கூட்ட மேது விலக்குடன்
மெய்ப்பட விரவு மேதக வுடைத்தே.

(எ-ன்) அவ் வுவமையலங்காரம் பிறவலங்காரங்களோடுங் கூடி வருமாறு கூறுகின்றது

(இ-ள்) உருவகமுதலாக விலக்கீறாக மேற்கூறப்படும் பதிஞேரலங்காரங்களுடன் விரவிவரு மவ்வுவமையலங்கார மென்றவாறு.

மெய்ப்படவிரவும்-பொருள்பெறவிரவு மென்பதாம். மேதக வுடைத்து பெருமையுடைத்து.

26. இவைதத் தமவிலக் கணங்களிற் றிறம்பா
துவமச் சொற்புணர்ந் திறினஃ துவமை.

(எ-ன்) இஃ தவ்வுவமையலங்காரம் பிறவலங்காரங்களோடுங் கூடி வருவதற் கோ ரறிகுறியுணர்-ற்று.

(இ-ள்) இவை-பதிஞேரலங்காரமும், தனக்குத் தனக்கு விதித்த விலக்கணங்களிற் குன்ருது துவமவுருபுடனேகூடி யுவமையாந்தன்மை பெறமுடியுமாயி னவற்றை யவ்வவபெயரானே யுவமையென்று பெயர் கொடுத்து வழங்கப்பெறு மென்றவாறு.

பூந்தண் வகுளா பரணன் புயசயிலம்
வாய்ந்த வருவிவரை மாறும்—பாய்ந்ததிரை
தங்கொலிநீர் வையந் தனைச்சூழ் நடுரத்தும்
பொங்கொளிசேர் முத்தவடம் பூண்டு.

இஃது உருவகவுவமை. இதனை முதனூல்செய்த தண்டியாசிரியர் உருவகத்தின்கண் ணுவமையுருவக மென்ருர். அதற்குக் காட்டிய "மதுமகிழ்ந்த மாதர் வதன மதிய, முதய மதியமே யொக்கும்" என்ற செய்யுளகத் துருவகவாய்பாடாக

வங் துவமவுருபோடிறுதலி னது பொருந்தாதாதலா னிவ ரதனை யுவமையி லுருவகவுவமையென்று பெயர் கொடுத் ததே பொருத்தமென்றறிக. பூந்தண் வகுளாபரணன்-பொலி வினையுங் குளிர்மையையுமுடைய மகிழமாலிகையை யாபரண மாகவுடைய மாறன். புயசயிலம்-திருப்புயங்களாகிய மலை. வாய்ந்த-புலப்படுவதான. அருவிவரைமானும் - நீரருவியோடு கூடிய வரையை யொக்கும். பாய்ந்ததிரை-பரந்ததிரை. புயசயி லம் முத்து வடம்பூண்டதால் நீரருவியுடன்கூடிய மலையை யொக்குமெனக்கூட்டுக. திணை-பாடாண். துறை-புயவருணனை.

மலைமதிதேன் மாறன் வரைவேல் விழியாண்
முலைவதன நண்பா மொழி.

இது நிரனிறையுவமை. பகுதி - பாங்கற்கூட்டம். துறை- இயல்பிடங்கூறல்.

புருவ நயனம் பொருசிலைவேல் போன்ற
திருமகணின் ஞேடுவரிற் செல்வா—கருவிளைமென்
பூநீ னிறமாயன் புட்குழிசூழ் வாசமலர்க்
காநீர்த் தடமாங் கடம்.

இதுவுமது. இவையிரண்டும் பெயரோடுபெயர் நிரனிறை யுவமை. வாசமலர்க்கா நீர்த்தடமாம்-பரிமள மலர்ச்சோலையும் வாவியும்போலக் குளிர்மையையுடையவாம்; கடம்-சுரம், நின் ஞெடுவருகி லவளுக்கெனக் கூட்டுக. ஒழுந்த வகல முறையிற் கொள்க பகுதி-உடன்போக்கு. துறை ஆதரங்கூறல்.

காருலா வியகொழும்பொன் மணிமாட வெயிற்பிழம்பு கதுவ நாளு
மேருமால் வரையெனவே பொலிந்தபனி வரைக்குலங்கள் வேலை நீர்சூழ்
பாருமா டகநகரிற் சிறந்தவிறன் மதன்மகுட பந்தி யானும்
வாருலா முகிழ்முலை மங்கையருமலை மகன்குழுவின் வாழ்வார் மன்னே.

என்பது குணவதிசயவுவமை. திணை-பாடாண். துறை-நகர வாழ்த்து (குருகாசன்மியம்).

வார்செறிந்து கல்லார மன்னியக லத்தவாய்த்
தார்செறிந்த வல்லியெழு தற்கிடமாஞ்—சீர்செறிந்த
நற்றிருமால் வைகியதென் னைகைத்தட மானு
முற்றிழையாண் முற்று முலை

இது செம்மொழிச்சிலேடையுவமை. தடத்திற்குந் தனத்திற்குஞ் சிலேடை.

(இ-ள்) தண்ணீர்பொருந்திச் செங்கழுநீரோடுங்கூடி யிடமகன்றதாய்ப் பூநெருங்கின வல்லிக்கொடிகடோன்றுதற் காகரமாந் தடத்தையொக்கும். கச்சினதகத்தடங்கி மாணிக்கப்பூணிலைபெற்று மார்பிடத்தவா யொழுங்குசேர்ந்த தொய்யிலெழுதுதற் கிடம்பெற்றன முற்றின முயா ளிளமுலையென்றவாறு.

பொலிவுகுடிகொண்ட நல்ல திருமால்வைகு மழகிய திருநாகைத் தடத்தை யெனக் கூட்டுக தட த்தின்மேற் சொல்லுங்கால் வார்-தண்ணீர். செறிதல்-பொருந்துதல் கல்லாரம்-செங்கழுநீ மன்னி-கூடி. தார்-பூ. செறிதல்-நெருங்குதல். வல்லி கொடி. எழுதல்-தோன்றுதல்; இடமாம் ஆகரமாம். தனத்தின்மேற் சொல்லுங்கால் வார்-கச்சு. செறிதல்-அடங்குதல். கல்லாரம் மாணிக்கப்பூண். மன்னி-நிலைபெற்று. அகலம்-மார்பு. தார்-ஒழுங்கு. செறிதல் சேர்தல். எழுதல்-எழுதுதல். இடமாம் இடம்பெற்றதாம் என்க. பகுதி-பாங்கற் கூட்டம். துறை செவ்விசெப்பல். பகுதி இயற்கை. துறை-நலம்புனைந்துரைத்தலுமாம்.

மான்மதங்கூர் வெங்களப மட்டிக்க மைந்துளவாய்க்
கானிலவா வாரமிழல் கைக்கொண்ட—ஞானமுனி
செஞ்சொற் றமிழ்மலய மேபோலுஞ் சீதரன்வாழ்
தஞ்சைத் திருமன் றனம்.

இதுபிரிமொழிச்சிலேடையுவமை இது மலயத்திற்குந் தனத்திற்குஞ் சிலேடை.

(இ-ள்) மயக்கத்தைத் தருங் கடமுண்டான வெம்மையைச் செய்யும் யானையும் பூவிற்றேனும் வைத்ததேனும் நிறைந்

துளவாய்க் காடாய இலவும் ஆச்சாவும் சேர்ந்த மலைப்பக்கங்கள் குளிர்மையைத் தன்னிடத்துக் கொண்ட தமிழ்மலையையொக்கும், கத்தூரி மிகுந்த விருப்பத்தைத் தருஞ் சந்தனச் சேற்றைப் பூசப் புளகித் திறுகிய வலியையுடையவாய்ப் பரிமள நிலைபெற்று முத்தியொளியைத் தன்னிடத்துக்கொண்ட புன மான்போலும் விழியையுடையாள் தனம் என்றவாறு.

ஞானமுனி செஞ்சொற் றமிழ்மலையை யெனவுஞ் சீதரன் வாழ் தஞ்சைத் திருமான் றனமெனவு முன்னும் பின்னுங் கூட்டுக. கூர் வெங்களபம் - வினைத்தொகை. ஏ கா ர ம் - அசை. பொதியத்தின்மேற் சொல்லுங்கால் மால் - மயக்கம். மதம்- கடாம். கூர் - உண்டான. வெம்மை - வெப்பம். களபம் - யானை. மட்டு - பூவிற்றேன். இக்கு - வைத்ததேன்; "தேன், றுளியோடு மதுத்துளி" யென்றார் சிந்தாமணியினும். அமைதல் - நிறைதல். உளவாய்-உண்டாய். கான் - காடு. இலவு - இலவமரம். ஆ - ஆச்சா மரம். வாரம் - பக்கம். நிழல் - குளிர்மை. முலைமேற் சொல்லுங்கால். மான்மதம் - கத்தூரி. கூர்தல் - மிகுதல். வெம்மை-விருப்பம். களபம்-சந்தனச்சேறு. மட்டித்தல்-பூசுதல். மைந்து-வலி. கான்-பரிமளம். நிலவா-நிலைப்பெற்று. ஆரம்- முத்துவடம். நிழல்-ஒளி. கைக்கொண்ட வென்ப திருதலைக்கு மொருபொருள். இது பகுதி-இயற்கை. துறை-நலம்புனைந் துரைத்தல்.

நடுக்கற் றறைவளத்தி னன்பொருள்க ளெல்லா
மிடுக்கற் றுதவு மியல்சான்—றொடுக்கமற
வேய்ந்த மலைய மெனவளர்கின் றான்பரன்சீ
ராய்ந்த தமிழ்மகிழ்மா றன்.

இஃது இருவகைச் சிலேடையும் விரவி யிரண்டுபொருளைக் கவிநாயகனுக் குவமையாக்கி யவற்றை யிரட்டுற மொழிந்து மூன்றாவது கவிநாயகன் மேலுஞ் சிலேடை செல்வதாக வவுனு

மலைபோலிருந்தானென்னு மூன்றுபொருள்பயந்த சிலேடை யுவமை. இது பொதியத்திற்குங் கடலுக்குங் காரியமாறப் பிரானுக்குஞ் சிலேடை.

(இ-ள்) அசைவற்றுப் பக்கப் பாறைகளின் வளத்தோடுங் கூடி நல்ல பொருள்களையெல்லாங் குறைவற்றளிக்கு மியல் பமைந் தழிவின்றித் தகுதியடைந்த பொதியமலையொப்பெனவும் தழையாநின்றனன், மத்திமம் பாராகிய தறைவளத் தோடுங்கூடி நல்ல பொருள்களையெல்லாங் குறைவறவளிக்கு மியல்பமைந்து அழிவின்றித் தகவடைந் தழகிய வலையையுடைய கடலை யொப்பெனவுந் தழையா நின்றனன், அவன் யாரெனில் உண்மை நூல்களை யோதாதுணர்ந்து பிறர்க்குணர்த்தும் வளத்தினோடுங்கூடி நல்ல பொருள்களையெல்லாங் குறைவற வளிக்குந் தகுதியடைந்து பரத்துவ சொரூபரூபகுணவிபூதி யாகிய பொலிவினை யாராய்ந்த திருவாய்மொழி யென்னுந் தமிழையுடைய திருமகிழ்மாறன் என்றவாறு.

மலயத்தின்கண்மேற்சொல்லுங்கால், நடுக்கு-அசைவு. அற்று-இன்றி. அறை-பாறை. வளத்தின்-வளத்தோடுங்கூடி. கடன் மேற்சொல்லுங்கால், நடு-மத்திமம். கற்றறை-பாராகிய தறை. வளத்தின்-வளத்தோடுங்கூடி. மாறன்மேற் சொல்லுங்கால், நடுக்கற்று-உண்மைநூல்களையோதாதுணர்ந்து.அறை உணர்த்தும். வளத்தின் வளத்தோடுங்கூடி என்க. எல்லாம்-முழுதும். இடுக்கு-குறைவு அற்று இன்றி. உதவும்-அளிக்கும். இயல்-இயல்பு. சான்று-அமைந்து. ஒடுக்கம்-அழிவு அற்று-இல்லையாக. என்க.

இப்பாட்டினுள் 'வளத்தி னன்பொருள்களெல்லா மிடுக் கற்றுதவுமியல்சான் றொடுக்கமறவேய்ந்த'' வென்னுந் துணையு மூன்றுபொருட்கு மத்தச்சிலேடை யொன்றாய்நின்றன. அவற் றுள்ளும் பொருளென்பது பலபொருளொரு சொல்லாதலின்

மலை முதலிய மூன்று பொருட்குமுறை முறையே சந்தனம் அகில் குங்குமம் தக்கோலம் ஏலம் இலவங்கம் சாதிக்காய் தேன் என்பனவும் பிறவும், சங்கு முத்து பவளம் என்பனவும் பிறவும், சிச் தசித் தீச்சுர மென்பனவுமாம். இதனுள், ஏய்ந்தமலைய மெனநின்ற பெயரெச்சவாய்பாட்டைக் கடலைக்கூறுமிடத்து ஏய்ந்து என வினையெச்சவாய்பாடாக நிறுத்தி அம் அலையென்ப வற்றை இடையில் ஏற்பன வந்தனவாக வளர்கின்றானென் னுந் தன்னெச்சமான வினையோடுங் கூட்டுக. பரன் சிராய்ந்த தமிழ்என்பது காரண காரிய மயக்கம். திணை-பாடாண். துறை-செந்துறைப்பாடாண்பாட்டு.

பெற்றா ளிகழ வளர்த்தா ளிடர்செயப் பேர்த்துறவோன்
றற்றாக மெங்குங் கருகியும் வாய்விட் டரற்று மந்தோ
பொற்றா மரைக்கண்ணன் விண்ணோர் பிரான்புட் குழியில் வஞ்சங்
கற்றார் பொருட்பிரி வுற்றிடை வேனிற் கருங்குயிலே.

இஃது அந்தச்சிலேடையுவமை. பகுதி-பொருள்வயிற்பிரிவல். துறை-குயின்மேல்வைத்துக்கூறல். சொற்பொருள்காரணமாகவும் உவமைபிறக்கும்; அவை முன்னர்க்காட்டுதுமென்றும்; அவை யிவையெனவுணர்க.

அறிவுடையார் தத்துவநுண் பொருளுரையாய்ந் தறிவொன் றில்லா [தறிகழகத்
வறிதுடையா ரடைதரிற்சிற் குணத்தினராய்த் வாழ்வு போல [தலைப்படுமவ்
வெறிவரிவண் டுளர்நறுமென் சந்தனப்பூம் விராய வேலை [பொதும்பரிடை
முறிபடுதண் சினைவெளிற்றுத் தாருவுமாங் கதிற்கமழு முதன்மைத் தாமே.

இது தற்குணவுவமை. துறை-பருப்பதவாழ்த்து.

சிலைவணக்குந் திருநுதலார் சிற்றிடையை வணக்கியவச் சிறுமை நோக்கி

முலைவணக்கஞ் செய்ததுபோன் முதுக்குறைவந்
முதிர னோன்று [தடைந்துபொறை
ணிலைவணக்கங் கொண்டதுகண் டன்றதாய் சுமந்திறுத
னெறித்தன் றென்றே
தலைவணக்கங் கொண்டுகதிர் நிலமகட்கே சரணமெனச்
சாய்ந்த மன்னே.

இது தற்குறிப்பேற்றவுவமை. நாடுவாழ்த்து. (இவை யிரண்டுங் குருகாமான்மியம்.)

கொடிமேல் வளருமிரு குன்றுமுள வென்னும்
படிமே தகப்பணைத்த பாவாய்—வடிவேற்கட்
பொற்றொடிக்கைப் பூமகள்கோன் புத்தூர்வ ரைமடமான்
சிற்றிடைமேற் கொங்கைத் திரள்.

இஃது அற்புதவுவமை; என்னை? குன்றின்மேற் கொடி வளர்வ தல்லது கொடிமேற் குன்று வளர்வதின்று. ஆதலான் அற்புதவுவமை. அற்புதமென்பது ஆச்சரியம். பகுதி-சேட்படை. துறை-பாங்கிக் கவயவங் கூறல். பாங்கன் செவ்விசெப்பலு மாம்.

மின்னு மரவும் விளங்கிழாய் நின்னிடையும்
பன்னு தமிழ்மாறன் பனிவரைவா—யுன்னில்
விருத்தமுள வாயிருப்ப மெய்யுவமைக் கென்னே
பொருத்தமுடைத் தென்னும் புவி.

இது விரோதவுவமை. பகுதி-இடந்தலை. துறை-நலம் புனைந்துரைத்தல்.

எப்பொருளுங் கோதற் றிசைக்குமறை யம்மறைபோன்
மெய்பொருளெல் லாஞ்சொலுநின் மெய்த்தமிழு
—முப்பொருளு
மாசின் றுணர்த்து மயனயன்போன் மாறநீ
யாசின் றுணர்த்து மவை.

இஃது ஒப்புமைக்கூட்டவுவமை. எப்பொருளு மென்பன:— "மிக்க விறைநிலையு மெய்யா முயிர்நிலையுந், தக்க நெறியுந் தடையாகித் தொக்கியலு, மூழ்வினையும் வாழ்வினையும்" என்பனவாம். முப்பொருளும்......... உணர்த்தும் என்பது அங்ஙன முதலிற் கூறிய மறை. அரி அயன் அரனென்னுமவர் மூன்று பொருளாய் முக்குணமாய் மூன்று தொழிலா யிருக்குமெனக் கூறிய வண்ணமே குற்றமின்றி யுணர்த்து மென்பதாம். இன்றியென்னும் வினையெச்சவாய்பாட்டிகரம் இன்று என உகரவீருயிற்று; என்னை? "அன்றி யின்றியென் வினையெஞ் சிகரந், தொடர்பினு ளுகர மாய்வரி னியல்பே" என்றாகலின். அவற்றை யென்பது அவையென இரண்டாவ திறுதியிற் றொக்கது. கோதற்றென்பதனைக் கோதறவென்றாக்குக. முன்னது - பனுவல்வாழ்த்து. பின்னது-இயன்மொழிவாழ்த்து.

மாடகு ளிகைக்கொழும்பொற் றகட்டமைத்த
வயிர நீலம் [முழுமணிவால்
பாடல்சால் பசுமணிபொன் னிறப்புருட ராகமிவை
பத்தி வாய்ந்து
கோடலால் வளந்தருசெங் கேழ்கிளர்மாண் செக்கரோடுங்
குறைவொன் றில்லா
வாடகா சலக்குடுமி வளைத்தெழுமிந் திரதனுவொத்
தவிர்வ தொன்றே.

இஃ தேதுவுவமை. துறை-நாடுவாழ்த்து. (குருகாமான்மியம்).

பூரணமாங் கண்மலர்க்கும் புத்திக்குந் தித்திக்குங்
காரணத்த தாமோ கடலமிர்தந்—தாரணிமேற்
கன்னியிடத் தாபரவக் காகோ தரத்துவளர்
பொன்னியிடத் தாரமுதைப் போல்.

இது விலக்குவமை. துறை-கடவுள்வாழ்த்து.

அளிமருவும் பொற்கா வகமணந்துஞ் சங்க
வொளிமருவு நீணிதியுட் கொண்டும்—விளிவில்லா

நன்னரங்க வீடருள நாடாத ருளரங்கன்
றென்னரங்க நேர்வரும்புத் தேள்.
இதுவும் விலக்குவமை.

(இ-ள்) அளிமருவும் பொற்கா-கொடையைப்பயிலும் பொற்சொரூபமான கற்பகக்கா. மணந்து-குடிபுகுந்து. சங்க வொளி மருவுநிணிதி-சங்கநிதி. திருவரங்கந்தின்மேற் சொல் லுங்கால், வண்டு பொருந்திய பொலிவையுடைய சோலைகள். (மணத்தல்) பரிமளங்கூர்தல். சங்கவொளிமருவுநிணிதி-பாஞ்ச சன்னியத்தைத்தரித்த அன்பர்க் கழியாவைப்பாகிய அரங்கநா தன். நன்னர்-நன்மை. வீடு.பரமபதம். நாடாது; ஒவ்வாது; அப் பரமபதத்தைக்கொடுக்கப் புத்தேள் நினையாது. திருவரங்கம் பரமபதங் கொடுக்கு நினைவுள்ளதா மாதலாற் புத்தேளைத் திரு வரங்கத்துக் குவமை கூறுவது பொருந்தாதெனை விலக்குக நேர்வரும்புத்தேளென்பது இகழ்ச்சிக்குறிப்பு; எதிர்மறையுள டங்கும். இங்ஙன முவமையைக் கூறிவிலக்குதலால் விலக்குவ மையாயிற்று.

இதனுள்ளுஞ் சிலேடை விரவிற்றேனும் வீடருளநாடா தென்பதனுல் விலக்குவமையென்பதே நோக்கம். தண்டியாசிரி யரும் "குழைபொருது நீண்டு குமிழ்மேன் மறியா, வுழைபொரு தென் னுள்ளங்கவரா" வென்னும் விலக்குவமையினுஞ் சிலேடைவிரவியதூங் காண்க: திணை-பாடாண். துறை-நகர வாழ்த்து.

ஆக உருவகவுவமை முதலாக விலக்குவமை யீருகப் பதி ஞென்றும் அடைவே வந்தவாறு காண்க.

27. சிறப்பிற் றீர்ந்த செய்கைய வாகி
யிறப்ப வுயர்த்த லிழித்தன் மிகுத்தல்
குறைத்தல் பான்மாறுதல் கொள்கட னிலவே.

(எ-ன்) உவமைக்குக் கூறிய பொதுவிதிச்சூத்திரத்துட் பெருமையுஞ் சிறுமையும் பெற்றியிற்சிறந்து மென்பதற்குச்

சிறப்பிற்றிரிந்து வருவனவாய்க் கடியப்பட்டன முன்னர்க் கூறப்படுமென்று மவையிவையென்ப துணர்—ற்று.

(இ-ள்) ஒன்றினை யுவமிக்குங்காற் சிறப்பினை நீங்கிய செய்கையையுடையவா யிறப்பவுயர்ந்த வுவமேயத்திற் கிறப்பவிழிந்த வுவமானத்தினை யுவமித்தலு மிறப்பவிழிந்த வுவமேயத்திற் கிறப்பவுயர்ந்த வுவமானத்தினை யுவமித்தலு முவமேயவடைக் குவமானவடை மிகப்புணர்த்தலு முவமேயஅடைக் குவமானவடை குறையப்புணர்த்தலும் ஆண்பாற்குப் பெண்பா லுவமித்தலும் பெண்பாற் காண்பா லுவமித்தலும் ஒருமைப்பாற்குப் பன்மைப்பா லுவமித்தலும் பன்மைப்பாற் கொருமைப்பா லுவமித்தலும் பெரியோ ராமெனக்கொள்ளுங் கடனிலவா மென்றவாறு.

ஆனை யெருத்த மகழ்வான் வெரினேய்க்கும்
பூனை பிடியேறு போன்முழங்கு—மூனை
யயிலரியே றன்னுளி வளிவடன் னாசி
பயில்மணி தா ராகணமொப் பாம்.

இதனுள், இயப்பவிழிந்த அகழ்வான்வெரினை யிறப்பவுயர்ந்த யானையின் முதுகிற் குவமை கூறியதூஉம், இறப்பவிழிந்தபூனைமுழக்கிற்கு இறப்பவுயர்ந்த இடியேற்றின்முழக்கை யுவமைகூறியதூஉம், அரியேறாகி யிறப்பவுயர்ந்த வஃறிணை யாண்பாலை யுயர்திணைப் பெண்பாற் குவமைகூறியதூஉம், நாசியாபரணமான முத்தினொருமைக்குத் தாராகணப் பன்மையை யுவமைகூறியதூஉம் வழுவாயிற்று.

பைஞ்குவளை முல்லை பனிவண்டு லாங்குமுதந்
திங்களிடத் தாயினபோற் செவ்விதரு—மிங்கிதமே
கற்றமர்கூர் கண்ணகைவாய் காமுறவாழ் வெய்தியவிம்
முற்றிழையாள் சோதி முகம்.

இதனுள், உவமானமான குமுதத்துட் புணர்த்த வண்டிற் குவமேயமின்றி யுவமான அடைமிகுந்து வழுவாயிற்று.

தேனருவி நீரருவி யோடே சிறந்துளநற்
றூனவட மேருவெனுஞ் சால்பிற்றே—மானனையார்
சித்திரப்பொற் கச்சணிந்து செய்ய மணிவடமு
முத்தவட மும்பூண் முலை.

இதனுள், பொற்கச்சணிந்தென்னு முவமேயவடைக்குவமான வடை குறைந்து வழுவாயிற்று. பொற்கச்சு-பொன்னெழுத்துக்கச்சு.

சமன்மடந்தை யன்று னிவனிவன்றன் றுரி
சமனனைய ளிங்கிவர்க்குத் தையா—லமர்புதல்வ
ரெண்ணிருவர்க் கொப்பாகு மன்றே யமன்சமரிற்
பண்ணமைத்தாங் கேறும் பகடு.

இதனுள் உயர்திணையாண்பாற் குயர்திணைப் பெண்பாலு முயர்திணைப் பெண்பாற் குயர்திணையாண்பாலும் உயர்திணையாண்பாற்பன்மைக் கஃறிணையாண்பாலொருமையுஞ் சிறப்பிற் றீர்ந்தனவாய் வழக்கின்றாய்க் கூறுதலால் வழுவாயிற்று.

வாலிலாச் சம்புவென வாழ்மதங்கா வந்ததற்குப்
பாலிலா வுண்டிபடை யோமன்—மேலுமக்குக்
கூகைக் கறியிலையே கோதிலாத் தேனுடனே
பாகைச் சொரிந்தென் பயன்.

இதனுள் இங்ஙனம் வாலிலாச் சம்புவெனப் பழித்துவமை கூறுதல் வழுவன்று. சம்பு - நரி. பகுதி - பரத்தையிற் பிரிதல். துறை - பாணனைப் பழித்தல்.

28. பொதுவினுஞ் சிறப்பினும் புணர்ந்துள வாகி
யிதுவழக் கிதுசெயு ளெனுமீ ரிடத்தும்
வெளிப்படை குறிப்பென விழுமிய நெறியாற்
கொளப்படு முவம வுருபினைக் கூறி
னன்ன போல வனைய மான

வென்ன நேர் விறப்ப நிகர்ப்ப
நாட நளிய நடுங்க நந்த
வோட வொன்ற வொடுங்க வொட்டக்
கள்ளக் கருதக் காட்டக் கடுப்ப
வெள்ள விழைய வெதிர வேய்ப்ப
மருள மலைய மாற மதிப்ப
வென்ற வந்த வேர வேய
வாங்க வொப்ப வமர வியையப்
புல்ல வுறழப் புரையப் பொருவ
வனை துணை கெழுவிழ் தழைசெத் தற்றணி
யென்றிவை நாற்பா னெட்டும் பிறவு
மொன்றிய திறத்தா லொழுகுத லுளவே.

(எ-ன்) இஃதுவமேயத்தினையு முவமானத்தினையு மொப்புமைப்படுத்துங்கா லிடையினு மீற்றினும்வரு முவம வுருபினை யினைத்தெனக் கூறுத னுதலிற்று.

(இ-ள்) கொள்ளப்படு முவமவுருபினைக் கூறின் என்பது இது வினைப்பாலுவமம் இது பயனிலையுவமம் இது மெய்ப்பா லுவமம் இஃதுருவினுவமம் என நால்வகைத்தாக மனத்தான் மதித்துக்கொள்ளப்படுதலையுடையவாய்ப் பொதுவானுஞ் சிறப் பானும் பொருந்துவதுளதாயிது வழக்கிட மிது செய்யுளிட வென விரண்டிடத்திறேடுங்கூடி வெளிப்படை குறிப்பென வருஞ் சொற்களுக்கு வரையறை கூறின் அவை, அன்ன போல வென்பன முதலாக அற்று அணி யென்பன வீறாக வெண்ணப் பட்ட நாற்பத்தெட்டும் பிறவுமாகிப் பொருந்துங் கூறுபாட்டா னொழுகலாறுடைத்தா மென்றவாறு.

பிறவுமென்பதனால் எடுத்தோதினவேயன்றி வெல்ல, வென்ற, வியப்ப, ஒத்த, ஒக்கும், தகைய, தகைப்ப, பொறப, காய்ந்த, நோக்க, மருளும், புரையும், துலை என்றற்றொடக்கத் தனவும், ஐந்தாம் வேற்றுமை யுருபாய்வரும் இன்னும், என,

என்னெனை வரும் எச்சவாய்பாடுகளாய் வருவனவும், பிறவுங் கொள்க. சொல்வினை யிரண்டு நாலு மயக்கம், இவற்றுட் பலவும் செயவெனச்சமாயவாய்பாட்டான் வந்தனவெனினும் போல வென்னுஞ் சொல் புலிபோல வந்தானென வினையெச்சவாய்பாட்டான் வினைகொண்டும், புலிபோலும் மறவனென் புழியும் பெயரெச்சவாய்பாட்டாற் பெயர்கொண்டும், புலி போன் மறவனென்புழி யிடைச் சொல்வாய்பாட்டாற் பொதுவாயும் நிற்கும்.

இவ் வோதியவாய்பாடெல்லா நான்குவமத்திற்கும் பொதுவென்ப நீண்டுக் கூறினார். இனிச் சிறப்புவகையா னுரிய வாம்வகை, ஒல்காப் புலமைத் தொல்காப்பியனாரும், உவமவியலுள் "அன்ன வாங்க மான விறப்ப, வென்ன வுறழத் தகைய நோக்கொடு, கண்ணிய வெட்டும் வினைப்பா லுவமம்," "அன்னவென் கிளவி பிறவொடுஞ் சிவணும்," "எள்ள விழைய புல்லப் பொருவக், கள்ள மதிப்ப வெல்ல வீழ, வென்றாங் கெட்டே பயனிலை யுவமம்," "கடுப்ப வேய்ப்ப மருளப் புரைய, வொட்ட வொடுங்க வோட நிகர்ப்பவென், றப்பா லெட்டே மெய்ப்பா லுவமம்," "போல மறுப்ப வொப்பக் காய்த்த, நேர வியப்ப நளிய நந்தவென், றொத்துவரு கிளவி யுருவி னுவமம்," "தத்த மரபிற் றோன்றுமன் பொருளே" என்ற சூத்திரங்களா னுணர்க.

இவற்றுள், அணியென்பது முதலாய சிலவுருபுக ளீறு விகாரப்பட்டு நிற்பனவு முள. அஃதேல் அணி, வந்த, துலை என்னு முருபுகள் முன்னோர் கூறிய வுவமவுருபுத் தொகைச் சூத்திரங்களு ளில்லையாலோ வெனின், அவை "முலையணிந்த முறுவலாள்" எனவும், 'கயல்வந்த கண்ணியர்' எனவும், "தோல்வி, துலையல்லார் கண்ணுங் கொளல்" எனவும் இலக்கியங்களுட் கண்டமையாற் காட்டியதெனக் கொள்க. ஒழிந்தன

வாய் மறைந்த வுவமவுருபுகட்கு மீண் டிலக்கியங் காட்டி விறப் பப் பெருகும். அவைகட்கும் வந்தவழிக் கண்டுகொள்க.

உ-வது உவமையலங்காரம் முற்றும்.

௩-வது உருவக வலங்காரம்

29. முக்கியப் பொருளையொப் புடைப்பொரு ளெனமதித்
இருபெய ரொட்டா யிசைப்பது முருவகம்.

(எ-ன்) வைத்தமுறையானே யுருவகமென்னு மலங்கார முணர்—ற்று.

(இ-ள்) உவமேயப்பொருளையு முவமப்பொருளாக வுட் கொண்டிரண்டு பொருளையு மிருபெயரொட்டாக வொற்றுமை கொளுத்தி யுரைப்ப துருவகமென்னும் அலங்காரமா மென்ற வாறு.

உம்மையா லிரண்டு பொருளையு மொற்றுமைகொளுத்தா துவமை யாத லுவமேயமாத லிரண்டிலொன் றுருவகச் சொல் லொடுதொக்கு மாட்டேறில்லாதுவரு முருவகமு முளவென்ற வாறு. மூன்றுதொக்கு வருவனவு முள. இவற்றிற்கெல்லாஞ் செய்யு ளுருவகவிரியுண் முன்னர்க் காட்டுதும்.

அஃதாக; உவமையும் பொருளுமென இதன் முதனூ லுடையார் கூறவும், இந்நூலுடையார் முக்கியப் பொருளை முதல்வைத்ததியாதோ வெனின், உவமைபோலாது முக்கியப் பொருளை முதல்வைத் தொப்புமைப் பொருளை யதன்பின்னர் வைத் தொற்றுமைகொளுத்துவதே யுருவகத்திற்கு மிக்கதோர் அறிகுறியென்பது தோன்ற வைத்தாரெனக் கொள்க.

30. பொருண்முத லினுமுவ மையதாம் புணர்வுழி
யொற்றிடை தோன்ற றிரிதலோ டொன்றிய
மற்றதற் குறுசொல் விரியா வயினே.

(எ-ன்) உவமைக்கு முருவகத்திற்கு மெய்தியதோ ரைய மறுத்துணர்—ற்று.

(இ-ள்) (முக்கியப் பொருண் முன்னு முவமப் பொருள் பின்னுமாக வருவ துருவகத்திற்கு மிக்க வறிகுறியென்றார்; அவ்வாறன்றிப்) பொருண் முதலேவரினு நிலைமொழியாகி யுயிரு மொற்று மீறாய்வரு முவமேயச் சொல்லும் வருமொழியா யவை முதலேவரு முவமச் சொல்லுந் தம்மிற் புணருமிடத் தவற்றி னிடையி லொற்றுத் தோன்ற றிரிதலின்றி யவற்றோடு மவ்வுரு வகத்திற்குரிய சொல்லும் விரியாவிடத் துவமையாம் பகுதியு முள வென்றவாறு.

உதாரணம்:—வாய்ப்பவளம், (வாயென்றபவளம், வாய்பவ ளமாக.) குழற்கொன்றை, கொங்கைக்குரும்பை யெனவு மிவை யுருவகம். வாய்பவளம், குழல் கொன்றை, கொங்கை குரும்பை யெனவு மிவை யுவமை. "வாய்பவளந், துடிக்கின்றவா" எனவும், "குவவின கொங்கை குரும்பை குழல்கொன்றை" எனவுங் கண்டுகொள்க. ஒன்றிய வென்றதனல் வதனசந்திரன், கரகமலம், கரபுண்டரீகம் எனவும் நிலைமொழியுவமேயவுயிீற் றின் முன்னர் உவமையாய வருமொழி முதல் வல்லெழுத்து முன்ன ரொற்றுமிகா துருவகமா மிடமுமுள. இது உவமவிரியி னுள், தலைதடுமாற்றவுவமையின்கண் பொருண் முதலேவந்து முவமையாயினவாறு கண்டுகொள்க.

31. அதுவே,

தொகையினும் விரியினுந் தொடரிரு வகைத்தே.

(எ-ன்) இதுவு மவ்வுருவக மின்னவகைப்படு மென்கின் றது.

(இ-ள்) அவ்வுருவகமென்னு மலங்காரந் தனக்குரிய சொற்றொக்கும் விரிந்தும் வருமொழியொடு தொடர்ந்துநிற்கு மிரண்டுகூறுபா டுடைத்தென்றவாறு.

உம்மை யிரண்டனுண் முதலது சிறப்பும்மையாதலால். அதற்குரிய சொற் றொக்குவருதலே சிறப்புடைத்தெனக் கொள்க. ஏனைய திழிவு சிறப்பும்மை.

32. அடையிடை புணரினுங் கடிநிலை யிலவே.

(எ-ன்) இதுவு மவ் வுருவகந் தொகையினும் விரியினும் புணர்வுழி யெய்துவதோர் வழுவமைப் புணர்—ற்று.

(இ-ள்) இரண்டுபொருளையுந் தம்மி லொற்றுமை கொளுத்தும் வழி யிடைப்பட வுவமைக்கண் ணடைச்சொற் புணர்த்துக்கூறினு முருவகமேயாம்; நீக்கப்படாதென்றவாறு.

உம்மையான் முதலே யடைபுணரினு நீக்கப்படாதாம்; எனவே தொகைநிலைவகையானும் அடைச்சொற்புணராமலும் புணர்ப்பதே சிறப்புடைத்தென்பதாம். இபற்றிற்குச் செய்யுள் வருமாறு:—

முருகவி ழளகக் காட்டை முன்னிடா வல்குற் றேரும்
பருமணி வடத்திற் சேர்த்த படாமுலைக் களிறு முந்திப்
புருவவிற் குனித்து நாட்டப் பொருகணை யுடக்கி மைந்தர்
செருவிழந் தோட மார்பிற் செஞ்சவே செலுத்து வாரே

என்பது தொகையுருவகம். இதனுள் படாமுலை, பொருகணை யென்பன அடை. துறை-நாடுவாழ்த்து. (குருகாமான்மியம்.)

கண்கழுநீ ராய்க்கரங்கள் காந்தளாய்த் தீங்கிளவி
கண்களாய்ச் செவ்வாய் பதுமமாய்—நண்பனே
வாய்ந்த மடவாற்கு மாறன் மணிவரைவா
யீர்ந்தண் பொழிலா மிடம்.

இது விரியுருவகம். பகுதி-பாங்கற்கூட்டம். துறை-இயல் பிடங்கூறல்.

33. ஒருதொடர் பினுளிரு மையுமுற லுளவே.

(எ-ன்) தொகைவிரியுருவக முணர்—ற்று.

(இ-ள்) தொக்கும் விரிந்தும் வருமிரண்டுதன்மையு மொரு செய்யுளகத்துவருதலுமுள வென்றவாறு.

பெண்ணா ரமுதளித்த பேரின்பத் தீஞ்சுவைபெற்
றுண்ணா நினைவேற் குறுதியெனக்—கண்ணா
லளித்தவரு ளோக்கா மயிர்தினைக்கண் டுள்ளந்
தளிர்த்ததையிங் கார்க்குரைப்பேன் றான்.

இது தொகைவிரியுருவகம். துறை-பாங்கியையறிதல்.

கதிர்முலைக் குவடுந்திண் டோட் சயிலமுங் கலவிமுந்நீ
ரெதிர்கொள் நிறீஇமத்தாக விவறலாந் தாம்புபூட்டி
முதிர்பொறிப் புலவர்மாண்பின் முறைமுறை கூழற்று மாற்றாற்
சதிர்பெறப் பிறந்தவின்பத் தனியமிர் தருந்துநீரார்.

திணை-பாடாண். துறை-நாடுவாழ்த்து. இதனுள்ளு முதலேயுமிடையிலு முவமேயத்திலு முவமையிலும் அடைச்சொற் புணர்ந்ததுங் காண்க. (குருகாமான்மியம்.)

34. உரைத்தவை யினிவரும் விரிக்குறு பொதுவே.

(எ-ன்) இதுவு மத் தொகைவிரிகளா லெய்து மிலக்கண முணர்—ற்று.

(இ-ள்) இங்ஙனமுரைத்த தொகையும் விரியுமேற்கூறப் படு முருவகவிரிக்கு மிக்க பொதுவிலக்கணமாமென்றவாறு.

35. இயைபியை பின்மை யேக தேச
மொருபொருள் பலபொரு ளுருவகஞ் சிறப்பே
விருத்தம விருத்த நட்பு வியனிலை
யேக வங்க மனேக வங்க

மவயவ மவயவி முற்றெனவாய்ந்த
நவையறு சிறப்பி னுறுன்கதன் விரியே.

(எ-ன்) உருவகமென்னு மலங்காரத்தின் விரியிலக்கண முணர்—ற்று.

(இ-ள்) இயைபுருவகமும், இயைபிலுருவகமும், ஏகதேச வுருவகமும், ஒரு பொருளுருவகமும், பலபொருளுருவகமும், உருவகவுருவகமும், சிறப்புருவகமும், விருத்தவுருவகமும், அவிருத்தவுருவகமும், நட்புருவகமும், வியனிலையுருவகமும் ஏகாங்கவுருவகமும், அநேகாங்கவுருவகமும், அவயவவுருவக மும். அவயவியுருவகமும், முற்றுருவகமும் என ஆராய்ந்த குற்றமற்ற சிறம்பினையுடைய வுருவகவிரி பதினறுமென்ற வாறு.

இவற்றிற்கெல்லாம் உருவகமென்னும் பெயரை யதிகாரத் தாற் கூட்டி யுரைத்தநேடும் எண்ணும்மைத் தொகையும் விரித்துரைக்கப்பட்டது. நட்பென்பது சமாதானம். இவை யெல்லாஞ் சொல்லின் முடியு மிலக்கணத்தன. அல்ல துரையி னுங் கொள்க.

அவற்றுள், இயைபுருவக மென்பது ஒரு தொடர்பினுட் பல பொருளை யுருவகஞ் செய்யுங்காற் றம்முட் காரணகாரிய மியைபுடைத்தாகவைத் துருவகஞ் செய்வது:—

நித்தர்முத் தரிற்புகழ் நிபுணன் பராங்குச
னுத்தம ஞானமென் றுளிர்திருப் பாற்கடல்
புரந்தசெந் தமிழ்மறை யாயபுத் தமிர்த
நிரந்தர முலகின்மெய்ந் நெறிநிலை தழைவான்
பூமக ளெனும்பெயர் புனைமலர் நிதியொடந்
தாமமா தவனெனுஞ் சங்கநீ ணிதியினை
யருளுடை மையின்வெளிப் படுத்தரு ளவுமவை
வருபவர் வருகென வாழ்வுபெற் றிருப்பவும்
வாழ்நா ளதன்கண் வழிபடு சரிதையின்

வீழ்நாள் படாமை வீட்டினை யெய்தா
தொல்லையிற் பிறந்திறந் துழல்வோர்
வல்வினை யதனில் வலியதொன் றிலையே.
இஃ திலையபுருவகம்.

(இ-ள்) அநந்த கெருட சேனாபதிகளோடும் பரமபதத்து முத்தரும் புகழ மிகவும் வல்லோனாகிய சிபராங்குசன் றிரு ஞானமென்னுளிரும் திருப்பாற்கடலளித்த திருவாய்மொழி யெனும் புத்தமிர்தம் எல்லா நாளு முலகின்கண் சிமந் நாராய ணனே பரப்பிரமமென்னு முண்மை மார்க்கநிலை தழைக்கும் படி மலர்மடந்தையெனப் பெயர்புனை பதுமநிதியுடன் கூடிய பரமபதத்தையுடைய மாதவனென்னுஞ் சங்கநிணிதியைத் தனது திருவுள்ளக் கருணையுண்டானதன்மையால் வெளியிடவு மவை யிருட லேகமாகி முத்தி வேண்டினவர் வருவார் வருக வென்று தம்மினீங்காது வாழ்ந்திருக்கவுந் தமக்குள்ள வாழ்நாள் வீழ்நாள்படாமை மனோவாக்குக் காயங்களால் அருச்சனைபுரியு மொழுக்கத்தினன் மோக்கத்தினைப் பொருந்தாது சிறுவரையிற் பிறந்து மிறந்து முழல்வோ ரும்மையி லிழைத்த தீவினைபோல வலியுடையதொன் றில்லை யென்றவாறு.

மலர்நிதி-பதுமநிதி; சங்கநிணிதி-பஞ்சசன்னிய த்தைத் தரித்த பெரியநிதி; திருவு-மாயோனும். இதனுள், திருப்பாற் கடன் முதலாக அடைவே காரணகாரியத்துடனியைந் துருவக மாயினவாறு காண்க. பா-நேரிசையாசிரியம். திணை-பாடாண் பொதுவியல். துறை-பனுவல்வாழ்த்து.

ஆர வடநீ ரருவியா மாணிக்கத்
தார்கெழுசீர்த் தேனருவி தா னாகப்—பேரழகு
பாரிக் குமாரன் பனிவரைமான் வார்புனைந்து
பூரிக்குங் கொங்கைப் பொருப்பு.

இஃ தியைபிலுருவகம். ஆரவடம் - முத்துவடம். மாணிக்கத்தார் - மாணிக்க மாலை. பகுதி - பாங்கற்கூட்டம். துறை - செவ்விசெப்பல்.

ஏகதேசவுருவக மென்பது ஒரு செய்யுளகத்து ஓரிடத்தொரு பொருளை யுருவகஞ்செய்யுங்கால் மாட்டேறுபெற வுருவகஞ் செய் தப்பொருளோடு சம்பந்தமுறப் பிறிதோர் பொருளைச் செய்யுளகத்துப் பிறிதோரிடத்து மாட்டேறுபெற வுருவகஞ் செய்யாது தொகைநிலைவாய்பாட்டாற் கூறுதல்;—

அறியாமை யென்னு மகவிருளைச் சிக்கப்
பிறியா தறிவிருக்கப் பெற்றுங்—குறியாத
தீச்சொற் பயில்வரே செண்பகமா றன்பவள
வாய்ச்சொற் றிறம்பயிலா மல்.

இஃதேகதேசவுருவகம். இதனுள் அறியாமையென்னு மகவிருளையென மாட்டேறுபெற வுருவகஞ்செய்ததனோடு மெதிராகச் சம்பந்தமுறஞானமாம்விளக்கென மாட்டேறுபெற வுருவகஞ்செய்யாது தொகைநிலைவாய்பாட்டா னறிவெனக் கூறிய வாறு காண்க.

செண்பகமாறன் பவளவாய்ச்சொல்-திருவாய்மொழி. திறம்-சித்தசித்தீச்சுரத்தைமயக்கம றவிளங்கக்கூறுங்கூறு பாடு. பயிலாமல்-இடைவிடா துணர்வினுற் சிந்தியாமல். இது, உவமேயமு முருவகவுருபுமாகிய இரண்டுதொக்க தொகையுருவகம். ஞானவிளக்காவது திருவாய்மொழி; பிறரறியாமை யென்னு மிருட்டறக் கூறிய ஞானமாகிய விளக்கு. பயில்வரே யென்பதுபரசமயவாதியரை. ஏகாரம்-இரக்கத்தின்கட்குறிப்பு. துறை-இதுவுமது.

புன்பனுவ னஞ்சம் பொசிக்கின்ற பேதையர்பே
ரின்பமுற மெய்யுணர்வா ரேனேருந்—தன்பால்

விருந்தருந்தத் தானருணு வீறனுர் கூறு
மருந்தருந்தா ரந்தோ மதித்து.

இதுவுமது. இதனுள் நாவீறனுர்கூறு மருந்தென்பது திருவாய்மொழியாகிய மருந்து. மருந்தென்பது-அமிர்தம். எனவே திருவாய்மொழியாகிய மருந்தென வுருவகஞ்செய்ததனேடுஞ் சம்பந்தமுறும்படி பிறவியாகிய பிணியைத்தீர்த்து முத்தியாகிய பேரின்பத்தைத் தருமருந்தென வுருவகஞ்செய்யா துவமேயமுதலியமூன்றினையு மிருவகைத் தொகைநிலைவாய்பாட்டாற் கூறிய வாறு காண்க.

மெய்யுணர்வார்-தத்துவத்திரயத்தி னுண்மையுணர்வார். தன்பால் விருந்தருந்த-அம் மூன்றினையும் மயக்கமறவுணர்த்தும் ஞானமான அமிர்தத்தைத் தமது மெய்யுணர்வா லுவட்டாது புதுவதுபுதுவதாக வுரிசிக்கவும் என்க. அருந்தாரந்தோ என்ப திரக்கம். மெய்ப்பொருண்மாறன்-உண்மைப்பொருளையுணர்ந்த மாறன்; உண்மைப்பொருளாகிய மாறனென்றுமாம்.

மிக்க வரிதாளின் மெய்யன் பினைவித்தித்
தக்க தவந்தினமுந் தான்பொழிந்துட்—புக்கதோர்
ஞான முருவியபின் னன்முத்தி யைவிளைக்கு
மானபரன் காரிதரு மன்.

இது, உவமையு முருவகவுருபு மாட்டேறில்லாது வந்த வுருவகம்; என்னை? அரிதாளாகிய செய்யின்கண் அன்பாகிய வித்தை விதைத்துத் தவமாகிய நீரைப்பொழிந்து ஞானமாகிய முளையுருவியபின் முத்தியாகிய போகத்தை யென மாட்டேறு பெறுதுவந்தமையானுணர்க. ஒழிந்த அகல முறையிற்கொள்க. இவை யிரண்டுதொகைது. இவற்றுண் முன்னையது பனுவல் வாழ்த்து. இது திணை-வாகையைச்சார்ந்த புறத்திணை. துறை-அறக்களவழி. இவை மூன்று மாட்டேறிலாதுவந்த வுருவகம். இவற்றிற்கு "அறவாழி யந்தணன் ருள்சேர்ந்தார்க் கல்லாற்,

பிறவாழி நீந்த லரிது" எனவும், "சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு, மேமப் புணையைச் சுடும்" எனவும், "பவளவாய்ச் செறுவுதன்னு ணித்திலம் பயிலவித்திக், குழவிநா றெழுந்து காளைக் கொழுங்கதி ரீன்" றெனவும், "அஞ்சவரு தானை யமரென்னு நீள்வயலுள், வெஞ்சினம் வித்திப் புகழ் விளைக்கும்" எனவும் முந்து நூல்களினும் அடைவே வந்தவாறு காண்க.

ஒருபொருளுருவக மென்பது உயர்திணை அஃறிணை யென்று சொல்லப்பட்ட காட்சிப்பொருளுங் கருத்துப்பொருளு மொருசெய்யு ளகத்துவந்தா லவற்று ளொருபொருளை யுருவகஞ்செய்தல்:—

பிறப்பா ரிறப்பார் பிறப்பாய வேலை
துறப்பா ரொருபோதுந் தூவார்— சிறப்பாகுஞ்
செய்படைத்த தென்னரங்கர் சேவடிமேன் மானிடராய்க்
கைபடைத்தும் வாழ்ந்த கதை.

இஃ தொருபொருளுருவகம். அரங்கன், மானிடர்கை, சேவடியென்னும் உயர்திணை யஃறிணைகளை யுருவகஞ்செய்யாது கருத்துப்பொருளாய பிறப்பென்னும் அஃறிணையை யுருவகஞ் செய்தலா னென்றறிக. திணை - பாடாண். துறை - வாயுறை வாழ்த்து.

பலபொருளுருவக மென்பது அவ்விருபொருளையு மொரு செய்யுளகத் துருவகஞ்செய்தல்:—

தீதற்ற மெய்ஞ்ஞானத் தெப்பமுடன் மேதகுநால்
வேதக் கடல்கடந்த வித்தகத்தாற்—கோதற்ற
வந்தாமத் தீவினுட்புக் காழியா னுமணியைத்
தந்தானம் பூதூர்வந் தான்.

இது பலபொருளுருவகம். அந்தாமத்திவு-விரசைக்கரையாகிய பரமபதம். திணை-பாடாண். துறை-அறுமுறை வாழ்த்தினுண் முனிவனை வாழ்த்தல்.

உருவகவுருவக மென்பது ஒன்றனை முதலே யுருவகஞ் செய்ததனைப் பெயர்த்து முருவகஞ் செய்தல்:—

மத்தம் புரியவிச்சை வாராழி யாமிருளென்
சித்தமினித் தேறுமே தேமகிழ்த்தார்—முத்தன்
முகத்தா மரையா முழுமதியென் செவ்வி
யகத்தா மரையகத் தாக.

இஃ துருவகவுருவகம். இதனுள், மத்தம்-மயக்கம். புரிதல்-தருதல். அவிச்சை-அறியாமை. அவிச்சையாம் வாராழியென வுருவகஞ் செய்ததனை மறித்து மிருளென வுருவகஞ் செய்ததும் முகத் தாமரையா முழுமதி யெனவும் உருவகவுருவகம் வந்தவாறுங் காண்க. துறை-இதுவுமது.

சிறப்புருவக மென்பது ஒருபொருளை யெடுத்ததற்குச் சிறந்த அடைகளை யுருபித் தவற்றானே யதனை யுருபித்துரைப்பது:—

நாரங் குழலாய் நளினமுக மாய்முகுளங்
கூர்வெம் முலையாய்க் கொடியிடையா—யூர்திரைகள்
வெண்டுகில தாகி விளங்குமகிழ் மாறன்
வண்குருகூர்த் தண்பொருநை மாது.

இது சிறப்புருவகம். நாரம்-பாசி. வெம்முலை-விருப்பத்தைத்தரும் முலை. பொருநைமாது-பொருநையாகியபெண். துறை-நதிவாழ்த்து.

விருத்தவுருவக மென்பது ஒருபொருட்குக் கூடாதன பலவுங்கூட்டி யுருவகஞ் செய்வது:—

வேம்பா லிசைந்தசுவை வெவ்விடத்தி னோடுதித்த
தாம்பால தன்றறலின் பாலன்று—பாம்பா
லிமிழ்திரைவா யிற்பிறந்த தென்பதன்று மாறன்
றமிழ்மறையாஞ் செஞ்சொ லமிர்தம்.

இது விருத்தவுருவகம். வேம்பு-கைப்பு. கைப்பைத் தனக்குச் சுவையாகவுடைய நஞ்சினோடும் பிறந்ததாம் பகுதியையுடையதன்று; அறலின்பாலன்று-சலத்தினதுமயமாம் பகுதியையுடையதூஉமன்று; பாம்பா.......... தன்று-பாம்பாகிய தாம்பா லாரவாரிக்குந் திரையையுடைய கடலைக் கடையப் பிறந்ததென்று கூறுவதூஉமன்று; காரிமாறப்பிரான் திருப்பவளத்திற் பிறந்த திருவாய்மொழியாகிய வினிய சொல்லின் மயமா மமிர்தமென்றவாறு.

அமிர்திற்கு விடத்தினோடுதிப்பது முதலாயதுஞ் சலமயமாவதுஞ் சுபாவம். இந்த அமிர்தத்திற் சுவையின்மையால் விருத்தவுருவகமாயிற்று. துறை-பனுவல்வாழ்த்து.

அவிருத்தவுருவக மென்பது ஒருபொருட்குக் கூடுவனவாந் தன்மை பலவுங் கூட்டி யுருவகஞ் செய்வது:—

ஓர்பொழுதுந் துஞ்சா தலமந் துறுதுளித்தாம்
போர்புனைவே லண்ணல்பொருட் கேகிற்—சீர்பெருகுந்
தண்ணார் பசுந்துளபத் தார்மார்பன் றஞ்சைமான்
கண்ணா கியகார்க் கடல்.

இது, அவிருத்தவுருவகம். அண்ணல்-அண்மைவிளி. ஒழிந்த அகல முறையிற்கொள்க. பகுதி-பொருள்வயிற்பிரிதல். துறை-செலவழுங்குவித்தல்.

நட்புருவக மென்பது ஒருபொருளை நன்றாக வுருவகஞ் செய்து அதனைத் தீங்குதருவதாகக் கூறி யத்தீங்கு அதனாலுந் ததன்றென்றதற்குப் பிறிதோர் காரணங் கூறுதல்:—

தீங்கிளவி யென்றுயிர்க்குந் தெள்ளமிர்தம் வெவ்விடத்துப்
பாங்கிழமை கூர்த லணிமாற—னுங்கைப்
பதித்திருவே தீவினையின் பாங்காய தென்றே
மதித்திருக்கு மின்றென் மனம்.

இது நட்புருவகம்.

(இ-ள்) இனிய கிளவியென வொலிக்கு மொள்ளிய வமிர்தமானது வெம்மையைச் செய்யும் விடத்தின்கயப்பா முரிமையை விளைத்தல் நின்னிடத்துண்டாய பாங்கினுலுண்டாயதல்லவென்று மெனது தீவினையின் பாங்காயதென்றுஞ் சந்தயமற விசாரியாநின்ற திப்பொழு தென்மன மென்றவாறு.

உயிர்த்தல்-ஒலித்தல். கூர்தல்-விளைதல். பாங்கு-வாரம், பகுதி-பரத்தையிற்பிரிதல். துறை-பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகன் வாயில் வேண்டப் புறத்தொழுக்க முண்டென்று வாயின் மறுத்துக் கடுஞ்சொற்கூறிய விற்பரத்தையுடன் புறத்தொழுக்க மின்றென்றுகூறித் தனதாற்றமையே வாயிலாகக் கூடியது.

வியனிலையுருவக மென்பது ஒன்றினங்கம் பலவற்றையு மொரு செய்யுளகத்துக்கூறி யவற்றுட் சிலவுருவகஞ் செய்து சிலவற்றை யுருவகஞ் செய்யாது அவயவியை யுருவகஞ் செய்வது:-

வையம் பரவு மகிழ்மாறன் செவ்வாயுந்
துய்ய நயனத் துணைப்போதுஞ்—செய்ய
முகத்தா மரையுடன்கைம் முத்திரையுங் கண்ட
சுகத்தார்க்கு முண்டோ துயர்.

இது வியனிலையுருவகம். இதனுள் அவயவி முகத்தாமரை. இதன்கண் ணவயவியுடன் அவயவங்களை யுருவகஞ்செய்து மற்றையொன்றை யுருவகஞ்செய்யாமையுங் காண்க. துறை-கடவுள்வாழ்த்து. பழிச்சினர்ப் பரவலுமாம்.

ஏகாங்கவுருவக மென்பது ஒன்றினங்கம் பலவற்றினு ளொன்றை யுருவகஞ்செய்வது:—

மாறன் பனிவரைமேல் வாண்முகச்செவ் வாயிவட்கு
வேறன் றிவளெனவே மெய்யுணர்விற்—கூறுன்றக்
காட்டுகின்ற தொண்பொற் கனங்குழைமேற் பல்காலு
மோட்டுகின்ற கட்காவி யுற்று.

இது, ஏகாங்கவுருவகம். ஒருபொருளாவ திதனுண் முக மாகிய அவயவி. இதன்பொரு ளுரையிற் கொள்க. துறை-பாங்கியை யறிதல்.

அநேகாங்கவுருவக மென்பது ஒன்றினங்கம்பலவற்றையு முருவகஞ்செய்வது—

செங்கைத் தளிர்நயனச் செவ்வேன் மறைப்பவர
மங்கைத் திருமால் வரைமடவாய்—கொங்கைக்
களியானைக் கட்படா நீக்கியோ கண்ணுற்
றெளியானைக் காக்கு மியல்பு.
இது, அநேகாங்கவுருவகம்.

(இ-ள்) திருமால் சீவரமங்கைவரையில் வாழும் மடப் பத்தையடையாய்! பெறுதற்கரிய நின்றோடும் பேரின்பத்தை யனுபவித்துப் பின்ன ரதுபெறாது வருத்தமிக்கு நின்கண் ணெளியனுவேனைக் கருணை புரிந்து காக்குமியல்பு, செங்கை யாகிய தளிரா னயனமாகிய சிவந்த வேலை மறைத்துக் கொங் கையாகிய களியானையினது முகபடாத்தினை நீக்கிக் கொல்லும் படியே யவற்றை வெளியில் வைத்ததோ? இஃ தருளுக்குத் தகாதென்றவாறு.

பகுதி-பாங்கற்கூட்டம். துறை-நாணிக்கண்புதைக்க வருந் தல். எளியானை யென்றது தன்னைப் பிறன்போலக்கூறல்.

கொங்கைக் குவடுங் குழற்காரு மேலிருந்த
சங்கைக் கருண்மாயன் றஞ்சைவாய்—மங்கைக்குப்
பொய்யே யுளதென்கை போற்று திலதென்கை
மெய்யே யிடையாம் வெளி.

இதுவுமது. சங்கை-வளம். ஏகார மிரண்டும் எதிர்மறை. இடையாம்வெளி யுளதென்கை பொய்யே யிலதென்கைமெய்யே யெனத் தேற்றேகாரமாக்கிக் கூட்டினுமாம். பகுதி-இடந்தலைப் பாடு. துறை மருங்கணைதல்.

அவயவவுருவக மென்பது அவயவமே யுருவகஞ்செய் தவயவியை வாளாது கூறுவது:—

நிறத்தாரை வேலிமையா நீடுறையை நீக்கிப்
புறத்தா யிடரிழைக்கும் போர்மே—லறத்தான்
வருந்தா விரங்குவதென் மாலரங்கத் தின்பம்
பொருந்தா னனத்தாய் புகல்.

இது, அவயவவுருவகம்.

(இ-ள்) திருமா லரங்கத்தினிடத் தமுகுகுடிகொண்ட முகத்தினை யுடையாய்! நினது செவ்வரிபரந்த கண்ணாகியவே லிமையாகிய வுறையை நீக்கி வெளிப்பட்டுத் துன்பத்தைச் செய் யும் பூசன்மேலும் யான் மிகவும் வருந்தும்படி கலுழ்வதற்குக் காரணம் யாதெனக் கூறுவாயாகவென்றவாறு.

தாரை-கண். உறை-கவிசனை. அற-மிக. வருந்தா-வருந்த. இரங்குதல்-அழுதல். இன்பம்-ஆகுபெயர். பகுதி-பொருட்குப் பிரிதல். துறை கருத்தறிந்தழுத கண்ணீர் துடைத்தல்; என்னை? பொருள்வயிற்பிரிந்த தலைவன் உள்ளக் குறிப்பினைக் கரந்து பன்னாளும் புதுவதுவாக வுறுப்பினைப் பாராட்டியதா லிஃதொன்றுடைத்தென அவனது பிரிவையுட்கொண்டழுத கண்ணீராதலின்.

அவயவியுருவக மென்பது அவயவியை யுருவகஞ் செய்து அவயவத்தை வாளாதே கூறுவது: —

முதிரா முலையு முறுவற் குறிவந்
தெதிர்பாயுங் கண்களுங் கண்டெய்தி—வதனமதிப்
பொற்றொடியை மாறன் பொருப்பிடைவைத் திங்கெதிர்ந்த
வற்புதனே திண்ணியனு வான்.

இஃ தவயவியுருவகம். துறை-பாங்கன் றலைவனைவியத்தல். இதனுள் வதனமதியென்றது அவயவியுருவகம்.

பெண்ணமுதே யங்கையாற் பேரைமால் தண்சிலம்பிற்
றண்ணறும்பூ வேங்கை தலைநாட்செய்—கண்ணி
தனைக்கொய் தனமேற் றமரிற் செறிப்பான்
றினைக்கொய் திறம்விளையா தே.

இது மகா அவயவியுருவகம். இதனுள், பெண்ணமுதே யென்றது மகா அவயவியுருவகம். தண்ணறும்பூ.................. கண்ணி குளிர்ந்த நறுவிதாம் பூவாமுன்பே வேங்கை வைத்த அரும்பு. பகுதி-பகற்குறி. துறை-வேங்கையொடு வெறுத்து வரைவுகடாதல்.

முற்றுருவக மென்பது அவயவ அவயவிகளை யேற்றவிடத் தோடும் பிறவிடத்திேடு முற்ற வுருவகஞ் செய்வது:—

வட்ட வதன மதியு நுதற்பிறையும்
பெட்ட நகைநிலவும் பேர்த்தறியாக்—கட்டளகக்
கங்குலின்மேன் மாறன் கனவரைவண் டீரிருந்தா
லிங்கிவளுக் குண்டோ விடை.

இது முற்றுருவகம். பெட்ட - விரும்பப்பட்ட. பேர்த் தறியா - நீக்கியறியாத, கட்டளகக்கங்குல் - ஐம்பாலாகக் கோலஞ்செய்த குழலாகிய விருட்பிழம்பு, ஒழிந்த அகல முறை

யிற்கொள்க. பகுதி - இடந்தலை, துறை - வண்டகற்றி மருங் கணைதல்.

மண்படர்தாட் டாமரையு மைபடர்கட் காவியையுங்
கொண்டுமூலைக் கோங்கரும்புங் கொண்டதோர்
—பெண்கொடியைக்
கண்டனையே னண்பா கழறலைமா றன்சிலம்பில்
வண்டமர்தண் பூஞ்சோலை வாய்.

இதுவுமது. பகுதி - பாங்கற்கூட்டம் துறை - கழற்றெதிர் மறுத்தல். இதன் பொருளுரையிற்கொள்க.

ஆக இயைபுருவக முதலாக முற்றுருவக மீறாகப் பதினாறு மடைவே கண்டுகொள்க.

36 உரைபெறு சிலேடை வேற்றுமை யுடனேது
வபநுதி யுவமையென் றவற்றொடும் விரவும்.

(எ-ன்) அவ்வுருவகம் என்னும் அலங்காரம் பிறவாய அலங்காரங்களோடும் விரவிவருமென்ப துணர்—ற்று.

(இ-ள்) சிலேடைமுதலாக வுவமையீறாகக் கூறப்பட்ட வைந்தலங்காரங்களோடும் விரவியும் வருமென்றவாறு.

உரைபெறுசிலேடையென்றதனால் வினைமுதலிய நான்கு காரணத்தானுவமை பிறப்பதேயன்றி யிரட்டுறமொழியுஞ் சொற்பொருள் காரணமாகவு முவமை பிறக்கும் என்பதும், சிலேடை இக்கூறிய வுருவகத்திற்கும் காரணம், இனிமேல் வரும் அலங்காரங்கட்கு முபகாரங்களாம் என்பதுந் தோன்ற நின்றதுங் காண்க. இச்சூத்திரஞ் சிங்க நோக்காம்.

அவற்றுட் சிலேடையுருவக மென்பது ஒரு பொருளை யொரு செய்யுளகத் திருபொருள்பயப்பதாகப் பலவிடத்தினும் புணர்த் திறுதியினு மிருபொருள்பயப்பதாக வுருவகஞ்செய் வது:—

விற்புடைக்கீழ் மன்னி மிகுநா ணிடைதழீஇச்
சுற்றுடைமாண் கோதைத் தொடைசெறியும்—பொற்புடைத்தாம்
பாணிமையா வண்டுலவும் மைந்துளவ மாலுறையூர்
மாணிழையார் சேயரிக்கண் வண்டு.

இது செம்மொழிச்சிலேடையுருவகம். கண்ணிற்கும் அம்பிற்குஞ்சிலேடை.

(இ-ள்) (கண்ணின்மேற் சொல்லுங்கால்) வில்-புருவம். இஃ துவமப்பேர். புருவத்தின்பரப்பின்கீழ்த் தங்கிப் பெருத்த நாணிடத்துக் கூடிச் சுற்றுதலுடைய மாட்சிமைக் குழலின் மேல் மாலையை மேனோக்கத்தாற் பொருந்துங் கண்ணாகிய வண்டெனவும் (அம்பின்மேற் சொல்லுங்கால்) தனுவி னகன்றவிடத்துக்கூடி மிகுந்த நாணுக்குநடுவே யெய்தி விரலிற் கட்டுதலுடைய விரற்சரடுறத் தனுவிற்குவல்லார் தொடுத்தெய்வதை யெய்தும் அம்பு எனவுங் கொள்க. பகுதி-சேட்படை. துறை-கண்ணயப்புரைத்தல்.

பூங்குமிழ்மீ தேறிப் புணர்க்குமத னன்கலைதோய்ந்
தோங்குவனத் தாமரையி னுட்பயிலுந்—தேங்குபுனல்
வெள்ளக் குளத்துமறைமால் வெற்பினில்வாழ் மெல்லியலார்
வள்ளைக் குழையார்கண் மான்.

இது பிரிமொழிச்சிலேடையோடுங்கூடியவுருவகம். கண்ணிற்கும் மானிற்குஞ் சிலேடை.

(இ-ள்) (கண்ணின்மேற் சொல்லுங்கால்) பொலிவையுடைய மூக்கின்மீதேறிக் காமன் புணர்க்கு நல்லகலையைக் கற்றுப் பெருத்தெழுந்த தண்ணீரகத்துத் தாமரைபோன்ற முகத்தினுட்டங்கு மிகுந்த புனலையுடைய திருவெள்ளக்குளத்துறையுந் திருமால்வெற்பில்வாழு மெல்லியலாராகிய வள்ளைக் குழையினையுடையார்கண்ணாகிய மான் எனவும், (மானின்

மேற் சொல்லுங்கால்) பூவினோடுங் கூடிய குமிழாகிய மரத்தினைப் பாய்ந்து காமத்தைத் தன்னிடத்தே விளைக்கும் நல்ல கலையைப் புணர்ந்து, ஓங்கிவளருங் காட்டின் கண்ணுளவாம் மரைகண்டு பழகுமெல்லிய வியல்பு மிகுந்த வள்ளைக்கொடியினது குழையைப்பருகுங் குறிப்பினையுடைய மானெனவுங் கொள்க. இதனுள், கண்மானென்ப துருவகம். புணர்மதன் என்பதனை மதன் புணர்எனப்பாடமாற்றுக. துறை-இதுவுமது.

மன்பார் குளிர்விக்கு மாறன் குடைமதியு
நன்பான் மதியுமதி நாடுங்கால்—முன்பாங்
குடைமதிக்குண் டாவதல்ல குன்றுதன்மை வானத்
தடைமதிக்குண் டாங்குன் றுதல்.

இது குணவேற்றுமையுருவகம். வடநூலார் வெதிரேகவுருவக மென்பது மிது. குன்றுதல்-தேய்தல். மை-களங்கம். குடைமதி யென்ப துருவகம். திணை-பாடாண். துறை-குடைமங்கலம்.

பேரழகார் காரிதரும் பிள்ளைமா ணிக்கநெறி
சீரியமா ணிக்கமுறுஞ் செய்கைத்தோ—வாரியர்கா
ளூற்றுளதேற் றத்துவங்க ளெல்லா முணர்ந்துணர்த்தக்
கற்றுளதாய்க் காணேன் களித்து.

இதுவுமது. இதனை விலக்குருவக மென்றுங் கூறப்படும். துறை-அறுமுறைவாழ்த்தி னடங்கும்.

வேகத்தால் வாயுவதாம் வெண்ணீர்மை மேதகுகே
மாகத்தாற் றாரசயி லாதியா—மோகநிலை
காய்ந்தவுணர் வாற்சுகனுங் காசின்ற யிந்திரனா
லாய்ந்துணர்ந்த வானரசிங் கம்.

இது, ஏதுவுருவகம். வெண்ணீர்மைமேதகுகேமாகம்-வாலிதாந்தன்மை பெருமையோடு பொருந்துந் திருமேனி. தாரசயிலாதி-வெள்ளியாங் கயிலை. மோகநிலை-காமத்தினிலைமை.

சுகன்-சுகப்பிரமவிருடி. ஆசின்று-குற்றமின்றி, அயிந்திர நூல்-ஐந்திரவியாகரணம். வானர சிங்கம்-சிறிபதிருவடி, திணை-வாகை. துறை-சால்புமுல்லை.

முத்திரைக்கை யன்று முளரிமல ரீதிதுபூந்
தொத்தணிமார் பன்று சுவணகிரி—பத்தி
திகழா னனமன் றிதுதிங்கள் வாச
மகிழ்மாற னன்றிவனு மால்.

இது, அபநுதியுருவகம். பத்தி-பரமபத்தி; அஃதாவது அன்பு. சுவணகிரி-பொன்மலை. இதனுள் மகிழ்மாறனன்றிவனு மால் என்பது உருவகம். திணையுந் துறையு மிதுவுமது.

விடமனைய கட்காவி மெல்லியலாள் சோர்ந்தாள்
குடவரைபுக் கான்வெயிலோன் கொல்வா—ரடல்வேடர்
வேலவனே கங்குல் விருந்தருந்தி வைகறைவாய்
மாறனுறையூர்க் கெய்தன் மதி.

இஃ துவமையுருவகம். பகுதி-உடன்போக்கு. துறை-நெறிவிலக்கல்; விருந்துவிலக்கென்பதுமிது. இதனுள், 'விடமனையகட்காவி' என்ப துவமையுருவகம். "மையோர்குவளைக் கண்வண்டினம்வாழும்" என்பது மிது.

பொற்பிற் குரிய திருமால்கரி சொன்னபோழ் தினிலச்
சொற்பிற் படச்சென் றுதவியமா யன்றுவரை யின்வாய்
வெற்பிற் புடைக்குந் தனவேழ மான விலங்கறுத்தாற்
கற்பிற் குரியவிப் புல்லோ தடுத்திடை காப்பதுவே.

இதுவு முவமவுருவகம். இதனுள் வெற்பிற்புடைக்குந் தனவேழமென இடையி லடையடுத்துவந்தவாறுங் காண்க. பகுதி-மணஞ்சிறப்புரைத்தல். துறை-அக்கினி சாட்சியாகத் தலைவன் றலைவியைக் கைப்பற்றித் தீவலம்செய்து, வசிட்டனையு மருந்ததியையு மிருவருங்கண்டு மணவறைக்கட் பள்ளியிடத் தாராயகாலைத் தலைவ னருமறைச் சடங்கிற்குப்படுத்த தருப்

யையை நோக்கித் தலைவி காதலையுந் தனதாற்றாமையையு முட்கொண்டுரைத்தல்.

37 ஒழிவற வுருவக முடனே யுவமையு
மொழிவதற் கடங்கா முறைமைய வாகலின்
மொழியப் புகும்யான் மூதுணர் விலனு
லிவற்றினுக் கிதனு ளிசைத்தவை யொரீஇவரு
மவற்றையு மிவற்றி னகப்பட வுரைகொளீஇ
முற்ற வுணர்த்திய முறைமைய வாக்குதல்
கற்றோ ரறிவின் காட்சிய தாகும்.

(எ-ன்) மேற்சொல்லிய வுருவகமு முவமையு மென்னு மிரண்டிற்கும் புறனடையுணர்—ற்று.

(இ-ள்) உருவகமு வதற்குக் காரணமாகிய வுவமையு மென்னு மிரண்டலங்காரமு முற்றக்கூறுவதற் கடங்கா முறைமையையுடைய வாகலானும் அவற்றைக் கூறுவதற்காக முந்து நாலுணர்ந்தோரவையின்கண் புகுதாநின்ற யான் முதிய வுணர்விலனுதலானும் இக்கூறிய விரண்டலங்காரத்திற்கு மிந் நூலுள் யானிசைத்த தொகைவிரிகளைக் கடந்து வருவனவா முருவக வுவமங்களையுங் கூறியவிவற்று ளகப்படுவதாக வுரைகொளுத்தி முழுதுமுணர்த்திய முறைமையவாக்குதல் அலங்கார முதலிய விலக்கணங்களோடு மிலக்கியங்களையு முற்றக் கற்றோ ரறிவினுக்கழகென்றவாறு.

உவமையின்வழி பிறந்த துருவகமாதலி னுவமைக் குரைக்கத் தகுவனவெல்லா முருவகத்திற்கு முரைத்துக்கொள்க. ஈண்டுருவக முற்கூறிய தனு லதிகார மிடையறுதெனக்கொள்க.

கூறியவற்றை யொரீஇயினபோல் வருமவற்றுட் சில வருமாறு:—

காமரதத் தோகை களிவண் டினமுலவுந்
தாமரைசா ராம்பற் றளிநறவுண் —டேமுறுபே

ரின்பத் தினும்பெரிதே யெவ்வுண்மா லைப்பணிந்து
துன்பற் றவர்சேர் சுகம்.

இது, பேதத்தை யபேதமாக்கின வாய்பாட்டால்வந்த வுருவகம். இது முதலே உவமேயமு முவமவுருபுந்தொக்க தொகை யுருவகம். என்னை? கண்ணுகிய வண்டினம் முகமாகிய தாமரை வாயாகிய வாம்பல் பானமாகிய நறவு என்பன முறையே தொக்கதா லென் றறிக. ஆனுல் அவற்றினை யவ்வாறுக்கிய தென்னை? வண்டினம்போன்ற கண்களுலவுந் தாமரைபோன்ற முகத்தி லென்பனவோடு மேனையவுந் தொக்கதாக விரித்துத் தொகையுவமமாக்கப்பெருவோவெனின், ஆகாது; என்னை? முற்றுவமவாய்பாடாக வுவமமொன்றனையுங் கூறும்வாய்பாடு உவமை யுருவக மென்னுமிரண்டற்கும் பொதுவாய்பாடேனு மீண்டு மருட்கை யென்னு மெய்ப்பாட்டுவயத்தனுகிப் புணர்ச் சியை மகிழ்ந்து பேதத்தை யபேதமாக்கி விதந்துரைத்தானு தலிற் ருெகையுருவகமாக வுரைகோடலேயாம். காட்சிக்குத் "திருவளர்தாமரை" யென்னு முதற்பாட்டு மருட்கை வயத்த னுகிக் கூறிய இவ்வாய்பாடென் றுணர்க. அற்றேல், இதன கத்துப் பேதத்தை அபேதமாக்கிய தியாதோவெனின், தாமரை வேறு முகம் வேருயிருக்கவு முகத்தைத் தாமரையென்றே பேத மறக் கூறியவாற்ருனு மேனையுவமேயத்தினையு மவ்வாறே கூறியவாற்ருனு முணர்க. பகுதி-இயற்கை. துறை புணர்ச்சி மகிழ்தல்.

மேலிருந்த விண்ணேர் வியத்தக்க செம்மையதாய்ப்
பாலிகையுட் டெள்ளமுதம் பாலிக்குஞ்—சால்புடைய
திங்களைக்கண் டான்மாறன் செம்பொற் றுடரியுள்யார்
தங்களுளங் கோடா தவர்.

இது, அபேதத்தைப் பேதமாக்கிய சிலேடைவாய்பாட் டான்வந்த அற்புதவுவமை. இதனுள் அபேதத்தைப்பேதமாக்கு தல் சந்திர ஞெருவனன்றிப் பிறஞெரு சந்திரனின்ருகவுஞ்

செம்மையுடையதாய்ப் பாலிகையுட் டெளிந்த அமிர்தத்தை விளம்புந் திங்களெனப் பேதித்துக் கூறினமையா னறிக. பாலிகை-வள்ளமும் அதரமும் ஆதலாற்சிலேடை. பகுதி-இதுவு மது. துறை-தலைவனைவியத்தல். இதுவுந்தொகைநிலையு ளடங்கும்.

காவிற் பிறவாக் கனகக் கொடிகமல
வாவிக் கடங்கா மடவன்னம்—பூவிற்
பிறவா நறுந்தேறல் பேர்நகர்மால் வெற்பி
லுறவாய் நிறையுண் ணுரு.

இது, சம்பந்தமுள்ளதைச் சம்பந்தமில்லையாக்கி வந்த வுருவகம். அன்றியும், காவிலும் வாவியிலும் என்றமையால் விரோதவலங்காரமுமிதனுள் விளைப்பாருமுளர். ''மலையிடைப் பிறவா மணியே யென்கோ, வலையிடைப் பிறவா வமுதே என்கோ'' என்பனவற்றையும் விரோதவலங்கார மாக்குமாறு போல என்றறிக. பகுதி-இதுவுமது. துறை-இயல்பிடங் கூறல்.

கோதிலாப் பொன்னைக் குழைத்துமதன் றாரியக்கோல்
காதலாற் கைப்பற்றிக் காட்கரைமால்—போதங்
குழைந்தருள்பொற் கொம்பிற் குறித்ததென்கோ வின்பந்
தழைந்தருளிக் கொம்பினையே தான்.

இது சம்பந்தமில்லாததனைச் சம்பந்தமாக்கிக் கூறிய மோகவுவமை விகாரவுவமை அதிசயவுவமை எனினு மாம். பகுதி-இயற்கை. துறை-நலம்புனைந்துரைத்தல்.

மாயன் குருகா புரியனைய மாதரா
ளாயந் தொழவா மருமையுறிற்—றாய
கனவென்கோ கூடிக் குழைந்ததனைக் காமர்
நனவென்கோ யாதென்கோ நான்.

இதனுள், குருகாபுரியனையாளென்பது குருகாபுரி செயற்கையானன்றி யியற்கையானு முதலே யழகுடையதுபோன்

றிவளுடைமியற்கையான் அழகுடையளென்பது தோன்ற நின்ற மையாலிதுவு முவமையுளோர் பேதம். பகுதி-இதுவுமது. துறை ஆயவெள்ளம் வழிபடக்கண்டிது மாயமோவென்றல். "பாயும்விடையரன்றில்லையன்னாள்" என்பது மிது. ",வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க, சொல்லே ருழவர் பகை" எனவும் "நல்லார்கட் பட்ட வறுமையி,னின்னாதே,கல்லார்கட் பட்ட திரு" எனவும், இவைபோல்வன பிறவு மிவற்றின்பாற் கூட்டியுணர்க.

திருந்திழையாய் மாறன் றிருவாய் மொழியே
மருந்துபிற விப்பிணிக்கு மாதர்—தரும்பிணிக்கு
வாய்ந்தமருந் தென்பார் மடல்.

இது, மாதர்தருங் காமமாகிய பிணிக்கென்பது மாதர்தரும் பிணிக்கென மாட்டேறிலாதுவந்த வுருவகம். பகுதி-மடல், துறை உலகின் மேல்வைத்துரைத்தல். பா-இரண்டுவிகற்பத் தால்வந்த நேரிசைச் சிந்தியல் வெண்பா.

வழிமதுத் தார்மாறன் மணிவரைமேன் மாதர்
விழியெழுதி னுமிணை வெற்பெழுதி னும்
மொழியெழுத லாமோ மொழி.

இது, மாட்டேறில்லாதுவந்த ஏகாங்கவுருவகம்; என்னை? முலையென்பவற்றை யுவமைவாய்பாடு தோன்றக் கூறினமையா னுபயமுலையாகிய விணைவெற்பெனக் கோடல்வேண்டுமென் றுணர்க. பகுதி-இதுவுமது. துறை-எழுதவரிதென்றல், பா-ஒரு விகற்பத்தால்வந்த இன்னிசைச் சிந்தியல்வெண்பா.

நாணு நிறையு நறுநுதாஅன் மாணிழையார்
தந்தவெங் காமத் தழல்கதுவ வெந்து
தருமடன்மா வேற்றற் றரும்.

இஃது ஏகதேசவுருவகம். இதனுள், நாணும் நிறையு மாகிய பஞ்செனவுருவகஞ்செய்யாது காமத்தழலென வொன் றையே யுருவகஞ்செய்தமையா னென்றறிக. பகுதி-இதுவுமது. துறை நாணழிவுரைத்தல், பா-அடிதொறூஉ மோரூஉத் தொடைபெற்றுவந்த இன்னிசைச்சிந்தியல் வெண்பா.

தருமன் றண்ணளி யாற்றன தீகையால்
வருணன் கூற்றுயிர் மாற்றலின் வாமனே
யருமை யாலழ கிற்கணை யைந்துடைத்
திரும கன்றிரு மானில மன்னனே.

என்பதும் ஒருவகையுருவகம்; என்னை? தண்ணளியால் மன்ன னாகிய தருமன், தனதீகையால் மன்னனாகிய வருணன், உயிர் மாற்றலால் மன்னனாகிய கூற்று, அருமையால் மன்னனாகிய வாமன், அழகால் மன்னனாகிய காமன் என வுருவகஞ் செய்துணர்க.

மன்னர் மடங்கன் மறையவர் சொன்மாலை
யன்ன நடையினார்க் காரமிர்தந்— துன்னும்
பரிசிலர்க்கு வானம் பனிமலர்ப் பைந்தா
ரெரிசினவேற் றூனையெங் கோ.

என்பதும் கூறிய ஒருவகை யுருவகம்

வருந்தி யின்றூண் மறந்தொழிந்தாள் வளர்த்தாள் சொற்கேட்டில் கடிந்தாண்
முருந்தின் காறுங் கூழையை முனிவார் நின்னையென் முனிவார்
பொருந்திற் றன்றூ லிதுவென்னாய் பொன்றுமளித் திவ்வுயிரென்னாய்
இருந்து சோலைக் கருங்குயிலே சிலம்ப விருந்து கூவுதியால்.

என்றற் றொடக்கத்தன வுருவக இலக்கணம் விளங்கநின்றில வேனு மதனிடத்து மயக்கிநின்றன கொள்க. என்னை கொள்ளு

மாறெனின், ஈன்ற குயிலாகிய பெண் மறந்தொழிந்த, வளர்த்த காக்கையாகிய பெண் இல் கடிந்த, பெண் குயிலாகிய பெண்ணேயெனக்கொள்வதை மயக்கி நின்றமை காண்க.

ந-வது உருவகம் முற்றும்.

ச-வது உள்ளுறையுவமம்

38 உணர்வதற் கரிதா முவமப் போலி
புணர்திறம் வினையே பொருண்மெய் யுருவெனப்
பிறப்பொடு மைந்தாம் பெற்றித் தாகிச்
சிறப்புறு திணைகளிற் றெய்வத மொழிந்த
கருப்பொருள் களனுக் கட்டுரை பயின்று
முவமையோ டெதிருள் ளுறுத்தலுற் றயலா
யுவமச் சொற்றொக லொருதலை யாகியு
மன்பின தளவா மகத்திணை யிருவயி
னின்ப துன்பத் திசைதிரி திசையாத்
துணைவன் றுணைவி தோழி செவிலி
யிணையெனும் பாங்கன் பாணனென் றிவராற்
கொள்கையின் வருஉங் குறிப்புரைத் தாகும்.

(எ-ன்) வைத்தமுறையானே யுள்ளுறையுவமமென்னு மதற்குப் பொதுவிலக்கணமுணர்-ற்று. உவமப்போலியென்று மதற்குப்பெயர்.

(இ-ள்) உணர்வினு லுணர்தற்கரிதாகிய வுள்ளுறையுவம மென்பது முற்கூறிய வெளிப்படை யுவமம்போல வினைபயமெய் யுருவுகாரணமாகத் தோன்றுமவற்றினேடும் பிறப்புங் கூட்டி நிலைக்களனைந்தினேடு மவ்வவ நிலங்களிற் றெய்வதமொழிந்த கருப்பொரு ணிலைக்களனுகவு மழகிய வுரையுட் பயின்றும்

வெளிப்படையாகவரு முவமப் பொருளோடும்அதற்கெதிராகிய வுவமேயப்பொருள்களை யுள்ளுறுத்துக்கொள்ளும்படித்தாயு முவமேயம் பாடலுட்பயின்றுவாராது அயலாகிய முவமவுருபு தொகுதலொருதலையாகவுங் களவு கற்பென்னுங் கைகோளி னிருவகையினு மின்பதுன்பங் காட்டுவனவாயிசைதிரிந் திசைப் பனவாய்த் தலைவன் றலைவி முதலிய பெயர்களாற் குறிப்புரை யாய்வரு மென்றவாறு.

உணர்வதற்கரிதா மென்பதனுல் ஏனையுவமம் புலப்படக் கூறுதவுள்ளுறையுவமத்தைத் தருகின்ற கருப்பொருட்குச் சிறப்புக் கொடுத்துக் கூடிநிற்குமென்பதாம். கொள்கையின் வருஉமென்பதனுல் "கிழவி சொல்லி னவளறி கிளவி, தோழிக் காயி னிலம்பெயர்ந் துரையாது" எனவும். "கிழவோற் காயி னுரனொடு கிளக்கும், ஏனோர்க் கெல்லா மிடன் வரை வின்றே" எனவும், "கிழவோட் குவம மீரிடத் துரித்தே," கிழவோற் காயி னிடன்வரை வின்றே" எனவும், தோழியுஞ் செவிலியும் பொருந்துவழி நோக்கிக், கூறுதற் குரியர் கொள்வழி யான" எனவும் வருங் கூற்றுக்களோடும் தோழியு முறையரும் தலைவன்கொடுமைகூறும் வழியினும் பிறவழியினுந் தலைவ னூரின்கண்ணுள்ள கருப்பொருள்களா னவைசொல்லத் தலைவற்கேயன்றியுந் தலைவிக்கேற்றனவா முவமத் தன்மைத் தோற்றத்தனவா யுள்ளுறையுவமங்கோடலும், பிறவாறு வரு வனவாமவைகளுங் குறிப்புரைத்தாகு மென்பதனு முய்த்துக் கொள்க. பிறப்பாவது அவ்வவ நிலங்களி லிழிந்தபிறப்போடுஞ் சார்த்திக் கூறல். உள்ளுறுத்தல்-உள்ளேகுறித்தல். ஒருதலை-நிச்சயம். அகத்திணை யிருவயினென்பது இறந்ததுபோற்ற லென்னுந் தந்திரவுத்தி. இசைதிரிந்திசைத்தலென்பது செய் யுட்சொற்க டம்பொருளுணர்த்தாது வேறுபடக் கூறுதல். இசையாவது சொல். சொல்லாவது எழுத்தினுலாக்கப்பட்டுப் பொருளறிவுறுத்துமோசையாகலி னிசையென்றூர். இஃதாகு,

பெயர். என்னை? "இசைதிரிந் திசைப்பினுமிசையுமன்பொருளே, யசைதிரிந்தியலா" என்னும் பொருளியற்சூத்திரத்தானுணர்க.

இவற்றிற்கெல்லாம் செய்யுள் வருமாறு:—

காமர் பன்மலர் கஞலிய பொதும்பர்
மாமரப் பணையின் மதுகர மிழைத்த
முதுநறுந் தேற னொதுமலர் முன்னுபு
கொளத்தகு மரபிற் குன்ற வாண
வரைதலின் வரையா தொழுகலி னிருவிரு
மாறுபட் டொழுகிய மதியினி ராகலிற்
றிருமகிழ் மாறன் றிருவருட் கிலக்கா
யொழுகா தவருளத் தொன்று
மழுகா மதியின் மறுத்துவல் யானே.

என்பது வினையுவமப்போலி; என்னை? மாமரப்பொதும்பரகத்து மதுரங்கள் தமக்குப் பின்னைக்கு நுகர்வதாக மறைத்து வைப்ப விளைந்த தேனை நொதுமலராராய்ந்து கைப்பற்றிக் கொடுபோங் குன்றவாணனே யென்றதனாற் களவினோடுங் கூடிய கூட்டத்தை நீட்டித்துப் பின்னரிவளை வரைந்து கொள்ளக்கடவேனென நினைந்தநினைவு தவறும்படி பருவமுதிர்ந்த விவளையும் பிறர்நயந்து பொன்னணிந்து கொடுபோவரதுபோல வென்பவாகலான்; உவமைக்குப் பிறிது பொருள் எதிர்த்துவமஞ்செய்யா தாண்டுப்பிறந்த கருப்பொருளவற்றோடு முள்ளுறுத்துவைத்தலி னிஃதுள்ளுறையுவமமாயிற்று. அவற்றோடு மிஃது நொதுமலர் கொடுபோவரென்னுந் தொழிலோடு மிவளையும் பிறர்கொடுபோவரென்னுந்தொழிலுவமங் கொள்ள நின்றமையின் வினையுவமப்போலியாயிற்று. அன்றியுங் காமர்பன்மலர் கஞலியபொதும்பரென்பது நற்றாய் தோழி செவிலி முதலியோர்வைகு மனைக்குவமையாம். திணை-குறிஞ்சி. கைகோள்-களவு. கூற்று-தோழி. கேட்போன்-தலைவன். இடம்-முன்னிலை. காலம்-நிகழ்வு. பயன்-இற்செறிவுரைத்து வரைதல் வேண்டுமென்றது. மெய்ப்பாடு-அச்சத்தைச்சார்ந்த பெருமிதம்.

பகுதி-பகற்குறி. துறை-வருத்தங்கூறி வரைவுகடாதல். காமர்-அழகு. ஒழிந்தனவுமுரையிற்கொள்க.

இறைவறங் கூரா வீர்ந்தண் பொய்கைத்
துறைதொறுந் துவன்ற தோடவிழ் பன்மலர்
மாந்துபு வயினிறை வெய்திய கவரி
யேங்கெழின் மாடத் தீன்றகன் றுள்ளிப்
படர்வுழிப் படர்வுழிப் பணைமுலைக் குறுங்கண்
மடைதிறந் துவளக மடுநிறைத் தொழுகு
பாற்றடி னியினயற் பழிதீர் பேடையைப்
போற்றறு களிப்பிற் புணர்ந்தவண் மூழ்கிப்
புனிதமுற் றிருசிறை புலர்த்திய வோதிமந்
தணந்தயற் கழனிச் சாலிப் பெடைகளை
மணந்தத னனந்தலை மள்ளர்தா முழுத
காற்றடி யதன்க ணறுந்தழை பதனழிந்
தூற்றெழு களங்க வுறுபுன லாடிப்
பண்டுதான் மரீஇய பானிறப் பேடையைக்
கண்டுதான் வளைக்குங் காமரு கடல்கெழு
கண்ணகன் ஞாலங் கண்டுகண் ணயப்பான்
விண்ணவர் வியப்பான் மேதகு படிவத்
தரவணைத் துயின்றரு ளரங்கத் தமுதி
னுரவுநீர்க் காவிரிக் குறுபுன லூர
புல்லேன் பொதுவுணின் மார்பெனச்
சொல்லேன் புன்மனத் தொடர்புடை யேனே.

இதுவும் வினையுவமப் போலி. இதனுள், இறைவறங்கூரா என்பது சிறிதும் வற்றாதவென்றவாறு. ஈர்ந்தண்பொய்கை-மிகவுங் குளிர்ந்த பொய்கை. "துறைதொறுந் துவன்ற ....கவரி" இடந்தோறு நெருங்கின இதழ்விரிந்த தாமரை முதலிய பல மலரையு முண்டு வயிற்றை நிறைத்தல் பொருந்தின காரான். "ஏங்கெழில்......................தொடர்புடையேனே" எ - து உயர்ந்த அழகையுடைய மாளிகையினிடத் தீன்றகன்ற

குழக்கன்றை நினைந்து செல்லுமிடத்து முறுகின முலைக் குறுங் கண் மடைதிறந்து பள்ளவாவிகளைப் பெருக்கி யோடாநின்ற பாலாற்றின் பக்கமே குற்றமற்ற தனது பேடையைப் பாதுகாப் பற்ற களிப்பினோடும் புணர்ந்தப் பாலாற்றினடு மூழ்கிப் பவித் திரமுற் றிருசிறகரும் புலர்த்திய சேவலோதிம மப் பேடையை நீங்கி யயல்வயற் கூட்டப் பெடைகளை மணந் தக்கழனிநடுவண் மள்ள ருழுத நாற்றடிநனந்தலை நறியதளைமுக ளழுகி யூற்றிருந்த சேறு மிகுந்த புனலிடை யாடி முன்னர்த் தான் மணந்த வெண்ணிறப் பேடையைப் புணர்ச்சிகுறித்து வளையும், அர வணைத்துயின்ற அரங்கத்தமிர்தி னுரஞ்சு நீர்க்காவிரிக்குறுபுன லூரனே! புல்லேன் பரத்தையர் பொதுவுணின் மார்பெனச் சொல்லேன் புன்மனத் தொடர்புடையே னென்றவாறு.

பொதுவுணல்-பரத்தையர் பலரா யேககாலத் தின்பத்தைப் பொதுவாக அநுபவித்தல். இதனுள், பரத்தையரென்பது சொல்லெச்சம். ஒழிந்த அகல முறையிற்கொள்க.

அஃதாக; இதனையும் வினையுவமப்போலி என்ற தென்னை யெனின். தனக்குரிய பேட்டோடும் பாலாற்றினயற்புணர்ந் த தன் பின்னர் அப்பாலாற்றின் முழுகிய சேவ லன்னப் பெடையைநீங்கி யயற்கழனியிடத்து வேற்றுப் பேடைகள் பல வற்றையும் புணர்ந் ததனள்ளிடை நாற்றடிக் களங்க வுருபுன லின் முழுகி யக்களங்கப்புனல் புலராமுன்னம் பண்டு தான் மரீஇய பேடையை வளையு மென்பதனால் நமதகச் சோலையி னடுவட் பனிநீராற் பூரித்த புழுகு சுனையினதய லென்னோடும் பாதுகாப்பற்ற களிப்புடன் உவர்ப்பில்லா வின்பத்தைத் துய்த் துப் பவித்திரமெய்த வேண்டி முழுகி யிரவாடை களைந்து நனைந்த குழற்கற்றை புலர்த்தி யெதிர் முகமாகவிருந்த நீ நீங்கி யெனது மாளிகைக் கயலே சேரிப் பரத்தையர் பலரையுந் தோய்ந்த வேர்வோடுங் குழம்பிய மான்மதச்சேறு புலரா முன் னம் வாயில் வேண்டாதுவந் தெனது பள்ளியிடத்தாறுகி மணி

மேகலையைப் பற்றுதற் கிருகையால் வளையாநின்று மென்னும் உவமேய வினை கருப்பொருள்களானாகத் தோன்றிநின்றமையா னென்றுணர்க.

இது திணை-மருதம். கைகோள்-கற்பு. பகுதி-பரத்தையிற் பிரிதல். கூற்று-தலைவி. கேட்போன்-தலைவன். இடம்-முன்னிலையாய பள்ளியிடன். காலம்-நிகழ்காலம். பயன்-ஊட நீர்தல். மெய்ப்பாடு-வெகுளியைச்சார்ந்த வுவகை. இதற்குத் திணையுட்டிணை - பெண்பாற்கூற்றுப்பெருந்திணை. துறை - இல்லவைநகுதல்; அல்லது பரத்தையிற்பிரிந்துவந் தாற்றுமையேவாயிலாகப் புகுந்த தலைவனு னூடநீர்கின்றாளாய இயற்பரத்தைகூற்றுமாம்.

குவளையுங் குமுதமுந் தவளவொண் பதுமமுந்
திசைதிசை யோசனை தேங்கமழ் திவ்விய
வசைதீ ரந்தண் மயிலை வேலிப்
பொய்கையுட் செவ்வியிற் பொதியவிழ் புனிதச்
செய்ய தாமரைத் தேறலை யளவளா
யுவட்டா தருந்தியு முருகிய சுரும்பதன்
கரைசேர் வெள்ளிடைக் கலித்தநீர் முள்ளியிற்
பாடவிழ்ந் தறற்சுரும் புணர்ந்துணப் பதனழி
பூநா றுண்டின் புறுபுன லூரன்
றெண்டிரைக் காவிரித் திருவரங் கேசன்
றொண்டர்தந் தொண்டர் தொடர்பினை யொரீஇப்
போதம் புறந்தரப் புரைதீ ரின்னுயிர்க்
கேதங் கொள்ளுந ரிதயம்விட் டகலா
தொல்லாப் புலன்வழி யுய்க்கும்
புல்லறி வினுட்குடி புகும்புன் மையனே.

இது பயனுவமப்போலி; என்னை? பொய்கையுட் பவித்திரச் செய்யதாமரை பருவத்தின் மலர்ந்துகு புதிய தீந்தேறலை

யளவளாயுண்ணத்தெவிட்டா துள்ளமுருகிய சுரும்பு அதன் கரையினில் மலிந்த முள்ளுடை நீர்முள்ளி முறுக்கவிழ்ந்தபரு வத்துவேற்றுச்சுரும்பு பலவுந் துவைத்துண்ணச் செவ்வியிழந்த பழம்பூவிற் சுருக்கியதேனையுண் டின்புறுமெனவே நமது தலைவர்க்குயர்ந்தமகளி ரிழிந்தமகளி ரென்பதில்லை; புணர்ந் தின்புறுதற் கியாவருமுரிய ரென்னும்பய னுள்ளுறுத்துக் கொள்ளக் கிடந்தமையா னென்றுணர்க.

திவ்ய நல்ல புனிதம் பவித்திரம். அளவளாய்-உடலுமுயிருங்கலந்து. வெள்ளிடை-வெளி. கலித்தல்-மிகுதல். புன்மையன்-அறிவிற்றற் சிறுமையன். வெளியினிற்கும் நீர்முள்ளியெனவே வீதியினிற்கும் வேசை என்பதாயிற்று. ஒழிந்த அகலம் நம்பெருமான் மும்மணிக்கோவைவிரித்துரையுட் காண்க. திணையும் பகுதியு மிதுவுமது துறை-உழைய ரியற்பழித்தல்.

இனியதெள் ளமிர்தா யெறித்தெழு கிரணப்
பனிமதி யகடுமப் பணைநெடும் பொங்கர்ப்
பூந்துணர் ததைஇய பொழிலெழி னள்ளிடை
யீர்ந்தண் கோட்டகத் தினமலர் முற்றிய
பொதியவிழ் தாமரைப் பொகுட்டா சனத்து
மதிநல னுறப்புணர் மாண்புடைப் பெடையொடும்
வீற்றிருந் தின்புறு மேன்மையோ திமமொரு
பாற்படு கரைசேர் பன்மரக் காவிற்
குறுகுபு கொடுமுட் டாழைக் கூன்சினை
வெறுநிலத் தடர்தர விரிந்தபா சடைமேற்
றனிநறை மாந்துபு சார்பெடைக் குருகொடு
புணர்தலு நலனும் புனன்மலி யூரன்
பூமக ளிலைகுலாம் பூண்முலை முகடுமத்
தேமவிழ் பசுந்துழாய்த் திருமணி மார்பன்
றென்னரங் கேசன் றிருவருட் கிலக்கா
முரனுடை யோர்க ளுயிர்த்துணை யெனவா
ழில்லறம் பழிபிறங் காதிருந் தில்லி

னகனமர்ந் தானு துறையுந்
தகவேது மிலாத தவறு ளோனே.

இதுவும் பயனுவமப்போலி; என்னை? இருமனமு மொரு மனம்போலப் பேரானந்தமெய்தப் புணர்ந்த பேடையோடும் பொதியவிழ்ந்த தாமரைப்பொகுட்டி லரசுவீற்றிருந் தின்புறுஞ் சேவலோதிம மப்பேடையைப்பிரிந்து வாவிக்கொருபக்கமான கரைசேர் பன்மரக்காவின்புறத்து வளர்ந்த முள்ளுடைத்தாழை முடச்சினை வெறுநிலைத்துத் தகடுபட விரித்த பாசடைமேலிருந் ததனிடத்துத் துளித்துவிழுந் தேனையுண்ட களிப்பினுல் வெளுத்த சிறையுடைப் பெடைக்குருகைப் புணர்தலு மானந்தமெய்தும் புனன்மலியூரனெனவே இப் பொற்புடையில் லின்கணிருந் திக்கற்புடையவளோடு மிருமனமு மொருமனமா கப் புணர்ந்து பேரானந்த மெய்திய பின்னர் யாம் புடைசூழ அரசு வீற்றிருந்தோன் இவளை நீங்கி எமது மாளிகைக் கய லாய்ப் பொலிவிழந்த சேரிப் பரத்தையைப் பெண்டன்மை மாத் திர மொத்தலிற் காமபானத்தையுண்ட புத்திப் பிரமையா லுவர்ப்பின்றிப் புணர்ந்ததனு லின்பமெய்துமூரன் றகுதி யொன்றுமில னென்றுரைத்த பான்மை யுள்ளுறுத்துக்கொள் ளக்கிடந்தமையா னென்றுணர்க.

இதற்கும் விரித்துரை நம்பெருமாள் மும்மணிக்கோவை யுரையுட் காண்க. பகுதி-இதுவுமது. துறை-தோழி தலைவனை யியற்பழித்தல்.

நீர்நிலை முற்றிய நிழன்மலி சோலையுட்
கார்வழங் காத காலையுங் கவின்பெற
வேர்முதற் பழுத்து வியன்சினைப் பலவு
வளங்கெழு நாடவெம் மணிபுரை மாண்கவின்
புறந்தரு மாயினும் புனிதநின் னின்று
லரவணைத் துயிலமர்ந் தருளரங் கேசன்
றாநீர்க் காவிரித் துறைபடிந் தல்லதை

யொல்லேன் மலரமளி யினுறப்
புல்லேன் பரத்தையர்ப் புணர்ந்தநின் மார்பே.

இது மெய்யுவமப்போலி; என்னை? கார்வழங்காதகாலையும் நிழன்மலிசோலையுட் பலவு வேர் முதற் பழுத்து வாட்டமின்றி வளனெய்திஞற்போல நீ யென்னிடத் தருளின்றிப் பரத்தையர்மாட்டுப் பிரிந்தகாலத்தும் ஆயவெள்ளம் விட்டு நீங்காத எனது மனையிடத் தில்லறங்கோடாது நடத்துதற் பொருட்டித்துணைப்போது முளனுனே னென்றதாக வுள்ளுறுத்துக் கொள்ளக்கிடந்தமையா னென்றறிக. இதற்கு மொழிந்த விரித்துரை மும்மணிக்கோவையுரையுட் காண்க. பகுதி-இதுவுமது. துறை-அணைந்தவழியூடல்.

உலைவினீ ரழுவத் துறுசிறை யதன்க
ணலைகொழித் தலைதொறு மலைதொறு மொத்துண்
டழுங்கரு ரெய்திய யாக்கைய தாகியுந்
தன்னுல் வளர்க்கத் தகுசினை யதன்மேன்
மன்று தரவின் வளர்மீன் வைத்தகண்
வாங்கா துய்த்து வளர்புன லூரற்
கேவலிற் பிழையா வின்னிசைப் பாணர்
புதுவது வாய்வழி பிழைத்திவண் போதரு
மதுநினைந் தருவிருந் தளித்திடற் கந்தோ
மதுமகிழ் மார்பினன் வழுதிநன் ஞட்டவர்
குடினைபைக் காய்திறன் குறிப்பது மின்றூற்
காதோ டுலவுகட் காரிகை
யாதோ கறியீங் கினிதமைப் பதுவே.

இதுவும் மெய்யுவமப்போலி; என்னை? அழிவில்லாத நீர்க்கயத்துண் மிக்க சிறையிடத்துத் திரையெடுத் தெற்றுந்தோறு மெற்றுந்தோறு மதனு லெற்றுண்டு மிகவுந் துன்பமெய்திய யாக்கையோடுங்கூடிய மீன் றன்னுல் வளர்க்குஞ் சினையின்மேல் வைத்தகண்வாங்காது வளர்த்தாற்போல யானுந் தலைவர் பிரிந்தெனக்களித்த துன்ப மென்மேனியை வருத்தவு மம்மேனி

யோடு மில்லின்கணிருந்து மென்னுலோம்பப்படு மில்லற மோம்புதற்குளனேனென்ப துள்ளுறுத்துக்கொள்ளக்கிடந்தமையா னென்றறிக. இதுவும் பகுதி யது. துறை-பாணனைப் பழித்தல்; தலைவி கூற்று. இதற்கும் வுரித்துரை கூறவேண்டுவதில்லை.

பன்மலர் கஞலிய பழுமரச் சோலையுட்
டன்னிழ றுணையாத் தளிர்த்தமௌ வலின்மலர்
விரிகதிர் தெறுதலின் வெம்மையுற் றுணங்க
முட்புறக் குடக்கனி முடப்பல வதனயற்
செங்கிடை மலர்கவின் சிறப்பவு நிழற்று
மொண்புன லூரற் குறுபழி விளைக்கும்
யாமே திலமே திலமென வெங்கையர்
மாளிகை பயின்று மதங்கருற் றிலராற்
புலிப்பா வலர்புகழ் புரவலன் மதுர
கவிப்பா வலன்புகழ் கருணையங் கடவுண்
மதுமகிழ் மார்பினன் வண்குரு கூரன்
சதுமறைப் பொருளாற் றருதமிழ் மறையினுண்
முதுமொழி யுணரா மூடம தடைந்த
மனனக மலமிக மறுகுன
ரினமென லொன்று யிகழ்பொய்ம் மையனே.

இது நிறமல்லாத பண்புவமைப்போலி. என்னை? சோலையுட்டன்னிழலே துணையாகத் தளிர்த்த முல்லைக் கொடியின் மலரானது விரிந்த கதிர்தெறுதலான் வெம்மையுற்றுணங்க முடப்பலவு தனக் கயலாகத் தோன்றின செங்கிடைமலர்க் கழுகுமிக அதற்கு நிழல்செய்யுமது போலத் தலைவனும் தன்னையே துணையாக ஆவிதளிராநின்ற விவளுங் காமத்தீயால் வெந்து மேனிவாடத் தனக்கயலாய பரத்தையர்க்குடலுமுயிருந் தளிர்ப்ப நலங்கொடாநின்று னெனப் பண் புள்ளுறுத்துக் கொள்ளக் கிடந்தமையா னென்றுணர்க. பகுதி-இதுவுமது. துறை-பாணனொடுவெகுளல். கூற்று-தோழி.

ஒன்றாய்ப் பரந்த வுறுவளி கறங்கலின்
மின்றும் பன்மின் மிளிர்விசும் புழுசினை
சுமைமலிந் தொசிதரத் துணர்த்தமென் பூமுகை
பொறிச்சுரும் புளர்தொறு முளர்தொறும் பொதும்பருண்
முறுக்குடைந் திழிதரூஉ மொய்ந்நறுந் தேறல்
பந்துபன் முகத்தவாய்ப் பவளக் கொடியொடுங்
குரூஉக்கட் பரூஉத்தாட் குடம்புரை செருத்தற்
கயவாய் மேதி கட்கழு நீருண்
டுயவால் வைந்நுதித் தொடர்நெறி மருப்பிற்
புறக்காழ் வயிரப் பூங்கழை தடிந்து
நிறக்காழ் நித்தில நிரந்தரம் வரன்றயல்
வெள்ளிடை நிவந்த மேதகு சுவலினை
யுள்ளுயிர்ப் பெடையை யுறையுளி னிருத்திப்
பாலுணீர் தெரித்துப் பருகுமொண் சேவ
லாலுநீர்ச் சிறைபுக் காய்ந்திரை கொணர்வலென்
றிகந்தய விடைப்படிந் தெழுமயர் வுயிர்ப்பான்
வாலுக வைப்பென மறுகுபு குறுகிவீழ்ந்
தன்மையிற் றவக்குற் றச்சப் பார்வையிற்
புராதனப் பொய்கையுட் புகுபுன லூர
பொருவரு தாமரைப் புதல்வனைப் பயந்த
திருமறு மார்பன் றிருவரங் கத்துப்
பொதுநலப் பெண்டிர் பொதுவுணின் மார்ப
மல்ல னீர்படிந் தல்லது
புல்லேந் தீண்டலெம் பொன்னடிச் சுவடே.

இதுவும் பண்புவமப்போலி; என்னை? சேவலன்னம் நித்தி லங்கள் வெள்ளிடைநிவந்த மேதகுசுவலினை வாலுகவைப் பெனக் குறுகியிருத்தற்கு மென்மையில்லாததனோடு மறிவு மயக்கமுற்றதனால் இலச்சையுற்றுத் தன்பேடையை யிருத்திப் போந்த பொய்கையுட் புகாநிற்கு மதுபோல நீயுங் கற்பு நாணு முதலிய நற்குணங்க ளின்றித் தன முதலியனவெய்தும் பெண்

டன்மை மாத்திரமேயுடைய பரத்தையரையு நற்குண நற்பெண்டிரென்று தோயுமளவிற் பொருண்மேற்சென்று வற்கென்ற துர்க்குணத்தாராதல் கண்டதனோடு நினது புத்தி மயக்கமுற்றது நினக் கிழிபென நாணி யெம்மனையிடத்துவந்து வாயில் வேண்டாநின்று யென்ப துள்ளுறுத்துக் கொள்ளக் கிடந்தமையானென்றுணர்க.

வெள்ளிடை-வெளி. நிவந்தது-உயர்ந்தது. சுவல்-மேடு. வாலுகவைப்பு - மணற்குன்றாகிய விடம். தவக்கு - இலச்சை; நாண். கருத்துப்பொருளாய பண்புவமப்போலி. பகுதி இதுவுமது. துறை-அணைந்தவழியூடல். இது கூற்று-இற்பரத்தை.

ஓங்கிய குரம்புசா ருவளக வயின்வயின்
வீங்கிய திணிதோண் மிடலுடை மள்ளர்
சுதைபெய் தாற்றலிற் சுடுமண் பன்முறை
ததைவுறப் படுத்த சால்பிற் றெண்ணீர்
வார்ந்துகு கவர்முழை மதகுபடர் குடுமியிற்
சேர்ந்தசை வறவிரு சிறகரு மொடுக்கி
மறைபுகு நோக்கின் மனப்பட் டிமையாற்
றுறைபுகு கயலினைச் சோர்புகண் டெடுத்துக்
கூர்வாய் வெண்சிறைக் குரண்ட மென்பெடைக்
கார்வா யெனவருத் தியினருத் துபுதுடித்
தயல்வீழ் வதனை யற்றம் பார்த்து
மிச்சிலென் றறிந்தும் விழுநெறி யொரீஇ
நச்சியுண் புலவு நாற்றத் தோடுஞ்
செங்கால் வெள்ளுகிர்ச் சேவ லோதிம
மொருசிறை யிருந்த வோவாச் செவ்வி
யிருசிறைப் பேடை யெழின்மலர் குறுகு
நளிமலர்ப் பொய்கை நல்வய லூர
திருநெடு மாயன் றிருவரங் கத்துப்
பொருணசைப் பரத்தையர் பொறித்தநின் மார்பிற்
றனக்குறி யாநிற் றழுவுபு சிதைவுறின்

மனக்கிட னிழைப்பது மன்றி
நினக்கிட னுறுமா னெருங்கலெம் மிடனே.

இது சிறப்புவமப்போலி. என்னை? இழிந்தகுரண்டந் தன் பேடைக் கருத்துங் கயலை யதுவாய்க்கொள்ளத் துடுத் தயலே வீழ்ந்ததனை யிச்சிலென்றறிந்து மறிவினாலுயர்ந்த அன்னம் அதனை யற்றம்பார்த் தெடுத்துண்ட புலானாற்றத்தோடுந் தன துத்தமப் பேடையுறையுமழகிய சேக்கையாகிய தாமரை மலரைக் குறுகுமதுபோல நீயு முயர்ந்த குலத்துட் பிறந்து மிழிந்தகுலத்துள்ளோர் தோய்ந்தகன்ற மிச்சிலாகிய பரத்தை யரிடத் தின்பத்தைத் துய்த்து வேற்றுநாற்றத்தோடு மெமது நன்மனைக்கண் ணெம்மைத் தீண்டவந்தனை யாதலா லெம்மைத் தீண்டல் பொருந்தாதெனக் கூறினாளென் றுள்ளுறுத்துக் கொள்ளக்கிடந்தவையா னென்றுணர்க.

பகுதி-இதுவுமது. திணை-பெண்பாற்கூற்றுப்பெருந்திணை. துறை பள்ளியிடத்தூடல். கூற்று-இதுவும் இற்பரத்தை.

விசும்பு தூர்த்தெழு வியன்சினை மாத்தின்
பசும்புறத் தீங்கனி பரீஇநுகர் கடுவன்
புரப்பவர் குறுகு புலம்புறீஇப் பொங்க
ரிரிந்தலம் போதரு மீர்ந்தண் சோலையுட்
புளிங்கறி வேட்ட புன்றொழிற்றன் மையர்க்குப்
பழிப்பின் றாகப் பாகுசெய் தட்ட
கோதறு மான்பாற் குழம்புபொற் கலத்தினுட்
பெய்திருந் தாறும் பெற்றீ யேய்ப்ப
முடவடிப் பலவின் முதிர்பொற் குடக்கனி
வேர்முதற் பழுத்து விரிந்தபொற் றீஞ்சுளை
பதனழி பான்மைப் பாய்புன லூர
நூற்கடற் பழகிய நுண்ணுணர் வுடையோ
ராற்றலிற் பரவுசீ ரரங்கனுக் கமைந்த
பாற்கடன் முற்றப் பருகுதற் கெழுந்த

பேராப் பெரும்பசி யாளர்தம் முன்ன
ராரா வள்ளத் தமிர்தமைப் பவர்போற்
சிறுவரை யின்பத் துறுதுய ரிழைத்தற்
கிரத்த லிங்கியல் பன்றாற்
பரத்தையிற் பிரிதனின் பண்பா கும்மே.

இது, "உள்ளுறையுவமமேனையுவமமெனத் தள்ளாதாகுந் திணை யுணர்வகையே" என்று மகத்திணையியற்சூத்திரத்தான் உள்ளுறை யுவமந்தா னேனையுவமமென்றுகூறும்படி யுவமையு முவமிக்கப்படும் பொருளுமாய்நின் றுள்ளுறையுவமத்தினைத் தருங் கருப்பொருட்குச் சிறப்புக்கொடுத்து நின்றது; என்னை? ஆகாயத்தை மூடியெழாநின்ற அகன்ற கொம்பர்மாமரத்திற் செம்மைமுற்றுப் பசுத்த வினிய கனியைப் பறித்துநுகர் கடுவனை தச்சோலையைக் காப்பவர் முடுகத் தனிமையுற்று அதனயற்கொம்பரிற் சுற்றித்திரியுங் காவினுட் புளிப்பாகினை யுண்ணவேட்ட புன்றொழிற்றன்மையுற்றவர்க் கூட்டுவதாகக் குற்றமில்லையாம்படி பாகுபடுத்திக் காய்ச்சின எப்பிணியுந் தீர்க்கும் பசுவின்பாற்குழம்பு பொன்னின்கலத்துட் பெய்திருந்தாறு முறைபோல முடப்பலவின் வேரிற் குடக்கனி முற்றிப் பழுத்து விரிந்த பொன்போனிறத்தையுடைய வினியசுளை யருந்தும் பருவத்தருந்தாது செவ்வியழியாநிற்கும் பரந்த புனலூரனே! என்றதற்கு ஊரனே! நீ யுத்தமநாகியல்லின்கண் மாலைக்காலத் தினுஞ்செல்லா தினிய செவ்வியுடைய சேரிப்பரத்தையைப் புணர்ந்து விளையாடாநின்றகாலத் தவள் பொதுமகளாதலின் பிற ரப்பரத்தைமாளிகையைக் குறுகத் தனியுற்றுத் தணந் தப் பரத்தை மாளிகையைச் சுற்றித்திரியு மிவ்வூரிடத் தியானு நின் வரவுபார்த்தென்னையலங்கரித்து மிகுந்த காந்தியோடுமிருப்ப நின்வரவுதாழ்ப்பக் கவினழியாநின்ற வென் வருத்தத்தைத் தீர்ப்பா னொருசேரியினிடத் தென்மாளிகைக்கண் வந்து வாயில் வேண்டாநின்று யென்னிடத் தின்ப நின்காதற் கார்த்தியுடைய தொன்றல்ல வின்னு மச்சேரிப்பரத்தை மாளிகையிற்பிரித

னினக்குக் கடனென்று காமக்கிழத்தி யுள்ளுறை யுவமங் கூறினளாதலி னெனவுணர்க.

அன்றியும், "உடனுறை யுவமஞ் சுட்டுநகை சிறப்பெனக், கெடலரு மரபி னுள்ளுறை யைந்தே" என்னும் பொருளியற் சூத்திரத்தா னிது சிறப்பென்றவுள்ளுறை. இச்சிறப்பென்ற வுள்ளுறை "விரிகதிர்மண்டில" மென்னு மருதக்கலியுள்ளும் வந்தமை காண்க. இது சேரிப்பரத்தையிற் புணர்ந்துவந்த தலைவன் வரவுகண்டு காமக்கிழத்தி யூடியவாறுகண்டு சென்று சார்ந்த தலைவனுடனூடநீர்கன்றுள் கூறியது. ஒழிந்த அகலம் நம்பெருமாள் மும்மணிக்கோவை விரித்துரையுட் காண்க. கோது-ஆகுபெயர்.

மழைதவழ் பலவின் வான்சினை நீழற்
றழைதரு மரம்பை தான்பொறை யுயிர்ப்ப
விசும்புமிழ் திவலையின் விழுமிதின் முற்றிய
பசுங்காய் மதுரப் பலன்படு காலை
நிறத்த பாசடை நீள்சினை வாட
விறபளித் துலகிற் பிறர்க்குறு பயனு
மடலவிழ் நறைமகிழ் மாலிகை மார்பன்
றுடரிமால் வரைதுறந் தனளாய்த் தொடர்ந்த
வினையேன் பெற்ற மெல்லிய லொருத்தியுங்
கனைகதிர் வேற்கைக் காளையுங் கடத்திடை
மன்னிய திருவு மாயோனும் போன
முன்னிய துணைதெனின் முக்கோர் பகவீர்
மதிபெற வணங்கினன் மகிழ்ந்தே
சதிர்பெற விளம்புமென் றளர்வகன் றிடவே.

(இ-ள்) மேகந்தவழாநின்ற பலவினது பெரிய கொம்பர் நீழலில் வளர்ந்த வாழை யீனுகிற்ப முகில்பெய்யுந் துளியி னன்றாய் விளைந்த பசுங்கா யினிய கனியான பருவத்துப் பச்சிலையாகிய நீண்டசினை வாடுதலோடு மதற் கிறத்தலையுங்

கொடுத் துலகின்கட் பிறர்க்கு மிக்க வூதியமாகு மாறனது துடரிமால்வரையை நீங்கினளாதலிற் றொடர்ந்து போந்த வினையேன் பெற்ற மெல்லிய சாயலையுடையா ளொருத்தியும் நெருங்கிய கிரணத்தையுடைய வேற்கைக்காளை யொருவனுமாக விருவரும் விட்டு நீங்காத திருமகளும் மாயோனும்போல, முக்கோற்பக வீர் சுரத்தினிடத் தெதிர்வரக்கண்டதுளதேல் யான் கூறியவை யெல்லாம் புத்தியுட்கொண்டு மகிழ்ந்து எனது தளர்வு நீங்கச் சதிராக விளம்பும்; நும்மை வணங்காநின்றே னென்றவாறு.

இதனுள் செய்து என்பது செயவென்னும் வினையெச்ச வாய்பாடாக நின்றது. இச்செய்யுள் நால்வகையுவமப்போலியும் விரவிவந்தவுவமப்போலி. என்னை? பலவின்கீழ் வளரா நின்ற வாழையீன்ற தாறுபோல நற்றாயால்வளராநின்ற வென்னாற் பெறப்பட்டாள் என வினையுவமப்போலியும், விசும்புமிழ் திவலையிற் றூறுமுற்றியதுபோல வென்னு மாயத்தாலும் இளையள் விளைவெய்தினளெனவே மெய்யுவமப்போலியும், பசுங்காய்மதுரப்பலன்படுகாலை நிறத்தபாசடை நீள்சினை வாட விறப்பளித் துலகிற் பிறர்க்குறுபயனு மெனவே அங்ஙன மிளையளாய் விளைவெய்திய தலைவி யிந்திரியகலனம்வந் தினபத்திற் குரியளாயின காலத்து எனது மேனிகளும் வாட்டந்தந் தென துயிரையுங் கொல்லாது கொன் றெனக் கொருபயனுமின்றி யயலானுன கணவற்கே யூதியமாயினளென்றுங்கொள்ளப் பயவுவமப்போலியும், பண்புவமப்போலியும், வினையுவமப்போலியு மிதனோடேகூடி முன்னும்பின்னு மிவ்வண்ணமே நால்வகை யுவமப்போலியு முள்ளுறுத்துக்கொள்ள நிகழ்ந்தமையா னென் றுணர்க. பயவுவமப்போலியாவது வினைகாரணமாகப் புலப் படுங்காரியத்தை யுள்ளுறுத்துக்கொள்ளப்படுவதாம். அஃ திண்டுக் கூட்டத்தாற்பிறக்கும் பேரானந்தம் என்றாற்பெறப் பட்டாளென்மகள் என்பன அன்பினதிகத்தானு நற்றாயென் றுந் தானென்றும் வேறல்லவாம் ஐக்கியத்தானுங் கூறினாள். பாலைக்கலியுள்ளும் 'என்மகளொருத்தியு'' மெனக் கூறிய

வாற்றானு முணர்க. பகுதி-உடன்போக்கு. துறை-பின்சென்ற செவிலி முக்கோற்பகவரைவினாதல்.

இதனுள் தலைவி தோழி செவிலி இற்பரத்தைகாமக்கிழத்தி உழையர் என்போர் கூற்று வந்தன. ஒழிந்தோர்கூற்றும் வந்த வழிக் காண்க.

ச-வது உள்ளுறையுவமம் முற்றும்.

ரு-வது ஒட்டலங்காரம்

39. குறித்ததை மறைத்துக் குறிக்கொள நிகர்த்ததை
நுவல்வகை தாமே யொட்டென நுவல்ப.

(எ-ன்) வைத்தமுறையானே ஒட்டென்னு மலங்கார மூணர்-ற்று.

(இ-ள்) புலவனாற் குறித்தபொருளை மறைத் ததனைக் கற்று வல்லோ ருட்கொள்ளும்படிக் கதற்கொத்த பிறிதொன் றினை வெளிப்படையாய்க் கூறுங் கூறுபாடுதாமே யொட் டென்னு மலங்காரமென்று கூறுவர் பெரியோரென்றவாறு. வெளிப்படையாகவென்பது சொல்லெச்சம்.

40. அதுவே,
பொருளிடஞ் சாதி வினைகுணம் பொழுதொடு
மருளறு நெறித்தாய் வருதிற னுடைத்தே.

(எ-ன்) இஃதவ் வலங்காரத்தின் கூறுபாடுணர்—ற்று.

(இ-ள்) அதுவே-அச்சொல்லப்பட்ட ஒட்டுப் பொருள் முதற்காலமீறாகச் சொல்லப்பட்டவாறு மிடனாகி மயக்கமற்ற

நெறியுடைத்தாய்த் தோன்றுங் கூறுபாடுடைத்தா மென்று வாறு.

இவற்றிற்கெல்லாஞ் செய்யுள் வருமாறு:—

கற்றுணர்ந்த வாய்மைக் கவிப்புலவீர் கண்ணனருள்
பெற்றியன்ற செம்பொருளைப் பேணியே—சுற்றம்
வளைத்தருந்த வாழாது வந்தயலார் கூண்டு
இளைத்தருந்த வாழ்வார் சிலர்.

(இ-ள்) கற்பனவாம் நூல்களைக் கற்றுணர்ந்த வுண்மையோடுங் கூடிய கவிப்புலவீர்காள்! கண்ணனருளைப்பெற் றதனு லுண்டான வுண்மைநிதியை யழியாதோம்பி யதனை மாதா பிதா முதலிய வுரிமைச் சுற்றங்க டம்மைவளைத்திருந்து நுகர் வெய்தத் தாமு முடனுண்டுவாழும் வாழ்வெய்தாதே சிலர் தம்மோ டொருவழியு முறவில்லாத வயலார் களித்தருந்த வாழ்வா ரவரறியாமை தகாதென்றவாறு.

இது புலவன் குறித்தபொருளை மறைத் ததனைக் குறிக் கொளற் கதற்கொத்த பிறிதொன்றனை வெளிப்படையாய்க் கூறியது. குறித்த பொருளாவது கண்ணனருள் பெறுதலா லுண்டான வுண்மைப்பொருளாகிய கல்வியோடுங்கூடிய கவி. பேணுதல்-வாய்மையிழவாது போற்றுதல். சுற்றம்வளைத் தருந்தவாழாதென்பது ஆன்மாவை யீடேற்று முறுதிச்சுற்ற மான பரமபதநாதனுகிய பிதாவும், பெரியபிராட்டியாகிய மாதா வும், ஆசிரியனும் அதனைக்கேட்டு மகிழ்வெய்த அவர்களைப் புகழ்ந்தப்பாடலை யவர்களுக்கேகொடுத் திம்மைப்பயனேடு மறுமைப் பயனு முத்தியையும்பெற்றுப் பேரின்பமெய்தி வாழா தென்றவாறு. சிலர் வந்தயலார் கூண்டுவளைத்தருந்த வாழ்வா ரென்பது முன்பிலவர்களைப்போலக் கவிகளாற்புகழ்தற் கியாது மியைபில்லா மானிடராகிய வயலாரை வாய்மையிழந்து புகழ் வதனை யவர்கேட் டுட்கொண்டு களித்தளித்த கூறை சோறு

முதலியன வுடுத்து முண்டும் வாழ்வா ரிஃதென்ன உலகியற்கை யென்றவாறு.

இது, பொருணிலைக்களனுகத்தோன்றியவோட்டு; என்னை? இரு வகைப்பொருள் கல்விப்பொருளுஞ் செல்வப்பொருளு மென்பதனுலுணர்க. ஓட்டென்பதற்கு நுவலாநுவற்சி, பிறிது மொழிதல், சுட்டு என்பன பரியாயம். திணை-பாடாண். துறை-வாயுறைவாழ்த்து.

உழவுபயன் கொள்ளுவா ருயர்நிலத்தி னுள்ளாய்
விழைவுபெற வித்தியவித் தல்லா—லழகமையா
வன்பாரில் வித்தியதூஉ மால்பொருட்டாற் போர்நிலத்தா
மென்பார் புலவீ ரெவர்.

(இ-ள்) உழவினுற் பயன்கொள்வார் நல்ல கழனியகத்த வாய் மகிழ்வெய்த விதைத்த நல்லவித்துச் சீமன்னுராயணன் பொருட்டால் விளைந்து களம்புகுமென உலகங்கூறுவதல்லா லுழவினுக்கியாதுஞ் சிறப்பில்லாத வலிய பாறைநிலத்தில் விதைத்ததும் விளைந்த களம்புகுதுமென்று கூறுவார் புலவீர்கா ளுலகத் தொருவருமில்லையென்றவாறு.

இதுவுங் குறித்த பொருளை மறைத் ததற்கொத்த பிறி தொன்றனை வெளிப்படையாய்க் கூறியது. குறித்த பொருளா வது:— தவமாகிய தொழிலாற் றமதுயிர்க்கு முத்தியாகிய வூதி யத்தை யெய்து மாரியர்கள் பரவுபகாரத்தாற் பூலோகமாகிய செய்யகத்து நல்ல கழனியாகிய கோயில் முதலிய திருப்பதி களுள் விருப்பமுற்றிருத்திய சிறப்புடை யுயிர்களே திருமால் பொருட்டாற் பரமபதமெய்துமென் றுலகங் கூறுவதல்லாற் சிறப்பில்லாத பாறைநிலத்தில் விதைத்த வித்து விளைந்து களம் புகுதாதுபோல மனநலன் யாதுமில்லாத தறுகண்மையோர் வைகும் பாறையாம் பாலைநிலங்களில் வைகியவுயிர்க ளறியாமை யேதுவாக முத்தியைப் பெறுமென்று கூறுவார்க ளொருவரு-

மூலகின்க ணில்லை யென்றவாறு. தவம் பெயர்ச்சொல்லெச்சம். உயர்நிலம்-கோயில் முதலிய திருப்பதிகள். விழைவுபெற-விருப்பம்பெற்று. வித்தியது-நியமித்திருத்தல். வித்து-ஆன்மாக்கள். இது மாட்டேறில்லா வுருவகம். வன்பார்-திருப்பதிகளல்லாத பொல்லாதவூர்கள். மால் போர்நிலம் இரண்டுஞ் சிலேடை. மால்-திருமாலும் அறியாமையும்; அல்லது மேகத்தின் பொருட்டா லென்பதுமொன்று. போர்நிலம்-சூடுநிற்குங்களமும் பரமபதமும். எல்லா வண்டத்தையு மீன் றகத்திடும் பிரகிருதிக்கு மேற்பட்டகன்ற விரசையையும் அகத்திடு நிலமாதலால் முத்திக்குப் போர்நிலமென்று பெயராயிற்று. போர்த்தல்-மூடுதல். இது இடநிலைக்களனாகிய ஒட்டு. திணையுந் துறையு மிதுவுமது. ஓம்படை யெனினுமாம்.

வாய்ந்த தமிழ்மாற னருட்புலவீர் மத்திமநோய்க்
கேய்ந்தமருந் தாவின்பா லென்றக்கா—லாய்ந்ததையக்
கற்றுவின் பாலுணர்ந்து கைக்கொளார் மேதியின்பால்
பெற்றூர்க்கும் போமோ பிணி.

இதனுள் மத்திமநோயென்பது பித்தம். அதற்கு மருந்தாவின்பா லென்றக்கால் என்பது வாகடநூ லதற்கு ஆவின் பாலே மருந்தென்று கூறியக்காலென்றவாறு. மேதியின் பால் பெற்றூர்க்கும் போமோ பிணி யென்பது அப்பித்தமாகிய பிணி எருமைப் பாலைப்பெற்றூர்க்குத் தீராதென்றவாறு. இது வெளிப்படையாகக் கூறிய பொருள். குறித்த பொருளாவது, மத்திமநோய்க்கு (என்பது:- பிறர் கூறும் பதி பசு பாச மென்பவற்றினிடைநின்ற ஆன்மாவிற்குச் செய்த தீவினையடியாக வெய்தும் பிறவியாகிய பிணிக்கு) நால்வேதத்தின் சாரமாகிய திருவாய்மொழியென்னு மாவினிடத் துண்டாகிய வுண்மை ஞானமாகிய பாலை யான்மஞானத்தினிடத்துத் தலைப்பெய்யாது, வேதமார்க்கமல்லாத புன்பனுவலாகிய மேதியினிடத் துண்டான புன்மைஞானமாகிய பாலாற் றீராதென்றவாறு. வாய்ந்தது-

உண்டானது உம்மை-இழிவு சிறப்பு. ஒகாரம்-ஒழியிசை. ஒழிந்த அகல முரையிற்கொள்க. இது சாதி நிலைக்களனாகத் தோன்றிய ஒட்டு. என்னை? ஆவின்பால் மேதியின்பால் என்பவற்றாலவை நிலைக்களனாகப் புலப்படுதலானென்றறிக. ¹ திணை-இதுவுமது. துறை-செவியறிவுறூஉ; அல்லது பாடாண்சார்ந்த பொதுவியற்பாற் சார்த்திற் பழுவல்வாழ்த்துமாம்.

வளைதவழ்நீர் மண்மேன் மதிப்புலவீ ரந்தோ
விளைகழனிச் சார்புள் விராய—களைகளைய
வாங்குங் களைக்கோலான் மாநிலத்தார்க் கேலாத
தீங்கு புரிவார் சிலர்.

என்பது, சங்கினந் தவழுங் கடல்சூழ்ந்த பூமியினுண்டாய புலவீர்காள்! செந்நெல் விளையுங் கழனியிடத்து விரவுங் களையைக் களைவதற்குக் கர்த்தன் கொடுத்துக் கைக்கொண்ட களைகளையுங் கோலாற் களையைக் களையாது, பெரிய நிலத்தின்கணுள்ளார்க்குப் பொருந்தாத் தீங்காகச் சிலர் தமது கண்ணைக் களையுந் தீய தொழில் விரும்பிச் செய்வாரிஃதென்ன பேதைமையோ வென்றவாறு. இது வெளிப்படையாகக் கூறிய பொருள். விளைகழனி-சீவியாநின்ற வுடம்பு. உள-ஆன்மா. சார்பு-இடம். விராயகளை-உம்மையிழைத்த தீவினை.- களையஅதனைப் போக்குதற்கு. வாங்குங்களைக்கோலால்-சிமந்நாராயணன் கொடுப்பக் கைக்கொண்ட மனோ வாக்குக் காயங்களால். அவனைச் சிந்தித்தும் துதித்தும் கண்டுங் கீர்த்தியைக் கேட்டுந் தாமஞ்சாத்தியும், கோயில் வலம் வந்தும் போதுபோக்காது, முத்தியை விரும்புவார் புத்திக்குப் பொருந்தாத தீத்தொழில்களை விரும்பிச் செய்து தமக்குள்ள வாழ்நாளை யந்தோ வவமே போக்காநின்றா ரினியெங்ஙனமீடேறுவ ரென்றவாறு. இதற்கும் அவரைப்போலெனக் கூட்டுக. உள்-ஆகுபெயர். அந்தோவென்ப திரக்கத்தின்கட் குறிப்பு. மாநிலம்-சிலேடை. இது குறித்தபொருள். இது விளைநிலைக்களனாகத் தோன்றியவொட்டு. என்னை? தீங்குபுரியுந்தொழில்

நிலைக்களனாகத் தோன்றுதலா னென்றுணர்க. திணை-இதுவு மது. றுறை-வாயுறை வாழ்த்து.

வாழ்ந்த மதிப்புலவீர் மால்வழங்குந் தூயநீர்
வீழ்ந்த நிலத்தியல்பான் மெய்திரிந்தாற்—சூழ்ந்ததனைத்
தேற்றிற் றெளிப்பதல்லாற் சேற்றிற் செறிகளங்க
மாற்றப் படுநெறித்தோ மற்று.

என்பது, முற்றவுணர்ந்த மூதறிவாளரோடுங்கூடி வாழ்ந்த மதியையுடைய புலவீர்காள்! மேகம்பெய்யுந் தெளிந்தநீர் தான் விழுந்தநிலத்தி னியல்பானிறம்வேறுபட்டா லதனைப்போக்குதற் குலகம் விசாரித்தறிந்த தேற்றினா லந்நீர் தெளிவதன்றிச் சேற்றுநீரா லதற்கடைந்த களங்கத்தை யொருவரானு நீக்கப் படுமார்க்கமுடைத்தன் றென்றவாறு. இது வெளிப்படையாகக் கூறியபொருள். அது தெளியாததுபோல மாயோனளித்த நற் குணஞ்சிற்றினங்களை விரும்பிக்கொண்ட வுறவினதுபெற்றியா னுண்மைவேறுபட்டா லெல்லா நூல்களையு மனத்தாலுள்ளி யறிவறிந்தோர் தெளிந்தஞானத்தாற் பண்டுபோற்றெளிவதன் றிக் கரியசேறுபோற் செறிந்தசிற்றினத்தார் மாசுண்டஞானத் தாற் றேற்றப்படாதென் றவாறு ஆதலான் மூதறிவுடையோர் நட்பு விடாதுகொள்ளவேண்டு மென்றவாறு. இது குறித்த பொருள். இதனுள் மால், நீர், வீழ்ந்த, மெய், தேற்றில், களங் கம் என்பன சிலேடை. ஆதலானிது அடைபொதுவாப்பொருள் வேறுபட்டுப் பண்பு நிலைக்களனாகத் தோன்றிய ஒட்டு; என்னை? வீழ்ந்த நிலத்தியல்பான் மெய்திரிந்தாலெனக் குணநிலைக்கள னாகக் குறித்த பொருடோன்றுதலா னென்றுணர்க. திணை - இதுவுமது. துறை-ஓம்படை.

நன்புலவீர் கங்குற் கிசைந்ததெலா நாரணனு
னின்புறவா ராய்ந்தியற்று மெஃகற்றே—புன்புலன்பெற்
றிட்டா தவரெவனே வெண்ணியது தாமுடிக்க
மாட்டா தழுங்கு மதி.

என்பது. நல்லறத்தினது பகுதியறிந்த புலவீர்கா ளிரவிற்கு வேண்டுவனவெல்லா நன்பகலே நாரணனருளாற் புத்திகளித் தியற்றுங் கூரறிவிலராகித் தமது மந்தபுத்தியா லவற்றை யியற்றுதிருந்தவர் அக்கங்குல் வந்தகாலத்துக்கங்குற்கு வேண்டு வனவின்றித் தாம் எண்ணியது முடிக்க மாட்டா தழுங்குகின்ற தென்னபேதைமையோவென்றவாறு இது வெளிப்படையாய்க் கூறிய பொருள். அவரைப்போல நிலையாமையோடுங்கூடிய யாக்கை நிலைமைத்தா ருயிரோடுங் கூடியிருக்கப்பெற்ற காலத் திம்மைக்கண்ணே மறுமைப்பயனு முத்தியைப்பெறுதற் கேது வாம் ஞான நூல்களை யாராய்ந்து சித்தசித்தீச்சுரங்களையறிந் தவற்றோடும் அன்றறிவாமென்று தறங்களைப் பயிலாதார் மரணம் வந்தடுத்தகாலத்திலெண்ணியிருந்த முத்தியையெய்த வேண்டுவன செய்துமுடித்திலமென்றியம்ப தூதுவர்கூட்டத் தைக்கண் டழுங்குகின்றமை என்னபேதைமையோ வென்ற வாறு. எனவே முத்தியை யெய்துதற்கு வேண்டுவன யாக்கை யிருக்கப்பெற்றபொழுதே பின்னையென்னாது செய்துமுடிக்க வேண்டுமென்பது பயன். இதனுள் நல்லறத்தின் பகுதி யறிந்தவென்பது சொல்லெச்சம் நன்பகலேயென்பது எதிர் மறையெச்சம். இது காலநிலைக்களனாகத் தோன்றிய ஒட்டு. என்னை? இரவிற்குவே ண்டுவனவெல்லா நன்பகலே யியற்ற வேண்டுமென்னுங் காலநிலைக்களனாகக் குறித்தபொருடோன்று தலா னென்றுணர்க. இணையுந் துறையு மிதுவுமது. பொழு தொடுமென்னு மும்மையாற் சினைநிலைக்களனாகத்தோன்றும் ஒட்டு முள. அதற்குச் செய்யுள் வருமாறு:-

எம்பெருமா னின்னருள்சே ரின்புலவீர் வான்பொருட்குச்
செம்பொனுள தீவிற் செலவுற்றாற்—பம்புதிரைச்
சங்கந் தவழ்கடலைத் தாம்பொடுபாய் கூம்பின்றி
வங்கங் கடந்துறுமோ மற்று.

என்பது புலவீர்காள்! பெரும்பொருட்குப் பொன்விளைதீவிற் செல்ல நினைந்தாற் கப்பல் கயிற்றாற் கட்டப்பட்ட பாயோடுங்

கூடிய பாய்மரமின்றி யத்தீவிற் றலைப்படாதென்றவாறு. இது வெளிப்படையாற் கூறியபொருள். அதுபோலப் பொன்மயமான பரமபதத்திற் செல்லக் குறித்தவர்கள் மனமே வாக்குக் காயங்களா னினைத்துந் துதித்துந் தாமஞ்சாத்துவதுமுதலான சரியையின்றி யாண்டுந் தலைப்படாரென்பதாம். இது குறித்த பொருள். கடல்-பிறப்பாயகடல். வங்கம்-ஆன்மா. தாம்புங் கூம்பும் பாயும்-மனம் வாக்குக் காயம். திணை-இதுவுமது. துறை-வாயுறைவாழ்த்து.

தாந்த னுறையுளெனுந் தண்பொருநை யின்வடபால்
வாய்ந்த கிரணமுழு மாணிக்க—மேந்திழாய்
ஞான முணர்ந்துணர்ந்து நன்முத் தியைவிளைக்குந்
தானவனே மீதேவனே தான்.

இதனுள், தாந்தனுறையுளெனுந்தண்பொருநையின்வடபால்-செம்பொன்மாடத்திருக்குருகூர். கிரணமுழுமாணிக்கம்-காரிமாறப்பிரான். இது அடைவிபரீதப்பட்டுப் பொருள்வேறுபட்டது; என்னை? "ஞானமுணர்ந்" தென்பது முதலாயின நான்கும் மாணிக்கத்திற் கில்லையாதலி னடைவிபரீதமாயிற்று. இது முதலதுபோலப் பொருணிலைக்களனாகத் தோன்றின ஒட்டு. திணை-இதுவுமது. துறை-செந்துறைப்பாடாண்பாட்டு.

தென்னம் பொதியந் தருபொருநைத் தென்கரையின்
மன்னும் புளிக்கீழ் வளர்தருவொன்—றின்னமிர்தொத்
தான்றசுவைத் தீங்கனியோ ராயிரமுந் தண்ணளிகூர்ந்
தீன்றளித்த தனபா லெமக்கு.

இதனுள், மன்னும்புளியென்பது திருப்புளியாழ்வார். திருப்புளிக்கீழ் வளர் தருவாவது காரிமாறப்பிரான். இன்னமிர்தொத்தான்றசுவைத் தீங்கனியோராயிரமென்பது திருவாய்மொழியாயிரப்பாடல். இதுவும் பொருணிலைக்களனாகத் தோன்றின ஒட்டு; அல்லது சாதிநிலைக்களனாகத் தோன்றிற்றெனினு

மாம். இவை யிரண்டிற்கும் ஒழிந்த அகல முறையிற்கொள்க. தருவுங் கடவுளாதலிற் றுறை-கடவுள் வாழ்த்துமாம். இதுவு முன்னதுபோற் செந்துறைப்பாடாண்பாட்டு. அஃதே லிதன் முன்னர்க் கூறிய வுள்ளுறையுவமத்திேைடும் ஒட்டென்னு மித னிடை வேற்றுமை யாதோவெனின், அஃதே! நன்று சொன் ஞய்! உள்ளுறையுவமமென்பது அகத்திணைக்கைக்கோளிரண் டிற்குமேயுரித்தாய் அகத்திணையைந்தினும் அவ்வவ நிலங்களிற் றெய்வதமொழிந்த கருப்பொருள்களாகப் பிறக்குமெனவும், அவ்வுள்ளுறையுவமங் கூறுவார், தலைவன் றலைவி செவிலி தோழி பாங்கன் பாணன் ஆக அறுவரெனவும், உள்ளுறையுவமங் கூறு தற்குரியரல்லாதார், நற்ருய், தந்தை, தன்ஞயத்தார், ஐயன்மா ராக நால்வரெனவும், அங்ஙனங் கூறுதற்குரியோர் கூறு மிடத்து மருதம் நெய்தலென்னு மீரிடத்தும் மிகுந்தும், குறிஞ் சிக்க ணவ்வளவின்றியும், ஒழிந்த நில மிரண்டினு மதனிற் குறைந்தும் வருமெனவும், அங்ஙனங் கூறுமிடத்தும் வெளிப் படக்கூறுமுவமையிடத் துவமேயங் கேட்போர் மனத்தின்கண் ணும் புலவன் குறித்தவாறே நிகழ்த்துதலின் உள்ளுறை யுவம மெனவும், மேற்கூறப்படுங் கருப்பொருள்களாகப் பிறக்கு மிறைச்சிப்பொருளோடுங் கூடாதனவாயும் வருமெனவுணர்க. இஃதன்னதன்ருய்க் கருப்பொருளிற் பிறக்க வேண்டுமென் னும் யாப்புறவின்றிப் புறப்புறத்தினுஞ் சென்று செய்யுட்செய் யும் புலவன் முதலாயினேர் கூறுங்கூற்ருய்ச் சுட்டென்னும் உள்ளுறையவாய் நடத்தல் வேற்றுமையென்றுணர்க. அங்ஙன மாதல் "பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ், சால மிகுத்துப் பெயின்" "நுனிக்கொம்பரேறினாரஃ திறந்தூக்கி, னுயிர்க்கிறுதி யாகிவிடும்" எனவும், "நெடும்புனலுள்வெல்லு முதலையடும் புனலி, னீங்கினதனைப்பிற", "கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு, நாவாயு மோடா நிலத்து", "காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா, வேலாண் முகத்த களிறு" எனவும் திருவள்ளு வர் கூறிய வலியறிதல் இடனறிதல் என்னு மிரண்டினுள்ளும்

பிற நூல்களினுங் கண்டுகொள்க. தண்டியாசிரியர் ஒட்டென்னு மலங்காரத்தினுள் அடையும் பொருளு மயல்படமொழிவதாக "வெறிகொளினச்சுரும்பு மேய்ந்ததோர்காவி" யென்றதில் உள்ளுறையுவமமும், அடைவிபரீதப்படப் பொருள் வேறுபடக் "கடைகொலுலகியற்கை" யென்பதிற் கருப்பொருள்களனுகாது ஒட்டுங் கூறினுரெனினும், இந்நாலுடையார், "உடனுறையுவமஞ்சுட்டுநகை சிறப்பெனக், கெடலருமரபினுள்ளுறை யைந்தே" என உள்ளுறையை யைந்தாய்ப் பிரித்தமையான் உள்ளுறையுவமம் ஒட்டு இறைச்சியென மூன்ருக்கினுர். இங்ஙன மாராய்ந்து பிரித்தவிவர் நோக்கமுந் தெள்ளிதி ைராய்ந்துகொள்க.

ரு-வது ஒட்டலங்காரம் முற்றும்.

சா-வது உல்லேகவலங்காரம்

---

41 ஒருபொருட் குவமச் சொற்ருகக் கவர்த்த
பொருவமர் பொருள்பல புணர்ப்பதுல் லேகம்.

(எ-ன்) வைத்தமுறையானே உல்லகமென்னுமலங்காரமுணர்-று.

(இ-ள்) புலவனுற்குறிக்கப்பட்டதோ ருவமேயப் பொருட்குவமவுருபுதொகப் பலவேறுவகைத்தாய்க்கவர்த்த வினைபயமெய்யுருவென்னு மேதுக்களா னுெத்த வுவமானப்பொருள்களை யதற்குக் கூறுவ துல்லேகமென்னும் அலங்காரமா மென்றவாறு.

42. அதுவே,

யொருவர் பலர்குறிப் புரைப்பது மொன்றும்.

(எ-ன்) இதுவு மதற்கோர் புறனடையுணர்-ற்று.

(இ-ள்) அச்சொல்லப்பட்டவுல்லேகம் ஒருவர் தன்மையிற் கூறப்படுவதோடும், அவர் பிறராயுள்ளார்பலர் குறிப்புரையை யும் பெய்துரைப்பதும் பொருந்துமென்றவாறு. உம்மை, யெச்சமாதலால் வினைவினும் வருமென்றுணர்க.

என்னு ருயிரென் னிருகண் மணியென் னிதயத் துள்ளாய்
மன்னு ரயிர்த மென்மெய்க் கணியாரம் வகுளப் பிரான்
முன்னு னென்னையடி மைக்கொண்டே பேரருண் மூர்த்தி மண்மே
னன்னு வலர்தம் பிரானுயர் வானவர் நற்றுணையே.

இது ஒருவர் பலகவர்ப்பாயுரைத்தது. இருகண் - அகக் கண்ணும் புறக்கண்ணும். இடம்-தன்மை. துறை-கடவுள் வாழ்த்து.

முத்திக்கு வித்தென்பர் முத்திபெற்றூர் முத்தியைவிளைக்கும்
பத்திக்கு வித்தென்பர் பத்தியுற்றூர் பனுவற் றொகைதேர்
புத்திக்கு வித்தென்பர் முத்தமிழ் வாய்மைப்புலவர் மண்மே
லெத்திக்கும் போற்றுந் திருமகிழ் மாலை யிறைவனை -ய.

இது பலர் பலகவர்ப்பாய்க் கூறுவரெனப் பெய்துரைத்தது. முத்தமிழ்-சித்தசித்தீச்சுரத்தைக் கூறுந்தமிழ், அது திருவாய்மொழி; எழுத்துஞ் சொல்லும் பொருளுந் தேரும் வாய்மையுமாம். வாய்மை—உண்மை. துறை-இதுவுமது.

அருள தென்கோ நல்லறம தென்கோ கற்றறிந் தவர்மெய்ப்
பொருள தென்கோ சிற்குணம தென்கோ தொண்டர் புந்தியுள்ளாந்
தெருள தென்கோ பிறதெய்வ மென்றே திரிதின்றசெய்கை
மருள தென்பா லனுகா தென்னை யான்மகிழ் மாறனையே

இது தன்றெழிலுரைக்கும்வினைவின்கண்வந்தது. என்கோ என்பது யான் என்றுகூறுகோ என்னும்பொருட்டு. அருள்-

கருணை.நல்லறம்-துறவறம். மெய்ப்பொருள்-ஸ்ரீமந் நாராயணன். சிற்குணம்-சுத்தசாத்துவிககுணம். புந்தியுள்ளாந்தெருள்-பரமஞானம். மருள்-அறியாமை. அது என்பாலணுகாமை-அம்மருளென்னிடத்துச் சிறிது முறாமை. என்னையாண் மகிழ்மாறன்-என்னையாட்கொண்ட மகிழ்மாறனென்றவாறு. இதனுள் தன்றொழிலுரைக்கும் வினைவின்கண் ணீற்றின்னேகாரமுன்னர் வருமொழி முதற்கண்ணதாங் கசதபக்கண் மிகா தியல்பாயின. என்னை? "மாறுகொளெச்சமும்வினவுமையமுங், கூறிய வல்லெழுத்தியற்கையாகும்" என்பதனாலறிக. திணை-பாடாண். துறை-பழிச்சினர்ப்பரவல்

சா-வது உல்லேகம் முற்றும்.

எ-வது ஒப்புமைக்கூட்டம்.

---

43. தக்கதோர் பொருளினைச் சாற்றுழி யதுபோன்
மிக்கபல் பொருள்களை யுடன்விளம் புதரு
ளொப்புமைக் கூட்ட மெனவுரைத் தனரே.

(எ-ன்) வைத்தமுறையானே யொப்புமைக் கூட்டமென்னு மலங்கார முணர்-ற்று.

(இ-ள்) முக்கியமானதோர் பொருளினைப் புலவன் கருதிச் செய்யுளகத்துக் கூறுங்கா லதுபோன்ற மிக்க பலபொருளையு மதனுடன் பொருளொப்புமையுடைத்தாய்க் கூட்டமுறச் சொல்லுத லொப்புமைக் கூட்டமென மேனாட் கற்றுவல்லோருரைத்தனரென்றவாறு.

44. உயர்புகழ் பழியவற் றொடுமுறு மதுவே.

(எ-ன்) இதுவும் அவ்வலங்காரத்தின் பாகுபாடுணர்-ற்று.

(இ-ள்) அவ் வொப்புமைக் கூட்டமென்னுமது உயர்ந்த புகழொடு முயர்ந்த பழியோடும் பொருந்திவரு மென்றவாறு. உயர்வு முதனிலைத் திவகம். ஏகார மீற்றசை.

வையம் பரவு மகிழ்மாறன் வண்டமிழுஞ்
செய்ய சதுர்மறையுந் தேசிகராய்—மெய்யுணர்ந்தோர்
பேரறிவும் பேருலகுண் டானே பிரமமெனப்
பாரறிந்த தாரறிதற் பாற்று.

இதனுள், மகிழ்மாறன் வண்டமிழென்றது — திருவாய்மொழி. தேசிகர் - ஆசாரியன்மார். பேருலகுண்டான் - சீமந் நாராயணன். பாரறிந்தது - பெரியோர்களறிந்தது. அவை யல்லவெனி லென்பதனைச் சொல்லெச்சமாக்கிக் கூட்டிப் பிரம மென்ப தாரறிதற்பாற்று என்பது ஒருவரும் அறியும் பகுதி யுடைத்தன்றென்பதாம். திணை - வாகை. துறை - சால்பு முல்லை- அல்லது திணை - பொதுவியல். துறை - பனுவல் வாழ்த்துமாம். இது புகழொப்புமைக் கூட்டம்.

என்றும் பிறர்மனையா ளின்ப நயவாரு
நன்றி மறவா நலத்தாரு மொன்றினைக்கொன்
றான்பரிந் துண்ணு வுரவோரும் பூமகள்கோன்
வான்புரந்து நீடுவாழ் வார்.

இதுவும் புகழொப்புமைக் கூட்டம். இதனுள், நீடுவாழ் வார் என்றது அழிவின்றி வாழ்வாரென்றவாறு. ஒழிந்த அகல முறையிற்கொள்க. திணையுந் துறையு மிதுவுமது.

வேரி மலர்மகள்கோன் மேவுந் திருமேனி
பாரி லுலோகமெனும் பாவிகளு—மாரியனை
மாந்தரிலொன் றென்பாரும் வன்றெண்டர் சென்மநிலை
யாய்ந்துரைப்பா ருந்நரகத் தார்.

இது பழியொப்புமைக் கூட்டம். திணை - பாடாண். துறை - வாயுறை வாழ்த்து

பொல்லா வழுக்காறு பூண்குநரு மாலடியார்க்
கில்லாப் பழியொன் றிடுகுநரு—நல்லாற்றிற்
செல்குநரை மீஞ்றுநருட் சேயிழையா யெய்துவன
நல்குரவு தீவாய் நரகு.

இதுவுமது. நல்குரவு - வறுமை. தீவாய்நரகு - அக்கினி நரகம் எனவே இம்மைக்கு வறுமையும் மறுமைக்கு நரகு மென்பதாம். ஈரிடத்து மும்மை தொக்கன. திணையுந் துறையு மிதுவுமது

மைந்தர் முரல்வாய் முத்தமுண் ணுதவாய் வாயோ
மைந்தர் சொற்கொளாச் செவியுமோர் செவிகொலோ மழலை
மைந்தர் சிறடிச் சுவடுறா மார்புமோர் மார்போ
மைந்தர் காட்சிகண் டின்புறாக் கண்கள்கண் மலரோ.

இதுவுமது. திணை - வாகை துறை - பொருளொடு புணர்தல். அன்றித் திணை - பொதுவியல். துறை - மகப் பெறுதழுங்கல்.

எ-வது ஒப்புமைக் கூட்டம் முற்றும்.

அ-வது வேற்றுமையலங்காரம்

---

45. ஒப்புடை யிருபொரு ளுரையினுங் குறிப்பினு
மெய்ப்பட வேற்றுமைப் படுத்துதல் வேற்றுமை.

(எ-ன்) வைத்தமுறையானே வேற்றுமையென்னு மலங் காரமுணர் - ற்று.

(இ-ள்) உலகத்தொப்புடையனவாயிருக்கு மிரண்டு பொருளைவைத்தவற்றைக் கூற்றினாலாதல் குறிப்பினாலாதல் பொருள்பெறத் தம்முள் வேற்றுமைபடக்கூறுவது வேற்றுமை யென்னும் அலங்காரமாமென்றவாறு.

46 அதுவே,

ஒருபொரு ளிருபொருள் சமமுயர்ச் சியதெனும்
பொருள்பெறு மரபிற் புலப்படு மென்ப.

(எ-ன்) இதுவும் அவ்வலங்காரத்தினது பொருட்கூறு பாடுணர்—ற்று.

(இ-ள்) அவ்வேற்றுமையென்னுமலங்காரமாகிய வது, ஒரு பொருளான் வேற்றுமை செய்தலும், இருபொருளான் வேற்றுமை செய்தலும் அங்ஙனம் வேற்றுமை செய்யுங்கா லொன்றினுக்கொன்று சமமாந் தன்மையும் உயர்ந்துளதன் மையு முடைத்தெனப் பொருள்படு மிலக்கணத்தோடுந் தோன் றுமென்று கூறுவர் பெரியோரென்றவாறு.

இவற்றிற்கெல்லாஞ் செய்யுள் வருமாறு:—

உண்ணத் தெவிட்டா துடலுமுயி ருந்தளிர்ப்பத்
தண்ணென் றினிமை தருமமிர்தம்—பெண்ணமிர்தின்
செவ்வா யமிர்தனைய தென்றாலுஞ் செவ்வியினி
லொவ்வா ததுபழுமைத் தொன்று.

என்பது, உண்ணுநிற்ப வுண்டோ ருடலு முயிருந் தழைக்கும் படி குளிர்ந்து தெவிட்டா தினிமையைக் கொடுக்குந் தேவர் பானமாகிய அமிர்தமொத்த திப் பெண்ணாகிய வமிர்தின் செவ் வாயிடத்துண்டாகிய பானமாகிய அமிர்தமென்றே ஞானும் காலத்தினுற் பார்க்குமிடத்துப் பழமையுடைத் தஃ திஃ தப்படி யன்று; புதிதுபுதிதாந் தன்மையை யுடைத்தாகையாற் காலச் செவ்வியா லொவ்வாதென்றவாறு.

இதனுள், பெண்ணாகிய அமிர்தின் செவ்வாயிடத் துண்டா கிய பானமாகிய அமிர்தமென உருவகவாய்பாடுகள் மாட்டேறு பெற்றும் மாட்டேறுபெறாதும் வந்ததுங் காண்க. இஃதொரு பொருள். பகுதி - இயற்கை. துறை - நலம்புனைந்துரைத்தல்.

வண்ணவாய் மைச்சுடர்கண் மன்னு னனத்துலவு
கண்ணதா யம்பரமாய்க் கண்டவற்று—னொண்மை
வெளியொன்று வேங்கடத்துண் மெய்ப்பொருளாய் நின்ற
வொளியொன் றெனும்பே ருலகு.

இதனுள் அழகினோடுங் கூடிய வுண்மைச்சுடர்கள்-சந்திரனும் ஆதித்தனுமாம். ஆகாயமுந் திருவேங்கடமுடையானும் ஒப்புடைப்பொருள். ஆகாயத்தின்மேற்சொல்லுங்காற் சுடர்கள் பொருந்திய மகிழ்ச்சியோடுஞ் சுற்றிவரு மிடமுடைத்தாய்ச் சலத்தைத்தரிக்கப்பட்டதாயெனவும். திருவேங்கடமுடையான் மேற்சொல்லுங்காற் சுடர்கணிலைபெற்ற திருமுகமண்டலத்துட் பிறழுந் திருக்கணகளாகவுடைய அழகிய பரத்துவமாமெனவும் கொள்க; இஃ திருபொருள். ஒருபொருள், இருபொருள் இவை யிரண்டும் சமம். கூற்று துறை-கடவுள்வாழ்த்து.

மாறன் றமிழ்மறைக்கு வாய்ந்தமறை முப்பொருளுங்
கூறுந் திறத்தாற் குறிப்பொக்குந்—தேறத்
துயவரவே கூறுமிது சோதியை யுட்கொள்ள
மயர்வறவே கூறு மறை.

என்ப துயர்ச்சி. துயவு-அறிவு திரிதல். இதுவும் கூற்று. திணை பாடாண்சார்ந்தபொதுவியல். துறை-பனுவல்வாழ்த்து.

வெய்ய நகைத்த செவ்வாய வெண்ணகைய
தையல் வதனமிறை தண்காவுட்—பொய்கைதான்
வண்கழுநீர் சேதாம்பல் வால்வளைக டாமுயிர்த்த
தண்டரள நீணிரைய தாம்.

உயிர்த்த-பெற்ற. இது சமம். குறிப்பு. பகுதி-இடந்தலை. துறை தடங்கண்டுமகிழ்தல்.

மாதரார் வெய்யமுலை மாணிக்க முத்துவட
மீதுலா வுந்தகைத்தார் வேரிமகிழ்—சோதி
துடரிவரை தேனருவி தாநீ ரருவி
படரியல நல்காதின பம்

வெய்யமுலை-விருப்பத்தைத்தருமுலை. வேரிமகிழ்ச்சோதி-காரிமாறப்பிரான். இன்பநல்காதென்பதனால் இதுவுங் குறிப்பு. உயர்ச்சி. பகுதி-இதுவுமது. துறை-நலம்பாராட்டல்.

47. அதுவே,
பொருளா தியவா நான்கொடும் புணரும்.

(எ-ன்) இதுவும் அவ்வேற்றுமையலங்காரத்தின் விதப் புணர்-ற்று.

(இ-ள்) அது-அவ்வேற்றுமையலங்கார மென்னு மது பொருள் குணஞ்சாதி தொழி லென்னும் நான்கினோடும் பொருந்திவரு மென்றவாறு.

அலையுட் படியு மரும்புனலை வாங்கி
யுலவி னுலகுய்ய வோங்கு—மலைமேற்
களிக்கும் புயல்வேங் கடவனைப்போன் முத்தி
யளிக்குந் திறனறியா தாம்.

இதனுள், அலையுட்படிதல்-திருப்பாற்கடலுட் கண்வளர்தலும் புனலையுண்ணக் கடலுட்டாழ்தலுமாம். அரும்புனலை வாங்கி யுலவி னுலகுய்யவோங்குதல் பெறுதற்கரியபுனலை மாவலிபால்வாங்கி யுலகத்துள்ளார் பிழைக்கவிச்சுவரூபங்கோடலும், கடலிற் புனலைவாங்கி யுண்டுலகு பிழைக்க விசும்பின்மே லிமிர்தலும். இது பொருள்வேற்றுமை. துறை - கடவுள் வாழ்த்து.

செம்பவள முந்திருமால் சேறைமான் செவ்வாயின்
விம்பவள முங்குணத்தால் வேறன்றே—யம்பவளம்
வல்லென் றிருக்குமலர் மாதர்வா யெஞ்ஞான்று
மெல்லென் றினிமை மிகும்.

இது குணவேற்றுமை. செவ்வாயின் விம்பவளம்-வடிவின் செல்வம். ஒழிந்த அகல முரையிற்கொள்க. துறை-நலம்புனைந் துரைத்தல்.

மந்திரத்தால் வாகடஞ்சொன் மாமருந்தாற் றீராது
புந்தியிடங் கொண்டுபுறம் போகாவாஞ்—சந்தமு
மைவளைவேற் கண்மடவீர் மாறன் றழுவாத
பெய்வளைபாற் காமப் பிணி.

இது சாதிவேற்றுமை. திணை - பெண்பாற்கைக்கிளை. துறை-கண்டுகைசோர்தல்.

மாறுங் கொலைநமற்கு மாறன் மணிவரைமேற்
றேறு மயில்விழிக்குஞ் சேர்வினைதான்—வேறன்றே
நின்றொறுக்குங் கூற்றுயிரை நேரிழைகண் மன்னுயிரைக்
கொன்றளிக்கு மீட்டுங் குழைந்து.

இதனுள் தேறும் என்பது (மானிடமகளெனத்)தெளியும் எனவும், மயில் விழிக்கென்பது மயில்போற்சாயலையுடையாள் விழிக்கெனவுங் கொள்க. இது தொழில்வேற்றுமை. கொன்றளிக்கை-நோய்செய்யும் நோக்கும், அதற்கு மருந்தாகிய நோக்கும். நோய்செய்யும் நோக்கு-இன்பத்தினை காமக்குறிப்பினை வெளிப்படுத்துகின்ற நோக்கு. மருந்தாய நோக்கு-தன்கணிகழ்கின்ற அற்புநோக்கு. பகுதி-இயற்கை. துறை-குறிப்பறிதல்.

நான்கொடும்புணருமென்ற தெச்சவும்மையாதலாற் பிறவலங்காரங்களோடுங் கூடியும் வருவனவுள. அவை வருமாறு:-

ஊர்தியன மம்போ ருகமா சனஞான
நீதி வழுவா நெறிபடைத்தும்—வேதநெறி
யோதிப் பொறியிழந்தா னெண்குரவ னெங்கோமா
னாதித் திருமகிழ்மா றன்

இது, சிலேடை வேற்றுமை. பொறியிழத்தல்-பிரமன் றலையிழத்தல். எங்கோமானாகிய மாறன் பொறியென்னும் பெயரையுடைய பெரிய பிராட்டியருளையெய்தினவ னென்றமையாற் சிலேடையால் வேற்றுமையாயிற்று. திணை-பாடாண். துறை-பழிச்சினர்ப்பரவல்.

ஓவாத செம்மை யுதயத் துளதெனினுந்
தாவா மறுப்படைத்த தன்மையான்—மூவா
முதனமது கண்ணனெனு முத்திரைக்கைம் மாறன்
வதனமது நேரா மதி.

இது விலக்கு வேற்றுமை. இணையுந் துறையுமது. இன்னும் வேறுபடவருவனவும் வந்தவழிக் கண்டுகொள்க.

அ-வது வேற்றுமை முற்றும்.

கூ-வது திட்டாந்த வலங்காரம்

---

48 ஒருபொருட் டிறமுதற் குறித்தொப் புமைகொளத்
தெருள்புரி பிறபொருட் டிறமுஞ் செவ்விதி
னவ்விய லகத்தறை வதுதிட் டாந்தம்.

(எ-ன்) வைத்தமுறையானே திட்டாந்தமென்னு மலங்காரமுணர்-ற்று.

(இ-ள்) யாதாயினு மொருபொருட் கெய்திய நன்மை தீமைக் கூறுபாட்டைப் புலவனுட்கொண்டதனைத் தன்னாற் கூறப்படுஞ் செய்யு ளகத்து முதலேகூறி, யதன்பின்ன ரதனோ டொப்புமைகொள்ளும்படிக்குத் தெளிவைத்தரு மற்றொரு பொருளின் கூறுபாடும் அச்செய்யுளகத் தழகுபெறக் கூறுவது திட்டாந்தமென்னு மலங்காரமா மென்றவாறு. எனவே, உவ்ணுறையுவமம்போல வுவமப்பொருள் செய்யுளகத்து வெளிப்படையாக நிற்ப வேனை யுவமேயப் பொருள்க ளெஞ்சிநிற்பக் குறிப்பினாற் கொள்ளப்படுவதன்றென்பதாயிற்று.

பூரணன் மலர்மகள் புணர்மணி மார்ப
னாரணன் மதிநல னயந்தனன் புரப்ப

முத்திரைக் கராம்புய முதல்வனு வீற
னுத்தமச் சுருதியை யோதா துணர்ந்துணர்ந்
துரனுடை யவற்று ளுமுபநிட தத்தால்
வரனுடைத் தாக வடித்தவண் டமிழ்மறைப்
பாடம் போற்றிநாப் பவித்திரம் படைத்தோ
ராடக மருமணிக் கிரணமோ டளவளாம்
வீடடை வதுமெய் மெய்யே யாயினு
நாடரி தாகி நடைபெறுந் தொடர்புடைப்
பொதிந்தசொற் பொருணிலை புலப்படப் புந்தியுட்
பதிந்தறி யாரிரு பசையறுத் துண்மை
யுணர்ந்துட லுயிர்தளிர்ப் பதுறு ருறுமவர்
கணம்பய னிலவாங் காலங் கழியாத்
தேசிக ரைவரைத் தேர்ந்துநற் றுணைக்கொளும்
பூசுரன் றிருப்பெரும் பூதூர் முனிவன்
குருபரம் பரையுரைக் குறிப்பினைத் தமிழ்மொழிப்
பொருண்மலி நோக்கினைப் புணர்ந்துணர்ந் தொண்மை
யிருநிலத் தொருவடி வெடுத்தகாட் சியதாந்
திருமலை யாழ்வார் திருவருட் கிலக்கெனு
மறையவர் பிரான்மண வாளமா முனிவர
னிறைநிலை யுயிர்நிலை யிஃதிஃ தெய்து
முறைநெறி யிஃதென முழுவது முனிவறத்
துறைதொறுந் துறைதொறுஞ் சோர்வறத் தொடுத்தெடுத்
துணர்த்திய விசித்திரக் காண்டிகை யொழிவின்முற்
குணத்தொடும் பழகுப கூர்ந்துள் ளுறுத்தித்
தோய்ந்துவட் டாத தூயபே ரின்பம்
வாய்ந்தவர் தாமே புலவிர்காண் மன்ற
விமிழ்திரைப் பாற்கட லினிற்பல வளஞ்சா
ரமிழ்தினைப் பசும்பொற் றசும்பகத் தடக்கியும்
பரிசிப் பதனொடும் பரிமளிப் பதலா
லுருசித் தறியாது சிதமாம தன்சுவை
வானவர் சுவைக்கொளும் வாய்மை
நானிலத் தெவர்தெளி யாதவர் நயந்தே.

என்பது திட்டாந்தம்

(இ-ள்) சொரூபமும், ரூபமும், ஞானமும், குணமும், விபூதியும், கருணையு முதலாகியவற்றுள் யாதுமோர் குறைவில ஞம் நிறைவுள்ளான் பூமகள் விட்டு நீங்காத கவுத்துவமணி யோடுங் கூடிய மார்பனுஞ் சீமந்நாராயணன் ஞானத்தையும் பேரானந்தத்தையு மன்புற் றளித்தலான் ஞானமுத்திரைக் கைத்தாமரை நாவீறுடையபிரான் ஒரு நூல்களு மொப்பில் லாத நன்மையையுடைய சுருதியை நாவினுலோதாது பாடந் தரித்துஞ் சத்தவிற்பத்தியால்வரு மத்தங்களை யுட்கொண்டும் ஞான மிகுந்த அச் சுருதிகளுள்ளும் நுட்பமா முபநிடத வாக்கி யங்களாற் சேட்டமாகக் கோதற வடித்துரைத்த திருவாய் மொழியின் மூல முழுதும் பழுதற வோதித் தமது நாவிற்குச் சுத்தி யுண்டாக்கினோர் இவ்வுலகிற் பேதந்தரு மிரணியத்தளவு அருமணிக்கிரணத்தளவோடு மொரு தன்மைத்தாகக்கலக்கு மந்தாமத்தை அந்தியகாலத் தடைவ தோடும் சிறிது தமதுளத் தீண்டிருந் தானந்த மெய்துவதும் பிறராற் பூசனை யெய்துவதும்மெய்; மெய்யேயானுலும், அதன்க ணுராய்தற்கரியதாகி யொழுகும் பொருட்டொடர்புடைய மறைந்த சொல்லின் பொருள் சென்று முற்றுதல் வெளிப்படை போலப் புலப்பட்டுத் தமதுபுந்தியுட்டங்கியறியாதார் அயனர னென்னு மிருவராலெய்தும் பயனைவிட்டுச் சீமன் நாராய ணனே பரதத்துவமென்னும் வாய்மையுணர்ந்து தமது வாழ் நாளுளுடலுமுயிருந்தளிர்ப்பப் பேரானந்தமெய்துவ தறியார்; அறிபவர் யாரெனிற் கணப்பொழுது முயிர்க் கிலாபமின்மையா மவப்பொழுதுகழியாத பெரியநம்பிமுதலாம் ஆரியரைவரையும் ஆராய்ந்து முத்திக்குநற்றுணையென்ன வுறவுகொண்ட பூலோக தேவனுந் திருப்பெரும்பூதூர் முனிவன் குருபரம்பரைநோக்கத் தோடுமுதலேசொன்ன தமிழ்மொழிப்பொருளான்மிகுந்த நுட்ப நோக்கத்தினையு மொன்றெனப்புணர்த் துட்கொண்ட ஒள்ளிய ஞானம் பெரியநிலத்தொப்பற்ற மனுகுலவடிவெடுத்த காட்சிப் பொருளென்றுகூறத்தகுவதாய திருமலையாழ்வார் திருவுள்ளக்

கருணைக்கிலக்கென்னு மறையவர்க்கதிபதியாம் அழகியமணவாளமாமுனிவனென்னுஞ்சேட்டவா னிறைநிலைமையிஃ துயிர் நிலைமையிஃதிறையை யுயிர்சென்றெய்து மடைவாகிய வழியிஃதெனவு மவற்றோடு மேனையவிரண்டுமாகிய யாவையும் யாவரும் விரும்ப முதற்பத்துமுதலாய்ப் பத்தாம்பத் திறுதி யிடந்தோறு மிடந்தோறுஞ் சந்தயமறத் தொடுத்தெடுத்துபதேசித்த பேரழகுடைத்தா முறைநடையை யொழிவில்லாத சுத்த சாத்துவிககுணத்தோடும்பயின்று வரம்பறுத் துட்கொண் டமுத்தியனுபவித்துத் தெவிட்டாத விறில்பேரின்பம் பலித்துள்ளார்தாமே சந்தயமில்லை; அஃதெப்படியொன்றெனி லொலிக் குந்திரையையுடைய திருப்பாற்கடல்பெற்ற சங்கநிதி முதலிய செல்வத்தோடும் பொருந்தியதா மயிர்இனைப் பசும்பொன்னாலாய குடம், தனது வாய்க்கொண் டுள்ளடக்கியு முறுகொள்வதனோடும் பரிமளிப்பதல்லா லதற்கு யோக்கியமான மதுரத்தையுருசித்தறியாதென்பதூஉம், துறக்கத்தவரே யிரதிக்கும் பெருமையுடையோ ரென்பதூஉ முலகத்து ளன்புற்றுத் தெளியாதவரில்லையாதலா லப்படியொன்றெனக்கொள்க.

இதனுண் முதலே குறித்தபொருளாவது திருவாய்மொழியும் பத்தரும். அவை யப்படியே முதல்வந்து அதன்பின்னரதனோ டொப்புமைக் கொள்ளும்படிக்குத் தெளிவைத் தரும் படிக்குக் குறித்த அமிர்தமாம் பொருட்டிறமு மதன்பின்னரிச்செய்யுளகத்துக் கூறியதூஉங் காண்க. எனவே, போந்த பொருள் திருவாய்மொழிப் பாடம்போற்றுவதோடும் அதனகத்தைந்து பொருளையுங் குருபரம்பரையா யோரானவழியாய்வரும் வியாக்கியானங் கேட்பதே பேரின்பமெய்துதற் குறுதியென்பதாயிற்று. திணை-பாடாண். துறை-ஓம்படை.

ஆதித் திருமா லடியார் திரப்பிடும்பை
வாதிக் கினும்வளர்ப் பார்வண்மையே —பாதிப்
பிறையா கியுமதியம் பேரிருள்சீத் தற்குக்
குறையா குறையா குணம்.

இதுவுமது. கிரப்பு—வறுமை. வண்மை-கொடை. திணை-இதுவுமது. துறை - கொடுப்போர்ப்புகழ்ச்சல்.

ஈத்துவக்கு மின்ப மியைந்தார்க ளேற்பவர்க்குச்
சேய்த்திருந்து மீத்துவப்பர் திண்ணமே—வாய்த்தமுகில்
வானம் பதியாயு மானிலத்தார்க் கேயுதவுந்
தானந் தவறாது தான்.

இதுவுமது. இதனுள், மானிலத்தார்-மாயோனுலமைக்கப் பட்ட பூமியின்கணுள்ளார். இதுவுந் திணையுந் துறையுமது.

௯-வது திட்டாந்தம் முற்றும்.

௪0–வது தற்குணவலங்காரம்

---

49. ஒருபொருட் குணத்தைமற் றொருபொருள் சார்ந்துமிப்
பற்றுத றற்குண மெனப்பகர்ந் தனரே.

(எ-ன்) வைத்தமுறையானே தற்குணமென்னுமலங்கார முணர்-ற்று.

(இ-ள்) யாதாயினு மொரு முக்கியப் பொருளினது குணத்தைச் சார்ந்தவிடத் தக்குணத்தைப் பிறிதொருபொருள் பற்றுதல் தற்குணமென்னும் அலங்காரமா மென்றவாறு.

காமர் திருப்பாற் கடலுங் கருங்கடலா
நாமந் தனைப்பயிலு நாடோறும்—பூமடந்தை
சீர்மேனி யைத்தழுவுந் தேவசே னாகணையான்
கார்மேனி வண்ணங் கவர்ந்து.

கவர்ந்து-உட்கொண்டு.

சாந்த மலர்ப்பொதும்பர்ச் சார்ந்தவெளிற் றுத்தருவுஞ்
சாந்த மணநல்குஞ் சால்பிற்றே—யேங்கெதழில்கூர்
வாசவனார் நான்முகனார் வந்திறைஞ்சி வாழ்வுபெறுங்
கேசவனார் சேட கிரி.

இதுவுந் தற்குணம். சேடகிரி-திருமலை. ஒழிந்த அகல முறையிற் கொள்க. அஃதேல், குணவதிசயத்திற்குந் தற்குணத் திற்கும் வேற்றுமை யாதோவெனின், அதிசயஞ் சிறுமையை மிகுத்துக்கூறும்; இது மிகுந்ததை மிகுந்ததாய்க் கூறல். இவ் விரண்டினுண் முன்னையது கடவுள் வாழ்த்து. இது மலை வருணனை.

கo-வது தற்குணம் முற்றும்.

கக-வது பிரத்தியநீகவலங்காரம்

---

50 ஒருபொருட் கொருதிறத் துடைபொருண் மற்றதற்
கத்திறத் தினிலொப் புடைப்பொரு ளதன்மே
லமர்வினைப் பதுவே பிரத்திய நீகம்.

(எ-ன்) வைத்தமுறையானே பிரத்தியநீகமென்னு மலங் காரமுணர்-ற்று.

(இ-ள்) யாதாயினு மோருவமேயப் பொருட் கொருதிறத் தாற்றோற்ற வுவமைப் பொருளத்திறத்தா லதற்கொத்ததோ ருவமப் பொருண்மே லமர்வினைப்பதாகக் கூறுதல் பிரத்தியநீக மென்னு மலங்காரமா மென்றவாறு. அநீகம்-படை. இது தற்குறிப்பேற்றத்தைப் பின் சென்றதோர்பேதம்.

தேமலர்வா விப்புதுவைச் செல்விமுகப் பொற்பினுக்குத்
தாமதியந் தோற்றதற்பின் றோலாத—காமருசீ
ரந்தா மரைமே லமர்விளைக்குங் கங்குலின்கண்
வந்தாடல் பெற்ற மதி.

இது பிரத்தியநீகம். தேமலர்வாவிப்புதுவைச்செல்வி-சூடிக் கொடுத்தசெல்வி; ஆழ்வார்திருமகள். ஒழிந்த அகல முறை யிற்கொள்க. துறை-பெண்பாற் கடவுள்வாழ்த்து.

கக-வது பிரத்தியநீகம் முற்றும்.

கஉ-வது சந்தயவலங்காரம்

51 உற்றதோர் பொருளினை யையுற் றுணர்தல்
கற்றவர் சந்தய மெனக்கழ றினரே.

(எ-ன்) வைத்தமுறையானே சந்தயமென்னும் அலங்கார முணர்-ற்று.

(இ-ள்) புலனுகர்பொறிகளானுதல் கருத்தினானாத லுற்ற தோர் பொருளினை யையமுறுதலுந் தெளிதலுஞ் சந்தயமென் னும் அலங்காரமாமென்று கற்றோர் கூறின ரென்றவாறு.

52 அதுவே,

சுத்த சந்தய நிச்சய கெர்ப்ப
நிச்ச யாந்த மெனநிகழ் மூன்றும்.

(எ-ன்) இதுவு மதன் கூறுபாடுணர்—ற்று.

(இ-ள்) அச் சந்தயமென்னு மலங்காரம் சுத்தசந்தய மென்றும், நிச்சயகெர்ப்பமென்றும், நிச்சயாந்தமென்றும், மூன்று கூறாய் நடைபெறுமென்றவாறு

திருமகளோ பார்மகளோ தென்னரங்கன் வெற்பில்
வருமகளோ யாரோவிம் மாது.

இது சுத்தசந்தயம். பகுதி-இயற்கை. துறை-ஐயுறல். பா-குறள்வெண்பா.

மெய்த்தமிழ்மா றன்றுடரி வெற்பிலெதிர் நின்றதுபூங்
கொத்தமைந்த பொன்னங் கொடியோகொ—லித்தரணி
மீதா யுடுத்தொடுத்து மேயதகை மின்னுருவோ
யாதாய தொன்றோ விது.

இதுவுமது. இதனுள், பூங்கொத்தென்றது கோடு,கொடி, நீர் என்னும் பல்வகைப்பூக்களை. அமைந்தது-மிகுந்தது. இத் தரணி........ மின்னுருவோ-மேகத்தைவிட்டுப் புவியிடத்தாய் மேக படலத்தின் மேலாய வுடுக்கணத்தினைத் தனக்குறுப்பாங்

தொடர்படுத்திப் பொழிலிடத்தடைந்ததொரு மின்னுருவமோ. யாதாயதொன்றோவிது என்பது எவ்வுருவ மவ்வுருவாய தொன்றெனத் தெரிதற்கரிதென்றவாறு. பகுதி-இயற்கை. துறை-ஐயுறுதல்.

குன்றுபோற் புடைத்தெழுந்த தனத்தானைச் சிறைவைத்த
கொடுமை யானைத்
துன்றுபோர்க் களத்தெதிர்ந்து தொடுகணையான்
துயரம் பூட்டி [முரணழியத்
யின்றுபோய் நாளைவா வெனவிமையோர் கணம்பரவ
வெம்பி ரானே
யன்றுபோர்க் களத்துரைத்த தறநிலையோ மறநிலையோ
வறிகிலேனே.

இதுவுமது. திணை-பொதுவியல். துறை-வில்வென்றி. திணை-வாகையெனினுமாம்.

முண்டகத்தா னென்னின் முகமொன்றே நான்குமுகங்
கண்டனமற் றில்லையாற் கண்ணனெனிற்— றண்டுளபத்
தாமத்தா னன்றுமகிழ்த் தாமத்தானைத்துதித்தெந்
நாமத்தா னென்றுரைப்பே நாம்.

இது நிச்சயகெர்ப்பம். திணை-பெண்பாற்கூற்றுக்கைக் கிளை. துறை-நயப்புரைத்தல்.

பாடற் சுரும்பெனிலோ பண்மிழற்றுங் காவியெனி
லோடைக் குளன்றியுதி யாதா—லேடவிழ்தார்
வள்ள லருண்மாறன் மால்வரைமான் கண்ணேயென்
னுள்ளங் திறைகொண் டது.

இது நிச்சயாந்தம். பகுதி-இயற்கை. துறை-தெரிந்து தெளிதல்.

கஉ-வது சந்தயம் முற்றும்.

கங-வது அற்புதவலங்காரம்

---

53. அற்புத வாய்மையி னறைவதற் புதமே.

(எ-ன்) வைத்தமுறையானே அற்புதமென்னுமலங்கார முணர்-ற்று.

(இ-ள்) ஆச்சரியந்தோன்று முண்மையினுன்மொழிவ தற்புத மென்னுமலங்காரமா மென்றவாறு.

உண்ணீர்மை யற்றவர்க் கண்டா லவர்மன் னுயிர்க்கிரங்கிக்
கண்ணீர்பனிற் றும்புயன் மனுரா மன்மைக்
கொள்வதொன்றே
வெண்ணீர்மை யுற்ற நிருதரைச் சால வெறுத்தவர்மேற்
புண்ணீர் பனிற்றச் சரமாரி யன்று பொழிந்ததுவே.

இது, அற்புதம். திணை-பொதுவியல். துறை-வில்வென்றி.

சங்கத் தமிழ்ச்சொற் கவிப்புலவீர் சலராசி மண்மே
லுங்கட்கு மற்புத மாவதொன்றே சிங்கவோங் கலின்வாய்த்
துங்கப் படைக்கை யிரணிய னுகஞ் சுகிர்ந்தநர
சிங்கத்தின் மார்பின் மலர்மக ளாம்பிணை சேர்ந்ததுவே.

இஃது துருவகவாய்பாட்டால்வந்த அற்புதம். சிங்கவோங்கல்-சிங்கவேள்குன்றமென்னுந் திருப்பதி. மலர்மகளாம்பிணை-பெரியபிராட்டி. சிங்கம்-அழகியசிங்கர். சிங்கத்தின் மார்பிற் பிணைசேர்ந்தவென்பதனாலற்புதமாயிற்று. துறை - கடவுள் வாழ்த்து.

கரு-வது அற்புதம் முற்றும்.

கச-வது நிதரிசனவலங்காரம்

---

54 இவ்வகைக் குலகத் திவைநிகழ் திறமெனு
மவ்வகைக் கவைபோன் றுருபொருட் டிறங்களைக்
கோடபில் குணந்தீங் கெனுமிரு குறிப்பிற்
காட்டு மென்றே கழறுதனி தரிசனம்.

(எ-ன்) வைத்த முறையானே நிதரிசனமென்னு மலங்கார முணர்—ற்று.

(இ-) உலகத் திவ்வகைப் பொருட் கிவை நிகழுங்கூறுபா டென்னுமக் கூறுபாட்டிற் கவைபோன்ற பிறபொருட்கூறு

பாட்டை மாறுபாடின்றி நன்மையினுந் தீமையினு மிருதிறத் தாற் குறித்துக் காணக் காட்டுகின்றதெனக் கூறுவது நிதரி சனமென்னு மலங்காரமா மென்றவாறு.

வாழ்ந்தார் வரவரவே வறிதாவர் வறுமையொடுந்
தாழ்ந்தார் தலைச்செய்வ ரென்பதுகாட்டுந் தரியலரைப்
போழ்ந்தார் திகிரிப்பிரான் புருடோத்தமப் பொன்னகரைச்
சூழ்ந்தாய் மதிகுறைவாய் நிறைவாம்வகை தூநகையே.

இது நிதரிசனம். இது பரத்தையிற் பிரிந்துவந்த தலை மகன் வாயில் வேண்ட வூடியிருந்து வாயின்மறுத்த தலைமக ளோடும் வாயினேர்விக்குந் தோழி கூறியது. அன்றித் திணை - பாடாண். துறை - வள்ளிவாழ்த்தெனினு மாம்.

இதனுள் 'வாழ்ந்தார்வரவரவே வறிதாவர் வறுமை யொடுந், தாழ்ந்தார் தலைச்செய்வரென்பதுகாட்டு' மென்பது உலகத்து நல்வினையடிக்கொள வாழ்வெய்தினர் நல்வினை தேய்ந்து தீவினையடிக்கொள வறுமையெய்துவர்; தீவினையடிக் கொளத் தாழ்வெய்தினர் தீவினைதேய்ந்து நல்வினையடிக்கொளச் செல்வமெய்தித் தலைப்படுவ ரென்பதைக் காண்பிக்கு மென்ப தாம். தரியலரைப் போழ்ந்தார் திகிரிப்பிரானென்பது சத்து ருக்களுடலைப் பிளந் துயிரைப்பருகுஞ் சக்கரத்தையுடையா ரென்பதாம். ஆய்மதி-இயங்குமதி. குறைவாய்-இளம்பிறை யாய். நிறைவாம்-பூரணையாம்.

அஃதேல், திட்டாந்தத்தோ டிதனிடைவேற்றுமையாதோ வெனின், திட்டாந்தம் புலவன் றன்னுற் குறித்த வொரு பொருட்கூறுபாட்டிற்குப் பிறிதொரு பொருளின்கூறுபாட்டை யதற் குவமை குறிக்கொளும்படிக் குவமைவாய்பாடு தோன் றுதுதாகத் தன்வினையாக அப்புலவன் கூறுதல்; இஃ தன்ன தன்று. ஒரு பொருளின் பண்பு தொழில் பயன் முதலிய கூறு பாட்டைப் பிறிதொரு பொருள் காட்டுவதாகப்படுத்திப் பிற வினையாற் கூறுதல். இவை தம்முள் வேற்றுமையாமென் றுணர்க.

கச-வது நிதரிசனம் முற்றும்.

கடு-வது தற்குறிப்பேற்றவலங்காரம்

55 உலகினு ளொருபொருட் குற்றதன் மைத்திறம்
விலக்குபு பிறிதின் விளைந்ததென் றுட்கொண்
டேற்றுத லாகுந் தற்குறிப் பேற்றம்.

(எ-ன்) தற்குறிப்பேற்றமென்னும் அலங்காரமுணர்-ற்று.

(இ-ள்) உலகின்கணுண்டான விருதிணைப் பொருள்களுள் யாதாயினு மொருபொருட் கெய்திய தன்மைக்கூறு பாட்டை விலக்கிப் பிறிதொரு காரணத்தால் விளைந்ததெனப் புலவன் விதித் துட்கொண் டதனை யதன்கண்ணதாக வேற்றுவது தற்குறிப்பேற்றமென்னு மலங்காரமா மென்றவாறு

56 அதுவே,
சராசர மெனுமிரண் டினுஞ்சார் தருமே.

(எ ன்) இதுவும் அவ்வலங்காரத்தினது கூறுபா டுணர்-ற்று.

(இ-ள்) அத் தற்குறிப்பேற்றமென்னு மலங்காரம இயங்குதிணையும் நிலைத்திணையுமாகிய விரண்டினுஞ் சார்ந்து பிறக்கு மென்றவாறு.

செங்கேழ் கிளர்வே ணியனு னுருவிற்
பைங்கே ழுமையா ளொருபா கமெனச்
சங்கேத மடைந்த திவன்சமரிற்
கிங்கே றுவனென் றெதிரெண் ணியதே.

இது, உயர்திணையிடத்துத் தற்குறிப்பேற்றம். செங்கேழ்-சிவப்பாகிய நிறம் கிளர்வேணி-ஓங்கியசடை. பைங்கேழுமை-பச்சென்ற பொற்புடைய வுமாதேவி. எதிரெண்ணியது - வருங்காலங்குறிக்கொண்டது. திணை - வாகை. துறை - பொருநன்வென்றி.

பில புகுந்திரேழ் புவனமுந் தரித்த பெருந்தகை
யெம்பிரான் றனைவெண்
சலஞ்சலஞ்திகிரி யெனப்புரப் பவர்கள் சந்த்ரசூ ரியரெனச்
சயிலம்
வலம்பயின் றனரந் தரத்தவர் வருந்தா வகைதரித்
திடமெனத் தரிப்பா
னிலம்புகுந் துயர்பூஞ் சினையொடுந் தருவாய் நிலைமரீஇ
யினதென லாமே.

இது நிலைத்திணைத் தற்குறிப்பேற்றம். இது பாடாண் புறத்திணையுட் சார்ந்த தாவர வாழ்த்து. (இவை குருகாமான் மியம்).

தற்பயந்து முற்றத் தனைவளர்த்த தண்டடநீ
ரெற்பயந்த வெப்புற் றிடையாதே—பொற்கமல
மின்பா சடைக்கவிகை மீநிழற்று நீரசமே
யென்பா லுறைமாற் கிடம்.

இதுவும் நிலைத்திணைத்தற்குறிப்பேற்றம். நிழற்றும் - நிழலிடும். திணை - பாடாண். துறை - நகரவாழ்த்து.

57. உவமச் சொற்புணர்ந் தொழுகலு முளதே.

(எ-ன்) இன்னு மதற்கோர் புறனடையுணர்—ற்று.

(இ-ள்) அத் தற்குறிப்பேற்றம் போல மான வென்னு முவமவுருபு உணர்ந்து நடப்பனவு முளதாமென்றவாறு.

மாயன் குருகூர் வளர்மறையோர் விண்புரப்பான்
றூய வழல்வளர்ப்பத் தோன்றுபுகை—நேய
வகைத்தோட்டு வார்குழலாய் வாசவனை விண்போய்ப்
புகைத்தோட்டு கின்றதுபோன்ம் போன்ம்.

என்பது ஈரொற்றுடனிலையாய ஒப்பில்போலி. இது உவம வுருபுபுணர்ந்ததற் குறிப்பேற்றம். துறை - நகரவாழ்த்து.

கரு--வது தற்குறிப்பேற்றம் முற்றும்.

ரூ. 2—75